KAMBARAMAYANAM

ARANYA KANDAM

(ABRIDGED)

கம்பராமாயணச் சுருக்கம்

ஆரணிய காண்டம்

APPROVED BY THE TEXT-BOOK COMMITTEE

(*Vide Gazette Part I-B, dated, 19th May 1925, page 203*)

MADRAS:

C. COOMARASAWMY NAIDU & SONS

1926

Copyright]

[Price 12 As.

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்

(சுருக்கம்)

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

சென்னை :

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

1926

ரெஜிஸ்டர் செய்தது] [விலை 12 அணா

PRINTED AT
THE "CAXTON PRESS"
MADRAS

குறிப்பு

'கல்வியிற் பெரியன் கம்பன்,' 'கம்பர் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்', 'கம்பநாடன் கவிதையிற் போல் கற்றோர்க்கிதயம் களியாதே' என்று பலவாறு ஆன்றோர்களால் புகழ்ந்து கூறப்பட்ட மகாகவியாகிய கம்பநாடர், இராமாயணத்தை வடமொழியினின்றும் மொழிபெயர்த்து, காலத்திற் கேற்றவாறு சிற்சில மாற்றங்கள் செய்து தமிழ்க்கவியிற் பாடியருளினர். கற்பக விருக்ஷம் தன்னைச் சேர்ந்தவர்கள் விரும்பிய எல்லாவற்றையும் அளிக்குமாறேபோல், தமிழறிஞர்கள் விரும்பும் கல்விப்பொருள் அனைத்தையும் ஒருங்கே கொடுத்தற்குக் கொள்கலமாய் விளங்குவது கம்பர் பாடிய இராமாயணம். சென்னைச் சர்வகலா சங்கத்தார் (Madras University) நெடுநாளாய் அவ்விராமாயணத்தில் ஒவ்வொரு பகுதியை பி. ஏ., எம். ஏ, வகுப்புக்களில் வாசிக்கும் மாணவர்கட்குப் பாடமாக அமைத்து வந்தனர். அதனாலே, அவ் வகுப்புக்களில் வாசிக்கும் மாணவர் கம்பர் கவிநயங்களைச் சிறிது அறிந்து கொண்டனர். சமீப காலத்தில் சிற்சில ஆண்டுகளாக 'ஸ்கூல் பைனல்' வகுப்பில் வாசிக்கும் சிறுவர்களும் கம்பரின் கவிநயத்தைச் சிறிது உண்டு சுவைப்பாராயினர்.

2. கம்ப ராமாயணத்தை முற்றும் கற்றுணர விரும்பும் தமிழ் மாணவர்களும், 'ஸ்கூல் பைனல்'

பரீக்ஷைக்கு எனப் பயிலும் 4, 5, 6 ஆம் பாரங்களில் வாசிக்கும் சிறுவர்களும் கம்பருடைய கவிநயங்களை ஒருவாறு உணர்ந்துகொள்ளும்வண்ணம் ஒவ்வொரு காண்டத்தையும் சுருக்கமாகத் தொகுத்து, கதைப் போக்கு விளங்குமாறு உரையிடையிட்டு வெளியிட வேண்டும் என்னும் நோக்கத்துடன், இரண்டு மூன்று வருடங்கட்குமுன் பாலகாண்டமும், அயோத்தியா காண்டமும் வெளியிட்டேன். மூன்றும் காண்டமாகிய ஆரணிய காண்டம் இப்போது வெளி வந்திருக்கின்றது. இப் புத்தகத்தைப் பாடசாலைத் தலைமை உபாத்தியாயர்கள் 4, 5, 6 ஆம் பாரங்கட்குப் பாடமாக அமைப்பின் மாணவர்கள் தமிழ்மொழியில் அபிவிருத்தி யடைவார்கள் என்பது திண்ணம், ஏனைய காண்டங்களும் இவ்வாறே விரைவில் வெளிவரும்.

3. மாணவர்கள் தாமே இந் நூலைப் படித்து உணரவேண்டும் என்னும் நோக்கத்துடன் குறிப்புரையும் பின்னால் சேர்க்கப்பட் டிருக்கின்றது.

பதிப்பாசிரியன்.

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்

(சுருக்கம்)

பூமகள் கொழுநனும், புருடோத்தமனும், திருமகள் நாயகனும், உலகமுண்ட பெருவாயனும், கடல்நிற வண்ணனும் ஆகிய திருநெடுமால் திருவிளையாட்டாக எடுத்த அவதாரங்கள் பத்தனுள் இராமாவதாரம் ஒன்று. அவ் வவதாரத்தில் அத் திரு நெடுமால் கோசல நாட்டின் கண்ணதாகிய திருவயோத்தியில் சக்கரவர்த்தித் திருமகனாய் அவதரித்து, தான் அணிந்திருந்த சங்கமும், சக்கரமும், பள்ளிகொண் டமர்ந்த பாயலும் தன் இளையவர்களாய் வந்து அடி பரவும்படி அமர்ந்திருந்தனன். அவ்வாறமர்ந்த சீராமன், இலக்குவன், பரதன், சத்துருக்கனன் என்னும் நால்வரில் இராமனும் இலக்குவனும் நெய்குழலூறும் இழையேபோல இணைபிரியாமற் றிரிவாராயினர்; பரதனும் இளவலும் ஒரு நொடிப் போதும் பிரியாமல் மருவி வாழ்வாராயினர். இவ்வாறு வளர்ந்து வரும் நாளில் ஒருநாள், தவச் சிரேட்டராகிய கோசிகமுனிவர் அயோத்தியை யடைந்து, தாம் தருவனத்துள்

இயற்றும் தவவேள்விக்கு இடையூறு புரியும் நிருதர்-
களை விலக்குதற்குக் கரிய செம்மலாகிய சீராமனைத்
தருதி என்று உயிர் ஈர்க்கும் கொடுங்கூற்றெனத் தயர-
தனை வேண்டினர். அதுகேட்ட மன்னர் மன்னன்,
'கண்ணிலான் பெற்றிழந்தான்' எனக் கடுந்துயர்
உழந்து, முனிபுங்கவனை நோக்கி, 'தவச்சிரேட்டரே,
பணி இதுவாயின், சீராமன் சிறுவன், நிருதர் பெரியர்,
அவர் செய்யும் இடையூற்றுக்கு இடையூறாகப் பெரு
வேள்வியை யானே காப்பேன்; எழுந்தருள்க' என்று
விடையிறுத்த அளவில், கோசிகமுனிவர்க்கு அள-
விலாக் கோபம் உண்டாயிற்று. விசுவாமித்திர முனி-
வர்க்கு உண்டாகிய கோபத்தைக் கண்ட வசிட்ட-
முனிவர், கோசிக முனிக்குச் சமாதானம் கூறிக் கரிய
செம்மலைக் கோசிகமுனிவருடன் அனுப்புமாறு தயர-
தனுக்கு நன்மொழி கூறினர். குருவின் வாசகங்
கேட்ட கொற்றவன், 'திருவின் கேள்வனைக் கொணர்-
மின்' என்றலும், அறிவின் உம்பரான் அருகு சார்ந்-
தனன். அவ்வாறு சார்ந்த நம்பியைத் தயரதன்
தம்பி தன்னொடும் முந்தை நான் மறைமுனிக்குக்
காட்டி, 'எந்தையே, இவர்க்கு நற்றந்தை நீ, தனித்-
தாயும் நீ, இவர்களைக் கையடையாகத் தந்தனன்-
இயைந்த செய்க' என்றனன். நவைக்கண் நீங்கினன்
அவ்விரு மைந்தரையும் அழைத்துக்கொண்டு, சிந்தை
யில் முந்து எடுத்த சீற்றத்தை விடுத்துத் தயரதனை
இனிது வாழ்த்தி, மேல் அடுத்த வேள்விபோய் முடித்-
தும் நாமெனு நடத்தன்மேயினன். முனிவர் பெரு-
மானது வேள்வியை முற்றுவிக்கச் செல்லும் இராம
லக்குமணர்கட்குத் தாடகை என்னும் அரக்கி வழியில்
எதிர்ப்பட்டனள். சீராமன் முனிவர் கட்டளையை

மேற்கொண்டு தாடகையை வதைத்து மேலேசென்று, அம்முனிவர் பெருமானது வேள்வியை முற்றுவித்தனன். பின்னர், சனகன் செய்யும் வேள்வியைக் காண எழுந்த முனிபுங்கவர், இராமன் இலக்குவன் ஆகிய இருவருடன் மிதிலையைநோக்கிச் செல்லுகையில், சீராமன், வழியில் கருங்கல்லாய்க் கிடந்த அகலிகை சாபத்தை நீக்கி, அவள் பண்டைய வண்ணத்தளாம்படி செய்தனன். மூவரும் பின்பு மிதிலையை எய்தி, சனகன் வேள்வியைக் கண்டு, சால் மகிழ்வெய்தினர். பின்னர்ச் சீராமன் வில்லிறுத்துச் சீதையை மணம் புரிந்து தந்தையுடன் அயோத்திக்கு மீளுங்கால், எதிர்ப்பட்ட பரசுராமனது வில்லை இறுத்து, அயோத்திக்கு மீண்டமையும் பிறவும் பாலகாண்டத்தாற் பெறும்

அயோத்திக்கு மீண்ட தயரதன் தன் அருமந்த புதல்வனுய ஊகுத்தற்கு முடிபுனைந்து அரசபாரத்தை அவன் பியல்மிசைச் சுமத்தித் தான் அந்தமில் இன்பத்து அழிவில் வீடாம் நிரதிசய இன்பத்தைப் பெறுவான் விரும்பினன். நிரதிசய இன்பத்தை அடைவான் எண்ணிய மன்னர்மன்னன், தன் எண்ணத்தை அமைச்சர் முதலியோர்க்கு அறிவித்துத் தன் குல குருவாம் வசிட்ட முனிவரனை, சீராமற்கு முடி சூட்டற்கு வேண்டிய சகல காரியங்களைச் செய்வான் வேண்டினன். கணிதர்களும் முடிபுனை கடிகைநாள் தெரிந்து அறிவுறுத்தினர். நாளையே இராமன் முடி சூடுகின்றான் என்னும் சுப சேதியைக் கேட்ட கூனியாகிய மந்தரை, கைகேசிபால் ஓடிச்சென்று அவட்குத் துர்ப்புத்தி பல புகட்டி, அவள் அரசன்பால், சீதை கேள்வன் பதினான்கு யாண்டு காடாள-

வும், பரதன் நாடாளவும் ஆகிய இவ் விரண்டு வரங்களையும் பெற்றுக்கொள்வான் தூண்டினள். மந்தரையின் துர்ப்போதனையால் மதி மயங்கிய கைகேசியும் தயரதனை அவ்விரண்டு வரங்களையும் தனக்கு அளிக்க வேண்டினள். தயரதன் தன் மனையாட்கு அவள் விரும்பியவண்ணம் அவ்விரண்டு வரங்களையும் கொடுத்துத் தான் துயர்க் கடலில் ஆழ்ந்தனன். சிராமன், சீதை இலக்குவன் ஆகிய இருவருடன் கானேகினன். தன் இன்னுயிரன்ன புதல்வன கானேகினன் என்பதைச் செவியிலேற்ற தயரதன் உயிர் துறந்து விண்ணுலகேகினன். அரசற்குச் செயற்பால சரமகிரியைகளைச் செய்யப் புதல்வர் எவரும் அயோத்தியில் இலராயினமையின், வசிட்ட முனிவரர், மன்னவன் உடலத்தைச் சிதை வுறுவண்ணம் தைலத்தில் மாட்டி, பிதாமகன் வீட்டிற்குச் சென்ற பரத சத்துருக்கனரை அழைத்துவரும்படி தூதுவரை ஏவினர்.

இஃது இவ்வாறாகக் கானேகிய காகுத்தன் கங்கையை அடைந்து அதில் சானகியுடன் நீராடி, அங்குள்ள முனிவர்பால் சிலநாள் நல்விருந்தாய் அமர்ந்து, பிறகு குகன் என்னும் வேட்டுவத் தலைவனுடன் நட்புக்கொண்டு, அவன் துணையால் கங்கையைக் கடந்து, பாரத்துவாஜ முனிவரரை வணங்கி, யமுனையாற்றைக் கடந்து, சித்திரகூட பர்வதத்தைச் சார்ந்து, இலக்குவன் சமைத்த பன்னசாலையில் தேவரும் கைதொழ வீற்றிருந்தனன்.

இஃது இங்ஙனமாகத் தன் பிதாமகன் வீட்டினின்றும் அயோத்திக்கு மீண்ட பரதன், தன் அன்னை

பின் கொடுமையால் தன் தந்தை விண்ணேகியதையும் தன் திருத்தமையன் மைதிலியுடன் கானேகியதையும் உணர்ந்து பெருந்துயர்க் கடலில் ஆழ்ந்தனன். கோசலை முதலியோர் ஆற்றச் சிறிது துயரம் நீங்கித் தன் தந்தைக்குச் செயற்பால சரமகிரியைகளைத் தன் இளவலாகிய சத்துருக்கனனால் முற்றுவித்தனன்; பின் அரசிலா நாடாகிய அயோத்தியை ஆளும்படி தன் திருத்தமையனும் ஸ்ரீராமமூர்த்தியை அழைத்து வரும்படி தன் தாய்மார் மூவருடனும், அமைச்சர் முதலியோருடனும் சித்திரகூட பர்வதத்தை நோக்கிப் புறப்பட்டனன். காட்டில் தன் தமையன் நண்பனாகிய குகப்பெருமானைச் சந்தித்து நட்புக் கொண்டாடி, அவன் உதவியால் கங்கை யாற்றைக் கடந்து சித்திர கூட பர்வதத்தை யடைந்து, தமையனை வணங்கி,* அவனணிந்திருந்த பாதுகைகளைப் பெற்று அயோத்திக்கு மீண்டமையும், பிறவும் அயோத்தியா காண்டத்தாற் பெற்றும்.

* பாதுகைகளைப் பெற்றுக்கொண்டு பரதன் அயோத்திக்கு மீண்ட பிறகு, சித்திரகூடத்தி லிருந்த இரகுநாயகன், நகரமாந்தரும் தம்பிய ரிருவரும் தாய் மாரும் நம்பால் வைத்திருக்கும் அன்பால் இங்கே நம்மை அடிக்கடி வந்து வருத்துவார்க ளாதலின், ஈண்டு இருப்பது சரியன்றென்று நினைத்து,

முத்தி ருத்தியவ் விருந்தனைய மொய்ந்ந கையொடும்
சித்தி ரக்குனிசி லைக்குமரர் சென்ற னுகினர்
அத்தி ரிப்பெய ரருந்தவ னிருந்த வமைதி
பத்தி ரப்பழு மரப்பொழி லுவன்றி பழுவம். (1)

திக்கு றுஞ்செறி பரந்தெரிய நின்ற திரள்பொற்
கைக்கு றுங்கண்மலை போல்குமரர் காம முதலாம்
முக்கு றும்பற வெறிந்தவினை வான்மு னிவனைப்
புக்கி றைஞ்சின ரருந்தவனு வந்து புகலும். (2)

குமரர் நீரிவண டைந்துதவு கொள்கை யெளிதோ
அமரர் யாவரொடு மெவ்வுலகும் வந்த வளவே
எமரின் யார்தவ முயன்றவர்க ளென்று ருகினன்
தமரெ லாம்வர வுகந்தனைய தான முனிவன். (3)

அன்ன மாமுனியொ டன்றவ னுறைந்த வனரும்
பன்னி கற்பினந கூயையபணி யால ணிகலன்
மலலிகை
துன்னு தூசினொடு சந்தியை சுமந்த சனகன்
பொன்னொ டேகியுயர் தண்டகவ னம்பு குதலும்,(4)

ஸ்ரீராமன் முதலிய மூவரும் தண்டக வனத்தை நாடி வருகையில் விராதன் என்னும் அரக்கன் ஒருவன் எதிர்ப்பட்டனன். அவன் பதினாறு யானைகளும், முப்பத்திரண்டு சிங்கங்களும், பதினாறு யாளிகளுமாகப் பிணைத்துப் போட்டிருக்கும் கையிலே சூலம் பிடித்துக்கொண் டிருந்தனன். இதுவேயன்றி, மேகங்கள் சுற்றிக் கிடந்த செம்பட்ட மயிரை யுடைய முடியும், நஞ்சே ஒருருவங் கொண்டு நடந்தது என்று சொல்லத் தன்நடையால் மலைகளை எல்லாம் பஞ்சு பட்ட பாடு படும்படி செய்யும் பாதமும் உடையவனா யிருந்தனன். அதுவேயுமன்றி,

பூத மத்தனையு மோர்வடிவு கொண்டு புதிதென்
றோத வொத்த வுருவத்த னுருமொத்த குரலன்,
காத லித்துய னளித்தகடை யிட்ட கணிதப்
பாத லக்கமத வெற்பிடை படைத்த வலியான். (5)

சார வந்தயல் விலங்கினன் மரங்க டறையில்
பேர வன்கிரி பிளந்துக வளர்ந்தி கல்பெரு
வீர வெஞ்சிலையி னேரெதிர் விராத னெனுமக்
கோர வெங்கணுரு மேறனை கொடுந்தொ ழிலினன்.(6)

நில்லு நில்லுமென வந்துநிண முண்ட நெடுவெண்
பல்லும் வல்லெயிறு மின்னுபகு வாய்மு ழைதிறந்
தல்லி புல்லுமல ரன்னமனை யாளை யொருகைச்
சொல்லு மெல்லையின் முகந்துயர் விசும்பு தொடர,(7)

வீர னுஞ்சிறிது வெண்முறுவல் வெண்ணி லவுகப்
போர திந்தில னிவன்றனது பொற்பு முரணும்
தீரு மெஞ்சியென நெஞ்சினுறு சிந்தை தெரியாப்
பார வெஞ்சிலையி ஞாணொலி படைத்த பொழுதே.(8)

வஞ்ச கக்கொடிய பூசைநெடு வாயின் மறுகும்
பஞ்ச ரக்கிளியெ னக்கதறு பாவை யைவிடா
நெஞ்சு ளுக்கின னெனச்சிறிது நின்று நினையா
அஞ்ச னக்கிரிய னனெதி ரரக்க னழலா. (9)

விராதன் கோபித்துச் சீராமபிரான்மீது தன் கையிலிருந்த வடவா முகாக்கினி போன்ற சூலப் படையை விட்டெறிந்தான். அது திசைகளையும், தேவர்களையும் திசை யானைகளையும் எல்லா உலகங்களையும் கலக்கி ஆலவிடமெனக் கோபித்து மின்னிக் கொண்டு வந்தது. அதைக்கண்ட இரகுநாயகன் மேரு மலையே முதலாகிய பெரிய மலைகளினும் வலியுள்ள ஒரு பாணத்தை எடுத்து அபிமந்திரித்து விட்டான். அப்பாணம் இன்றோடே இவ்வரக்கர் குலம் நாசமான

தென்று சொல்லும்படி பகற்போதில் வெள்ளிடையாகிய ஆகாயத்தினின்றும் வான்மீன் விழுவதுபோல அரக்கன் விட்ட சூலப்படையை இரண்டு துண்டங்களாக ஒடித்து வீழ்த்தியது. அவ்வாறு ஒடிந்த துண்டங்களும் திசையின் புறத்தே போய் விழுந்தன. தான் விட்ட சூலப்படை இற்று விழுந்ததைக் கண்ட விராதன் போருக்குப் பின்னிடையாமல், தன் நீண்ட கரங்களால் பருவதங்களை யெல்லாம் வேரோடும் பிடுங்கிச் சீராமபிரான்மீது வீசினான். அரக்கன் எறிந்த மலைகள் வட்டமிட்டுக்கொண்டு சீராமபிரானைச் சூழ்ந்துவர, அவை பிளவுபட்டு மீண்டு அரக்கன், மீதே போய் விழும்படி இரகுநாயகன் அம்புகளை வீசினான். தான் ஏவியமலை தன்மீது வந்து தாக்கித் தன் உடலை ஊறு செய்வதைக் கண்ட விராதன்,

ஓம ராமரை யொருங்குழுணர் வோரு ணர்வுறும்
நாம ராமவரை நல்லற நிறுத்த நணுகித்
தாம ராவணை துறந்துதரை நின்ற வரையோர்
மாம ராமர மிறுத்ததுகொ டெற்ற வரலும், (10)

ஏறு சேவக னிரண்டினொ டிரண்டு கணையால்
வேறு வேறுதுணி செய்தது விழுந்து விசையால்
மாறு மாறுகிமிர் தோளிடையு மார்பி னிடையும்
ஆறு மாறுமயில் வெங்கணை யழுத்த வவனும், (11)

மொய்த்த முட்டன துடற்றலை தொளைப்ப மூடிக்
கைத்த லத்தினிமி ரக்கடிது கன்றி விசிறும்
மெய்த்த மெய்ப்பெரிய கேழலென வெங்கும் விசையின்
தைத்த வக்கணை தெறிப்பமெய் சிலிர்த்து திறவே, ()

எரியின் வார்கணை யிராமன்விட, வெங்கு ழிலையா
தருவி யோடமற மோடுதல்செ யாவு ணர்வினன்
அருவி பாயும்வரை போல்குருதி யாறு பெருகிச்
சொரிய வேகவலி கெட்டுணர்வு சோர்வு றுதலும், ()

மெய்வ ரத்தினின் மிடற்புடை விடப்ப டுகிலன்,
செய்யு மற்றுமிக வென்றுசின வாளு ருவிவன்
கய்து ணித்துமென முந்துகடு கிப்ப டர்புயத்
தெய்வின் மற்பொருவு தோளிருவ ரேற லிருதன். ()

இராம லக்ஷ்மணர்கள் இருவரும் அரக்கனாகிய விராதனைக் கொல்லும்படி அவன் தோளின்மீது ஏறுதலும், அவனுக்கு முன்னைய உணர்வு வந்து கூடிற்று. பழைய உணர்வு கூடலும் விராதன் உடனே அவர்களைத் தன் தோளில் ஏற்றிக்கொண்டு தன் இயற்கை விசையினும் பதின்மடங்கு அதிகமாய்ச் சாரிகைதிரிய,

முந்து வான்முக டுறக்கடிது முட்டி முடுகிச்
சிந்து சோரியொடு சாரிகைதி ரிந்த னனரோ
வந்து மேருவினை நாடொறும்வ லஞ்செய் துழல்வோர்
இந்து சூரியரை யொத்தி ருவரும்பொ லியவே. (15)

சுவண வண்ணனொடு கண்ணனுறை தோளன், விசைதோய்
அவண விண்ணிடை நிமிர்ந்துபடர் கின்ற வனறம்
சிவண தன்னசிறை முன்னவரொ டேகு செல்வத்
துவண னென்னுநெடு மன்னவனு மொத்த னனரோ.

மாத யாவுடைய தன்கணவன் வஞ்சன் வினையில்
போத லோடுமல மந்தனள், புலர்ந்து பொடியில
கோதை யோடுமொசி கொம்பென விழுந்த னள்குலச்
சீதை சேவல்பிடி யுண்டசிறை யன்ன மனையாள். (17)

தடங்கருணைப் பெருங்கடலாகிய சீராமபிரானும், இளையவனும் விராதன் வசப்பட் டிருப்பதைக் கண்டு

மனங் கலங்கும் சீதாபிராட்டியார், வேறொரு துணையுமின்றி மின்போன்ற இடை நுடங்க விரைந்து தொடர்ந்து, அரக்கனை நோக்கி 'தாய்போன்ற அன்பினை யுடையவர்களாகிய அறவோர் இருவரையும் விடுத்து என்னை உண்டு பசிப்பிணியை அகற்றிக் கொள்' என்று புலம்பி யழுதார். சானகியார் படும் கண்கலக்கங் கண்ட இளையபெருமாள், இரகுநாயகனைத் துதித்து நின்று, 'தேவி வருந்தத் தாம் திருவிளையாடல் செய்வது அழகோ' என்று பகர்ந்து, 'இவன் வெகுதூரம் நம்மிருவரையுந் தூக்கிச் செல்லச் சிந்தித்திருக்கிறான். இவனைக் கொல்வது உமக்கு ஒரு பொருளன்று' என்று விநயமாகச் சொல்லிய வளவில், இரகுநாயகன் சிரித்துத் திருவடியால் அவனை உதைக்க, விராதன் பூமியில் வீழ்ந்தான். இராமலட்சுமணர் இருவரும் அவன் தோளிரண்டையும் வாள்கொண்டு வெட்டிப் பூமியில் வீழ்த்தித் தாமும் நிலத்திற் குதித்தனர். சீராமன் அரக்கனைப் பூமியில் கொலை செய்துவிட்டுப் பள்ளத்திற் புதைப்பது நலம் என்ன, அவ்வாறே இலக்குவன் நிலத்திற் பெருங்குழி ஒன்று சமைத்தனன்.

மதநல் யானையனை யானிலம் வகிர்ந்த குழிவாய்
நதமு லாவுநளி நீர்வயி னழுந்த நவைதீர்
அதவ மாய்நறுநெ யுண்டுலகி லன்பர் கருதிற்
றுதவு சேவடியி னுலமல னுந்து தலுமே, (18)

பட்ட தன்மையு முணர்ந்துபடர் சாப மிடமுன்
கட்ட வன்பிறவி தந்தகடை யான வுடலுன்
விட்டு, விண்ணிடை விளங்கினன் விரிஞ்ச னெனவோர்
முட்டை தந்ததனில் வந்தமுதன் முன்ன வனினே.()

பொறியி னொன்றியயல் சென்றுதிரி புந்தி யுணரான்,
நெறியி னொன்றிநிலை நின்றநினை வுண்ட தனினும்
பிறிவி லன்புதனி பண்டுடைய பெற்றி தனினும்
அறிவு வந்துதவ நம்பனை யறிந்து பகர்வான். (20)

வேறு

வேதங்க ளறைகின்ற வுலகெங்கும் விரிந்தனவுன்
பாதங்க ளிவையென்னிற் படிவங்க ளெப்படியோ
ஓதங்கொள் கடலன்றி யொன்றினோ டொன்றொவ்வாப்
பூதங்க டொறுமுறைந்தா லவையுன்னைப் பொறுக்குமோ

கடுத்தகராங் கதுவநிமிர்
கையெடுத்து மெய்கலங்கி
உடுத்ததிசை யனைத்தினுஞ்சென்
றொலிகொள்ள வுறுதுயரால்
அடுத்தபெருந் தனிமூலத்
தரும்பரமே பரமேயென்
றொடுத்தொருவா ரணமழைப்ப
நீயோவன் றேனன்றாய் (22)

புறங்காண வகங்காணப்
பொதுமுகத்தி னருணோக்கம்
இறங்காத தாமரைக்க
ணெம்பெருமா னியம்புதியால்
அறங்காத்தற் குனக்கொருவ
ராருமொரு துணையின்றிக்
கறங்காகு மனத்திரிய
நீயேயோ கடவாய்தான். (23)

துறப்பதே தொழிலாகத்
    தோன்றினோர் தோன்றியக்கால்
மறப்பரோ தம்மையுது
    வன்றாகின் மற்றவர்போல்
பிறப்பரோ வெவர்க்குந்தாம்
    பெற்றபதம் பெறலரிதோ
இறப்பதே பிறப்பதே
    யெனும்விளையாட் டினிதுகத்தோய். ()

பணிநின்ற பெரும்பிறவிக்
    கடல்கடக்கும் படிபற்றி
நணிநின்ற சமயத்தோ
    ரெல்லாரு நன்றென்னத்
தணிநின்ற தத்துவத்தின்
    றனைமூர்த்தி நீயாகின்
இனிநின்ற முதற்றேவ
    ரென்கொண்டென் செய்வாரே. (25)

ஓயாத மலரயனே முதலாக வுளராகி
மாயாத வானவர்க்கு மற்றொழிந்த மன்னுயிர்க்கும்
நீயாகின் முதற்றாதை நெறிமுறையா லீன்றெடுத்த
தாயாவார் யாவரே தருமத்தின் றனிமூர்த்தி. (26)

நீயாதி பரம்பரமு நின்னவே யுலகங்கள்
ஆயாத சமயமுநின் னடியவே யயலில்லை
தீயாரி னொளித்தியால் வெளிநின்றாற் றீங்குண்டோ
வீயாத பெருமாயை விளையாட்டும் வேண்டுமோ. ()

தாய்தன்னை யறியாத கன்றில்லை தன்கன்றை
ஆயு மறியும் முலகின்று யாகினைய
நீயறிதி யெப்பொருளு மவையுன்னை நிலையறியா
மாயையிது வென்கொலோ வாராதே வரவல்லாய். ()

பன்னலா மென்றுலகம்
பலபலவு நினையுமால்
உன்னலாற் பெருந்தெய்வ
முயர்ந்துளோ ரொழுக்கன்றே
அன்னவூர் திணைமுதலா
மந்தணர்மாட் டருந்தெய்வம்
நின்னலா தில்லாமை
நெறிநின்றார் நினையாரோ. (29)

பொருவரிய சமயங்கள்
புகல்கின்ற புத்தேளிர்
இருவினையு முடையார்போ
லருந்தவநின் றியற்றுவார்
திருவுறையு மணிமார்ப
நினக்கென்னை செயற்பால்
ஒருவினையு மில்லார்போ
லுறங்குதியா லுறங்காதாய். * (30)

அரவாகிச் சுமத்தியா
லயில்லெயிற்றி னேந்துதியால்
ஒருவாயின் விழுங்குதியா
லோரடியா லொளித்தியால்
திருவான நிலமகளை
யிஃதறிந்தாற் சீறுளோ
மருவாருந் துழாயலங்கன்
மணிமார்பின் வைகுவாள். (31)

மெய்யைத்தான் சிறிதுணர்ந்து
நீவித்த மன்னுயிர்கள்
உய்யத்தா னாகாதோ
வுனக்கென்ன குறையுண்டோ

வையத்தார் வானத்தார்
மழுவாளிக் கன்றளித்த
அய்யத்தாற் சிறிதையந்
தவிர்ந்தாரு முளரையா. (32)

அன்னமா யருமறைக
ளறைந்தாய்நீ யவையுன்னை
முன்னமா ரோதுவித்தா
ரெல்லாரு முடிந்தாரே
பின்னமா யொன்றாதல்
பிறிந்தேயோ பிறியாதோ
என்னமா மாயமிவை
யேனமாய் மண்ணிடந்தாய். (33)

ஒப்பிறையும் பெறலரிய
வொருவாமுன் னுவந்துறையும்
அப்புறையு பிறந்தடியே
னருந்தவத்தா லணுகுறலால்
இப்பிறவிக் கடல்கடந்தே
னினிப்பிறவே னிருவினையும்
துப்புறழு நீர்த்தசுடர்த்
திருவடியாற் றுடைத்தாய்நீ. (34)

இவ்வாறு பல பல விதமாகத் துதிக்கின்ற விராதனைப் பார்த்து, 'நீயார்? நீ இத்தகைய உருவம் அடைந்தது யாது காரணம் பற்றி?' என்று சீராமபிரான் வினவலும், விராதன், 'கள்ளமாய வாழ்வு எல்லாம் விள்ள ஞானம் வீசுதாள் வள்ளலே! என்பேர் தும்புரு, நான் அரம்பையின்மேல் விருப்பங் கொண்டமையால் குபேரன் என்னை அரக்கனாகும்படி

சபித்தனன். அப்போது பணிந்து கேட்டமையால், "ஸ்ரீராமனுடைய திருவடியால் சாபந் தீர்வாய்'' என்று அருள் செய்தனன்' என்று தன் வரலாற்றை எடுத்-துரைத்து.

வேறு

தெறுத்து வந்த தீதெலாம்
அறுத்த உன்னை யாதனேன்
ஒறுத்த தன்மை யூழியாய்
பொறுத்தி யென்று போயினான். (35)

இவ்வாறு தும்புருவாகிய விராதன் அகன்ற பின்பு, அவ்விடத்தினின்றும் இராம லக்ஷ்மணர்கள் ஸீதாபிராட்டியாரோடும் முனிவர்கள் வசிக்கும் ஆச்சிரமங்களை நாடி யடைந்து, அன்று பகலெல்லாம் அங்குத் தங்கினர். பிறகு,

குரவங் குவிகோங் கலர்கொம் பினொடும்
இரவங் கணுறும் பொழுதே கினரால்
சரவங் கனிருந் துதவங் கருதும்
மரவங் கிளர்கோங் கொளிர்வா சவனம். (36)

செவ்வே லவர்சென் றனர்சே றலும்
அவ்வே லையினெய் தினனு யிரமாம்
தவ்வா திரவும் பொலிதா மரையின்
வெவ்வே றவிர்கண் ணினன்வின் ணவர்கோன். ()

நின்று னெதிர்நின் றநெடுந் தவனும்
சென்று னெதிர்கொண் டுசிறப் பமையா
என்று னிவனெய் தியவா றெனலும்
பொன்று தபொலங் கழலோன் புகலும். (38)

எந்தா யுலகியா வையுமெவ் வுயிரும்
தந்தா னுறையுந் நெறிதந் தனனால்
நந்தா தபெருந் தவநா டனுநீ
வந்தா யெனினின் னெதிரே வருவான். (39)

எல்லா வுலகிற் குமுயர்ந் தமையான்
சொல்லா வகைநீ யுணர்தோன் மையையால்
நல்லா யுடனே நடநீ யெனலும்
அல்லே னெனவா லறிவா னறைவான். (40)

சொற்பொங் குபெரும் புகழோய் தொழின்மாய்
சிற்பங் களின்வீ வனசேர் குவனே
அற்பங் கருதே னெனருந் தவமோ
கற்பம் பலசென் றதுகா ணுதியால். (41)

சொற்றுந் தரமன் றிதுசூழ் கழலாய்
பெற்றும் பெறுகில் லதொர்பெற் றியதே
மற்றென் பலசொல் லிவண்வந் ததவம்
முற்றும் பகரு னுமுடித் தனனால். (42)

சிறுகா லையிலா நிலையோ திரியா
குறுகா நெடுகா குணம்வே றுபடா
உறுகால் கிளர்பூ தமெலா முகினும்
மறுகா நெறியெய் துவென்வா னுடையாய். (43)

என்றின் னவிளம் பிடுமெல் லையின்வாய்
வன்றின் சிலைவீ ரரும்வந் தணுகா
ஒன்றுங் கிளரோ கையினு ணர்வார்
நின்றென் னைகொலின் னதென நினைவார். (44)

கொம்பொத் தனநா லொளிர்கோள் வயிரக்
கம்பக் கரிநின் றதுகண் டனமால்
இம்பர்த் தலைமா தவர்பா லிவனும்
உம்பர்க் கரசெய் தினனென் றுணரா. (45)

மானே யனையா ளொடுமைந் தனையும்
பூநேர் பொழிலின் புறமே நிறுவா
ஆனே றெனவா ளரியே றிதெனத்
தானே யவ்வகன் பொழில்சா ருதலும். (46)

கண்டா மவையா யிரமுங் கதுவக்
கண்டா மரைபோல் கருணா யிறெனக்
கண்டா னிமையோ ரிறைகா சினியின்
கண்டா னருநான் மறையின் கனியை. (47)

காணா மனநொந் துகவன் றனனால்
ஆணா தனையந் தணர்நா யகனை
நாணா ளும்வணங் கியநன் முடியால்
தூணா கியதோள் கொடவற் றொழுவான். (48)

வேறு

துவசமார் தொல்லமருட் டென்னுரைச் செற்றுஞ்
சுருதிப் பெருங்கடலின் சொற்பொருள்கற் பித்தும்
திவசமா நல்லறத்தின் செந்நெறியி னுய்த்துந்
திருவளித்தும் வீடளித்துஞ் சிங்காமைத் தங்கள்
கவசமா யாருயிராய்த் தவமாய்க் கண்ணாய்க்
கடையிலா ஞானமாய்க் காப்பானைக் காணா
அவசமாய்ச் சிந்தையழிந் தயலே நின்று
னறியாதான் போல வறிந்தவெலாஞ் சொல்வான்.

தோய்ந்தும் பொருளனைத்துந் தோயாது நின்ற
சுடரே தொடக்கறுத்தோர் சுற்றமே பற்றி
நீந்த வரிய நெடுங்கருணைக் கெல்லா
நிலயமே வேத நெறிமுறையி னோடி
ஆய்ந்த வுணர்வி னுணர்வே பகையா
லலைப்புண் டடியே மடிபோற்ற வந்நாள்
ஈந்த வரமுதவ வெய்தினையே யெந்தா
யிருநிலத்த வோநின் னிணையடித்தா மரைதாம்.

நாழி நவைதீ ருலகெலா மாக
நளினத்து நீதந்த நான்முகனார் தாமே
ஊழி பலபலவு நின்றளந்தா லொன்று
மூலவாப் பெருங்குணத்த வுத்தமனே மேனாள்
தாழி தரையாகத் தண்டயிர்நீ ராகத்
தடவரையே மத்தாகத் தாமரைக்கை நோவ
ஆழி கடைந்தமுத மெங்களுக்கே யீந்தா
யவுணர்கடா நின்னடிமை யல்லாமை யுண்டோ.

வல்லைவாம் பில்லாத மாயவினை தன்னான்
மயங்கினரோ டெய்தி மதிமயங்கி மேனாள்
அல்லை யிறைவனீ யாதியெனப் பேதுற்
றலமருவே முன்னை யறப்பயனுண் டாக
எல்லை வலயங்க ணின்னுழையென் றந்நா
ளெரியோனைத் தீண்டி யெழுவரென நின்ற
தொல்லை முதன்முனிவர் சூளுற்ற போதே
தொகைநின்ற வையந் துடைத்திலையோ வெந்தாய்.

வேறு

இன்னன பலநினைந் தேத்தின னியம்பாத்
துன்னுத விடையுள தெனநனி துணிவான்
தன்னிகர் முனிவனைத் தரவிடை யென்னாப்
பொன்னொளிர் நெடுமுடிப் புரந்தரன் போனான். (53)

இவ்வாறு இந்திரன் விடைபெற்றுச்சென்ற பின்பு ஸ்ரீராமபிரான் தம்பியையும் சீதையையும் அழைத்துக்கொண்டு அச் சரபங்க முனிவருடைய ஆச்சிரமத்துக்குட் சென்றனன். இவர்களை வரவேற்ற முனிவர் பெருமானும் இரவு நீங்குமளவும் அறவுரை யனைத்தும் ஸ்ரீராமபிரானுக்குச் சொல்லிக்கொண் டிருந்து, இராக்காலம் முடிந்து வருவதைக் கண்டு வேள்வித் தீயில் நுழையுங் கருத்துடையவனாய் ஸ்ரீராமபிரானை நோக்கி, 'நீ எனக்கு விடை தரவேண்டும்' என வேண்டித் தான் அக்கினியை வளர்த்தான். அதைக் கண்ட ஸ்ரீராமபிரான் அம் முனிவர் பெருமானை நோக்கி, 'நீர் செய்யும் காரியம் யாது?' என்று கேட்டனர். முனிபுங்கவர் 'யான் நிரதிசய இன்பத்தைத் தரும் மீள்விலா உலகம் புகவேண்டியே எரியிற் புகநினைகுவென்' என்றனர். இரகுநாயகன், 'யான் வருங் காலத்தில் இவ்வகைப்பட்ட காரியத்தைச் செய்யத் துணிந்த காரணம் யாது?' என்று வினவினன். அதைக்கேட்ட சரபங்கர் உடல் பூரித்து 'நீ வருவது நோக்கியே ஆயிரம் யுகமாக அருந்தவஞ் செய்து வருகின்றேன்; இருவினையும் இன்றே யொழிந்து போயின; எனக்கு வினையென்பது அறக் கெட்டு ஒழிந்தது' எனப் புகன்று,

இந்திர னருளின னிறுதிசெய் பகலா
வந்தனன் மருவுதி மலரய னுலகம்
தந்தன னெனவது சாரலெ னுரவோய்
அந்தமி லுயர்பத மடைதலை முயல்வேன். (54)

ஆதலி னிதுபெற வருளென வுரையாக்
காதலி யவளொடு கதழெரி முழுகிப்
போதலை மருவின னொருநெறி புகலா
வேதமு மறிவரு மிகுபொரு ளுணர்வோன். (55)

இவ்வாறு சரபங்கர் தம் மனைவியாருடன் வேள்வித் தீயில் மூழ்கி நிரதிசய மோக்ஷ சுகத்தை யடைந்தனர்.

அனையவ னிறுதியி னமைவு நோக்கலின்
இனியவ ரின்னலி னிரங்கு நெஞ்சினர்
குனிவரு திண்சிலைக் குமரர் கொம்பொடும்
புனிதன துறையுளின் றரிதிற் போயினர். (56)

மலைகளு மரங்களு மணிக்கற் பாறையும்
அலைபுன னதிகளு மருவிச் சாரலும்
இலைசெறி பழுவமு மினிய சூழலும்
நிலைமிகு தடங்களு மினிது நீங்கினர். (57)

பண்டைய வயன்றரு பால கில்லரும்
முண்டரு மோனரு முதலி னோர்களத்
தண்டக வனத்துறை தவத்து ளோர்கடாம்
கண்டன ரிராமனைக் களிக்குஞ் சிந்தையார். (58)

இராகவன் காட்டிற்கு வரவே, அதிக கோபத்தை யுடைய அரக்கர்கள் கோபிப்பதனால் அவர்களை அழிக்கத்தக்க உபாயம் வேறொன்றும் இல்லாமல் வாடுகின்ற முனிவர்கள், தீப்பற்றி எரியாநின்ற காட்டில்

அமுதத்தின் தன்மை பொருந்திய நீர்ப்பெருக்கு வர அழியாமற் பிழைத்துச் செழிக்கின்ற உலர்ந்த மரங்களை ஒத்தவரானார்கள். மேலும், மிகுந்து வளர்கின்ற அதிகமான ராக்ஷஸர்களது பெயர்களையே வாய் குழறச் சொல்லி வருந்துகின்ற மனக்குழப்பத்தை நீங்கப் பெற்ற அம் முனிவர்கள் நெருப்புப் பற்றி எரியுங் காட்டில் நடுவேவிட்டு நீங்கிய தாய்ப்பசுவானது மீண்டும் வரக்கண்ட கன்றின் தன்மையை உடையவர்களும் ஆனார்கள். இதுவேயன்றி,

கரக்கருங் கடுந்தொழி லரக்கர் காய்தலின்
பொரற்கிட மின்மையிற் புழுங்கிச் சோருநர்
அரக்கரென் கடலிடை யாழ்கின் றாரொரு
மரக்கலம் பெற்றென மறுக்க நீங்கினார். (59)

இராகவனது வருகையைக் கண்டு துன்பக்கடலை நீந்தற்கோர் மரக்கலம் பெற்றாற்போற் களிப்படைந்தனர் முனிவர்கள் எல்லாரும். காமம் வெகுளி மயக்கம் என்னும் மூன்றனையும் அறக்கடிந்த பெரியோராகையால், அரக்கர் செய்த துன்பமனைத்தையும் அதுவரையிற் பொறுத்திருந்தனர். அவ்வாறு பொறுத்திருந்த முனிபுங்கவர் எல்லோரும் இரகுநாயகன் இருந்த இடத்தை நோக்கி அடைந்து, அழைத்து வந்து இருக்கை யளித்து அவரிடத்தே தங்கள் குறைகளை எடுத்துச் சொல்வாராயினர்.

இரக்கமென் றொருபொரு ளிலாத நெஞ்சினர்
அரக்கரென் றுளர்சில ரறத்தி னீங்கினார்
நெருக்கவும் யாம்படர் நெறிய லாநெறி
துரக்கவு மருந்தவத் துறையு னீங்கினேம். (60)

வல்லியம் பலதிரி வனத்து மானென
எல்லியும் பகலுமொரந் திரங்கி யாற்றலெம்
சொல்லிய வறநெறித் துறையு நீங்கினெம்
வில்லியன் மொய்ம்பினுய் வீடு காண்குமோ.(61)

மாதவத் தொழுகலெ மறைகள் யாவையும்
ஓதலெ மோதுவார்க் குதவ லாற்றலெம்
மூதெரி வளர்க்கிலெ முறையி னீங்கினெம்
ஆதலி னந்தண ரேயு மாகிலெம். (62)

இந்திர னனினவ னரக்க ரேயின
சிந்தையிற் சென்னியிற் கொள்ளுஞ் செய்கையான்
எந்தைமற் றியாருள ரிடுக்க ணீக்குவார்
வந்தனை யாஞ்செய்த தவத்தின் மாட்சியால்.(63)

உருளுடை நேமியா னுலகை யோம்பிய
பொருளுடை மன்னவன் புதல்வ போக்கிலா
இருளுடை வைகலே மிரவி தோன்றினுய்
அருளுடை வீரநின் னபயம்யா மென்றூர். (64)

வேறு

புகல்பு குந்தில ரேற்புறத் தண்டத்தின்
அகல்வ ரேனுமென் னம்பொடும் வீழ்வரால்
துகவி றுன்பந் தவிருதிர் நீரெனப்
பகல வன்குல மைந்தன் பணிக்கின்றூன். (65)

வேந்தன் வீயவும் யாய்வர மேவவும்
ஏந்த லெம்பி வருந்தவு மென்னகர்
மாந்தர் வன்றுயர் கூரவும் யான்வனம்
போந்த தென்னுடைப் புண்ணியத் தாலென்றூன்.

அறந்த வாநெறி யந்தணர் தன்மையை
மறந்த புல்லர் வலிதொலை யேனெனின்
இறந்து போகினு நன்றிது வல்லது
பிறந்தி யான்பெறும் பேறென்ப தியாவதோ.

ஆவுக் காயினு மந்தணர்க் காயினும்
யாவர்க் கானு மெளியவர்க் காயினும்
சாவப் பெற்றவ ரேதகை வானுறை
தேவர்க் குந்தொழுந் தேவர்க ளாகுவார். (68)

சூர றுத்தவ னுஞ்சுடர் நேமியும்
ஊர முத்த வொருவனு மோம்பினும்
ஆர றத்தினொ டன்றினின் றாரவர்
வேர றுப்பென் வெருவன்மி னீரென்றான். (69)

உரைத்த வாசகங் கேட்டுவந் தோங்கிட
இரைத்த காதல ரேகிய வின்னலர்
திரித்த கோலினர் தேமறை பாடினர்
விருத்த மாடினர் நின்று விளம்புவார். (70)

தோன்ற னீமுனி யிற்புவ னத்தொகை
மூன்று போல்வன முப்பது கோடிவந்
தேன்ற போது மெதிரல வென்றலின்
சான்று வேகந் தவம்பெரு ஞானமே. (71)

அன்ன தாகலி னேயின வாண்டெலாம்
இன்னல் காத்திங் கினிதுறை வாயெனச்
சொன்ன மாதவர் பாதந் தொழுதியார்
மன்னர் மன்னவன் மைந்தனும் வைகினான். ()

அவ்வாறு அவ்வனத்திலேயே பத்துவருடமளவும் சீராமன் வசித்துக்கொண்டிருக்கையில், அம்மாதவர்களெல்லாம் ஒருங்கு சேர்ந்து செந்தமிழாசிரியராகிய அகத்திய முனிவரைத் தரிசிக்கும்படி சொல்லினர். அவ்வாறே சீராமபிரானும், சானகியும், தம்பியாரும் புடைசூழ்ந்து வர, விருக்ஷங்களும் மூங்கிலடர்ந்த காடுகளும் படர்ந்த சின்னெறியை மெல்லமெல்லக் கடந்து சென்று சுதீக்ஷணர் என்னும் முனிவர் பெருமான் வசிக்கும் சோலையை யடைந்தனன். சோலையை யடைந்து மூவர்களும் அம் முனிபுங்கவரை வணங்கி நின்றனர். தன்னை வணங்கிய அம் மூவர்களையும் முனிவர் பெருமான் அங்கே தங்கி யிருக்கும்படி வேண்ட, அவர்களும் அதற் கிசைந்து அங்கேயே தங்கியிருந்தனர். அவர்கள் அவ்வாறு தங்கியிருக்கையில் சுதீக்ஷணர் அவர்கட்குச் செய்யத்தக்க உபசாரம் யாவையும் செய்து, 'நீங்கள் இங்கே வர யான் எத்தவஞ் செய்தேன்!' என்றனர். இரகுவீரன், 'முனிவர் பெருமானே, நான்முகன் வழியிற் பிறந்தாரிலே உலகத்தின்கண் உயர்தவம் முற்றச் செய்தார் உம்மினும் பிறர் யார்? உமது அருள்பெற்ற என்னிற் சிறந்தவர் யார்?' என்றனன். அதுகேட்ட சுதீக்ஷணர் 'எனக் கமைவதாகிய குற்றமற்ற விருந்தினனாகி என்னாலமைந்த தவத்தை எல்லாம் நீ தக்ஷிணையாகக் கொள்ளவேண்டும்' என்றனர். சீராமன், 'உன்னருள் எத்தவத்தினாலும் அடைவது அரிது. ஆயினும், யான் சொல்லவேண்டியது ஒன்றுண்டு. அது யான் செந்தமிழாசிரியராகிய அகத்திய முனிவரைச் சென்று அடைவதே' என்றனன். அதைக்கேட்ட முனிவர் பெருமான், 'நீ நல்லதே நினைந்து கூறினாய். நானும்

உனக்கு முன்னமே சொல்லத் துணிந்த காரியமும் அது, அவரை நீ சென்று சேர்வதே கடமை. அவரைச் சேர்ந்தபிறகு நின்னிடத்து எய்தப் பெறுதன ஒன்றுமில்லை. அவரை நீ சென்று அடைவது தேவர்கட்கும் முனிவர்கட்கும் நல்லது' என்று பகர்ந்து அவர்களை வாழ்த்தி அவரிடம் செல்லுதற்கு வழியும் உணர்த்தி அனுப்பினர். ஸ்ரீராமன், தன் தேவியோடும் தம்பியோடும் அகத்தியர் ஆச்சிரமத்திற்கு அருகே சென்றனன்.

ஆண்டகைய ரவ்வயி னடைந்தமை யறிந்தான்
ஈண்டுவகை வேலைதுணை யேழுலக மெய்த
மாண்டவர தன்சரண் வழங்கவெதிர் வந்தான்
நீண்டதமி ழாலுலகை நேமியி னளந்தான். (73)

இரைத்தமறை நான்கினொ டியைந்தபிற யாவும்
நிரைத்தநெடு ஞானமியிர் கல்வினொடு நாளிட்
டுரைத்துமய றுலுமறி யாதபொரு ணோர்மின்
றுரைக்குதவு மாலெனு முணர்ச்சியி னுவப்பான. (74)

உய்ந்தன ரிமைப்பில ருயிர்த்தனர் தவத்தோர்
அந்தண றறத்திநெறி நின்றனர்க ளானு ஓழியாத
வெந்திற லரக்கர்விட வேர்முத லறுப்பான்
வந்தனன் மருத்துவ னெனத்தனி வலிப்பான். (75)

ஏனையுயி ராமுதல யாவுமிடை வேவித்
தானுக ரரக்கருரு மைச்சுடு சினத்தின்
ஆனவன லைக்கடி தவித்துல களிப்பான்
வானமழை வந்ததென முந்துறு மனத்தான். (76)

கண்டனெ னிராமனை வரக்கருணை கூரப்
புண்டரிக வாணயன நீர்பொழிய நின்றான்
எண்டிசையு மேழுலகு மெவ்வுயிரு முய்யக்
குண்டிகையி னிற்பொருவில் காவிரிகொ ணர்ந்தான்.

நின்றவனை வந்தநெடி யோனடி பணிந்தான்
அன்றவனு மன்பொடு தழீஇயழுத கண்ணன்
நன்றுவர வென்றுபல நல்லுரை பகர்ந்தான்
என்றுமுள தென்றமி ழியம்பியிசை கொண்டான் ()

என்றுமுள்ள செந்தமிழ் இலக்கணம் இயம்பிப் பெரும் புகழ் கைக்கொண்ட அகத்திய முனிவர் அவ்வாறு சொல்ல, அங்குள்ள வேத வேதியர்கள் எல்லாரும் காதல் பெருகி வேதகோஷ்டம் செய்து தங்கள் கமண்டல சலத்தினை சீராமன்மீது புரோக்ஷித்தனர்.

அகத்திய முனிவரோ அத் தசரத ராமனையும், சானகியாரையும், இளையபெருமானையும் அழைத்துக்கொண்டுபோய் மலர்மணம் வீசும் குளிர்ந்த சோலையை யடைந்தனர். இரகுவீரன் தன் தம்பியுடனும், சானகியுடனும் அச் சோலையிற் றங்கி முனிவர்புங்கவர் விருந்தமைப்ப உண்டு களித்தனன். முனிவர் பெருமான் சீராமனை நோக்கி, 'அருட்கு அரசனே, நீ என் கிருகத்தில் வந்து என் அருந்தவம் முடித்தனை' என்றனர். அதைக்கேட்ட சீராமன் அகத்திய முனிவரை வணங்கி, 'எவ்வகை அருந்தவஞ் செய்து தீவினையெல்லாந் தீரநோற்ற முற்றத்துறந்த முனிவர்களும் பெறலரும் உன் அருள் பெற்றேன். இனி அனைத்துலகமும் வென்றவனுயினேன்' என்றனன். அதற்கு அகத்தியர், 'எண்ணத்தக்க குணத்தினை யுடையானே

நீ தண்டகாரணியத்தில் வாசஞ் செய்கின்றாய் என்பதைக் கேட்டமாத்திரையானே உன் வருகை இவ்வனத்திலும் உளதாவதை யறிந்து கழிமகிழ் வெய்தினேன்' என்று கூறி, 'நீ இங்கேயே வீற்றிருப்பையாயின் வேண்டிய வேண்டியாங்கு எய்தப் பெறுகின்ற பெருந் தவங்கள் எல்லாம் ஒருங்கு முடிப்பாய், மிக்க கோபத்தினையுடைய வாளரக்கர் வந்து தோன்றுவாரேல் மாண்டுபோக அவருடன் மலைந்து எங்கள் மனத் துயரையும் ஒழிப்பாய்; மேலும்,

வாழுமறை வாழுமனு நீதியறம் வாழும்
தாழுமிமை யோருயர்வர் தானவர்க டாழ்வார்
ஆழியுழ வன்புதல்வ வையமிலை மெய்யே
எழுலகும் வாழுமினி யிங்குறைதி யென்றான். (79)

அதைக் கேட்ட ஸ்ரீராமன் "செருக் கடைந்த அரக்கர்கள் செய்கின்ற தீமை சிதைந்துபோய் அவர்கள் தருக்கொழியக் கடிது கொல்வான் சமைந்திருக்கின்றேன். அவர்கள் வருந்திசையில் முந்தியிருப்பதுவே நல்ல காரியம். உமது திருவருள் யாது?' என்று அகத்திய முனிவரிடம் விண்ணப்பம் செய்தனர். அதற்கு அவர்,

இப்புவன முற்றுமொரு தட்டினிடை யிட்டால்
ஒப்புவர விற்றென வுரைப்பரிய வாளும்
வெப்புருவு பெற்றவரன் மேருவரை வில்லாய்
முப்புரமெ ரித்ததனி மொய்கணையு நல்கா. (80)

ஓங்குமர னோங்கிமலை யோங்கிமண லோங்கிப்
பூங்குலைகு லாவுகுளிர் சோலைபுடை விம்மித்
தூங்குதிரை யாறுதவழ் சூழலதொர் குன்றின்
பாங்கருள தாலுறையுள் பஞ்சவடி மஞ்ச. (81)

கன்னியிள வாழைகனி யீவகதிர் வாலின்
செந்நெலுள தேனொழுகு போதுமுள தெய்வப்
பொன்னியென லாயபுன லாறுமுள போதா
அன்னமுள பொன்னிவளொ டன்பின்விளை யாட. ()

ஏகியினி யவ்வயி னிருந்துறைமி னென்றான்
மேகநிற வண்ணனும் வணங்கிவிடை கொண்டான்
பாகனைய சொல்லியொடு தம்பிபரி விற்பின்
போகமுனி சிந்தைதொட ரக்கடிது போனான். (83)

நடந்தனர் காவதம் பலவு நன்னதி
கிடந்தன நின்றன கிரிகள் கேண்மையின்
தொடர்ந்தன துவன்றின சூழல் யாவையும்
கடந்தனர் கண்டனர் கழுகின் வேந்தையே. (84)

சடாயு எனப்படும் பெரிய உடையாரைக் கண்டனர். அவர் உருக்கியசெம்பொன் திரட்சியை ஒத்து, உதயகிரியின் உச்சியில் தங்கிய செங்கதிரவன் இப்பூமியிலுள்ள திக்குகளை எல்லாம் விளங்கச் செய்யும் சுடர்க்கொழுந்தைச் சிறைபோல விரித்திருந்ததுபோலவும், கரியமலையின் சிகரத்தில் நிலவோடு சந்திரன் தவழும்படி சேர்ந்த மந்தரமலை போலவும் விளங்கா நின்றனர். சடாயுவைக் கண்டவர்கள், 'இவன் தனக்கு முடிவு செய்து கொள்ளும்படி வந்த அறிவில்லாதவனாகிய அரக்கனாவான்; அல்லாவிடின் மிக்க வலியுள்ள கருடனாவான்' என்று சினங்கொண்டு நோக்கினார். அப்போது சடாயு வில் வீரர் இருவரையும் நோக்கி,

வனைகழல் வரிசிலை மதுகை மைந்தரை
அனையவன் றானுங்கண் டயிர்த்து நோக்கினான்
வினையறு நோன்பின ரல்லர் வில்லினர்
புனைசடை முடியினர் புலவ ரோவெனா. (85)

புரந்தரன் முதலிய புலவர் யாரையும்
நிரந்தர நோக்குவெ னேமி யானுமவ்
வரந்தரு மிறைவனு மழுவ லாளனும்
கரந்தில ரென்னையா னென்றுங் காண்பெனால். ()

காமனென் பவனையுங் கண்ணி னோக்கினேன்
தாமரைச் செங்கணித் தடக்கை வீரர்கள்
பூமரு பொலங்கழற் பொடியி னோடுமொப்
பாமென வறிகில னார்கொ லாமிவர். (87)

உலகொரு மூன்றுந்தம் முடைமை யாக்குறும
அலகறு மிலக்கண மமைந்த மெய்யினர்
மலர்மகட் குவமையா ளோடும் வந்தவிச்
சிலைவலி வீரரைத் தெரிகி லேனெனா. (88)

கருமலை செம்மலை யனைய காட்சியர்
திருமகிழ் மார்பினர் செங்கண் வீரர்தாம்
அருமைசெய் குணத்தினென் றுணைவ னாழியான்
ஒருவனை யிருவரு மொத்து ளாரரோ. (89)

எனப்பல நினைப்பின மனத்து ளெண்ணுவான்
சினப்படை வீரர்மேற் செல்லு மன்பினான்
கனப்படை வரிசிலைக் காளை நீர்கள்யார்
மனப்பட வெனக்குரை வழங்குவீ ரென்றான். ()

வினவிய காலையின் மெய்ம்மை யல்லது
புனைமலர்த் தாரவர் புகல்கி லாமையால்
கனைகட னெடுநிலங் காவ லாழியான்
வனைகழற் றயரதன் மைந்தர் யாமென்றார். (91)

இராம லக்ஷ்மணர் அவ்வாறு கூறவே, சடாயுவானவர் களிப்பென்னுங் கடலிலாழ்ந்து தரையிலிறங்கி, அவரைத் தழுவுங்காதல் சிறந்தாராய், 'மக்காள், சக்கரவர்த்தி சுகமே யிருக்கின்றனரோ?' என்று கேட்டனர்.

மறக்கமுற் றுதன வாய்மை காத்தவன்
துறக்கமுற் றனென முன்னஞ் சொல்லலும்
இறக்கமுற் றனென வேக்க மெய்தினன்
உறக்கமுற் றனென வுணர்வு நீங்கினன். (92)

தழுவின ரெடுத்தனர் தடக்கை யான்முகம்
கழுவின ரிருவருங் கண்ணி னீரினால்
வழுவிய வின்னுயிர் வந்த மன்னனும்
அழிவுறு னெஞ்சின னரற்றி னனரோ. (93)

வேறு

பரவலருங் கொடைக்கு நின்றன் பனிக்குடைக்கும்
பொறைக்குநெடும் பண்பு தோற்ற
கரவலருங் கற்பகமு மூடபதியுங்
கடலிடமுங் களித்து வாழப்
புரவலர்தம் புரவலனே பொய்ப்பகையே
மெய்க்கணியே புகழின் வாழ்வே
இரவலரு நல்லறமும் யானுமினி
யென்படநீத் தேகி னாயே. (94)

அலங்கார மெனவுலகுக் கமுதளிக்குந்
தனிக்குடையா யாழி சூழ்ந்த
நிலங்காவ லதுகிடக்க நிலையாத
நிலையுடையே னேய நெஞ்சின்

நலங்காண நடந்தனையோ நாயகனே
தீவினையே னன்பி னின்றும்
விலங்கானே னாகலினால் விலங்கினே
னின்றுமுயிர் விட்டி லேனால். (95)

தயிருடைக்கு மத்தென்ன வுலைசாலி
சம்பரனைத் தடிந்த வந்நாள்
அயிர்கிடக்குங் கடல்வலயத் தயலறிய
நீயுடனா னவி யென்று
செயிர்கிடத்தல் செய்யாத திருமனத்தாய்
செப்பினாய் திறம்பா நின்சொல்
உயிர்கிடக்க வுடலைவிசும் பேற்றினா
ருணர்விறந்த கூற்றி னாரே. (96)

'எழுகின்ற கீர்த்தி பெருக இப்போதே ஒப்புரைக்கப் படாத எரிகின்ற தீயினிடத்தே விழுவதே நலம். அப்படியிருக்கப் பெண்களைப்போலவே நின்று தேம்பித் தேம்பி நான் அழுவதோ தகுதி' யென்று முன்னை நல்லறிவு தோன்ற சடாயு எழுந்து அங்கே நிற்கின்ற இராம லட்சுமணரைப் பார்த்து, 'சக்கரவர்த்தித திருக் குமாரர்களே, நான் சொல்வதைக் கேளுங்கோள்' என்று சொல்லலாயினான்.

முன்னாளில் தக்ஷப்பிரஜாபதிக்கு ஐம்பது மாதர் பிறந்தனர். அவருள் பதின்மூவரைக் காசிபமுனிவர் மணஞ்செய்து கொண்டனர். அப்பதின்மூவரில் அதிதி என்பவள் முப்பத்து முக்கோடி தேவரைப் பெற்றாள். திதி என்பவள் அறுபத்தாறு கோடி அசுரரை வயிறு வாய்த்தாள். தனுவென்பாள் தானவர் முதலியோ-

ரைப் பயந்தாள். மதி யென்பவள் மனிதர் முதலான-வரை வருணங்களுடன் பெற்றாள். சுரபி என்பவள் தேனுவுடன் கந்தருவர் முதலியவரைப் பெற்றாள். குரோதவசை என்பவள் கழுதை, மரை, ஒட்டகம் முதலியவற்றைப் பெற்றாள். விநதை யென்பவள் வானிடி. மின்னல், கூகை, பருந்து முதலிய பெரும் பறவைகளோடு அருணன், கருடன் இவர்களையும் பெற்றாள். கழை யென்பவள் கொடி, செடி முதலிய வைகளைப் பெற்றாள். சுதை என்பவள் ஒரு தலையுள்ள நாகங்களைப் பெற்றாள். அருட்டை யென்பவள் ஓந்தி, உடும்பு, அணில் முதலியவைகளைப் பெற்றாள். இளையென்பவள் சலசரங்களைப் பெற்றாள். இவ்வாறு அதிதி முதலியவர்களால் உலகம் படைத்தற் றொழில் நடக்க, விநதை மகனாகிய அருணன் அரம்பையை விரும்ப, அவள் சடாயுவாகிய என்னையும் எனக்கு மூத்தவனாகிய சம்பாதியையும் பெற்றாள். நான் உமது திருத்தந்தையா ராகிய சக்கரவர்த்திக்கு உயிர்த் தோழன். தேவர்களுடன் வருணங்கள் தோன்றிய அக் காலத்தே பிறந்தவன் கழுகுகளுக்கு அரசன் என்று சொல்லி முடித்தனன்.

ஆண்டவனீ துரைசெய்ய வஞ்சலித்த
மலர்க்கையா ரன்பி னோடும்
மூண்டபெருந் துன்பத்தான் முறைமுறையி
னிறைமலர்க்கண் மொய்த்த நீரார்
பூண்டபெரும் புகழ்நிறுவித் தம்பொருட்டான்
மேலுகம் புக்க தாதை
மீண்டனன்வந் தானவனைக் கண்டனரே
யொத்தனரவ் விலங்கற் றேளார். (97)

சடாயுவும் அவ் விருவரையும் இரு சிறகாலும் உறத் தழுவி, 'மக்களே, நீங்களே எனக்கு உரிமைக் கடனுஞ் செய்யவேண்டும்; இரண்டு உடலுக்கும் உயிரொன்றாகிய சக்கரவர்த்தி பிரிந்தும் பிரியாதிருக்கும் இவ்வுடற் பொறையை இப்போதே ஒழித்து விடாமற் போவேனேயானால், இந்தத் துயரத்தை நான் மறக்கவே மாட்டேன்' என்றான்.

அவ்வாறு சொன்ன பெரிய உடையாராகிய சடாயுவை இராம லட்சுமணர் இருவரும் வணங்கிக் கண்ணீர் உகுத்து நின்று, 'எந்தையோ சத்தியந் தவறு மாட்டாது விண்ணுலகஞ் சென்றனன். இவ்விடத்தில் எம்பெருமானே எங்களை நீருங் கைவிடுவீராயின் எமக்குக் களைகணுவார் யார்?' என்று மனமறுகிக் கூறினர். அதைக்கேட்ட சடாயுவும், 'அஃது அப்படியன்றெனின் நீங்கள் திருவயோத்தியை யடைந்த பிறகேனும் அவனைச் சேராமல் ஒழியேன்' என்று கூறி,

வேந்தன் விண்ணடைந் தானெனின் வீரர்நீர்
ஏந்து ஞால மினிதளி யாதிவட்
போந்த தென்னை புகுந்தவென் புந்திபோய்க்
காந்து கின்றது கட்டுரை யீரென்றான். (98)

'தேவர் தானவர் நாகர் முதலிய யாவரேனும் உமக்குத் தீங்கு செய்திருப்பாராயின் அவர்களை எல்லாங் கொன்று களைந்து நானே உங்கட்கு அவ்வரசைத் தருவேன்' என்று சடாயு சொல்ல,

தாதை கூறலுந் தம்பியை நோக்கினன்
சீதை கேள்வ னவனுந்தன் சிற்றவை
மாத ரால்வந்த செய்கை வரம்பிலா
ஓத வேலை யொழிவின் றுணர்த்தினன். (99)

உந்தை யுண்மைய னாக்கியுன் சிற்றவை
தந்த சொல்லைத் தலைக்கொண்டு தாரணி
வந்த தம்பிக் குதவிய வள்ளலே
எந்தை வல்லது யாவர்வல் லாரெனா. (100)

இவ்வாறு சொல்லி சடாயு உடையார் சீராமனை அன்பாய்ப் புல்லி மோந்து பொழிந்த கண்ணீரை யுடையராய், 'என்னையும அரசனையும் அளவில்லாத புகழை யடைவித்தாயே' என்று சொல்லிவிட்டு சீதையை நோக்கி, 'இவர் இன்னாரென்று சொல்ல வேண்டும்' என்று விரும்பினர். இளைய பெருமாள், இருள் வடிவெடுத்தா லொத்த தாடகை வதம் முதலாக, வில்லிறுத்து மணஞ்செய்து கொண்டது இடையாக, முன்னாளிலே தருப்பைப் புல்லில் தாதைக்கு உரிமைக்கடன் செய்துவந்தது கடைசியாக எல்லாச் செய்திகளையும் சொல்லி முடித்தனன்.

கேட்டு வந்தனன் கேழ்கிளர் மௌலியான்
தோட்ட லங்கலி னீர்துறந் தீர்வளம்
நாட்டி னீவிரு நன்னுத லாளுமிக்
காட்டில் வைகுதிர் காக்குவென் யானென்றான்.()

பின்பு சீராமபிரான் சடாயுவை நோக்கி, 'அகத்தியமுனிவராற் கட்டளையிடப்பட்டுள்ள பஞ்சவடிக்குச் செல்லும் வழி யாது?' என்று கேட்டனர். அதற்கு அவர், 'நீங்கள் அங்கே செல்ல வழி காட்டுகின்றேன், அங்கே சென்று தவஞ்செய்வது தக்கதே' என்று சீராமபிரான் முதலிய மூவரும் தன் சிறகின் நிழலில் வரத், தான் ஆகாயமார்க்கத்திற் சென்று அவர்கட்குப் பஞ்சவடியைக் காட்டி, விடைபெற்றுச் சென்றனர். அவர்களும் அங்கே இனிதாக வசித்துக்கொண்

டிருந்தனர். சடாயுவும் தன் மருகியையும் மக்களையும் பொருந்தச் சிந்தனையிட்டு அரக்கரது வரவைச் செவ்விதாக நாடிச் சேக்கையிற் பார்ப்பைப் பார்க்கின்ற பறவைபோற் பார்த்து வருவானாயினான்.

புவியினுக் கணியா யான்ற
பொருடந்து புலத்திற் றாகி
அவியகத் துறைக டாங்கி
யைந்திணை நெறிய ளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென்
றொழுக்கமுந் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா
வரியினை வீரர் கண்டார். (102)

வண்டுறை கமலச் செவ்வி
வாண்முகம் பொலிய வாசம்
உண்டுறை குவளை யொண்க
ணொருங்குற நோக்கி யூழின்
தெண்டிரைக் கரத்தின் வாரித்
திருமலர் தூவிச் செல்வர்க்
கண்டடி பணிவ தென்னப்
பொலிந்தது கடவுள் யாறு. (103)

ஓதிம மொதுங்கக் கண்ட
வுத்தம னுழைய ளாகும்
சீதைதன் னடையை நோக்கிச்
சிறியதோர் முறுவல் செய்தான்
மாதவ டானு மாண்டு
வந்துநீ ருண்டு மீளும்
போதக நடப்ப நோக்கிப்
புதியதோர் முறுவல் பூத்தாள். (104)

வில்லிய றடக்கை வீரன்
வீங்குநீ ராற்றின் பாங்கர்
வல்லிக ளுடங்கக் கண்டான்
மங்கைதன் மருங்கு னோக்க
எல்லியங் குவளைக் கானத்
திடையிடை மலர்ந்து நின்ற
அல்லியங் கமலங் கண்டா
னண்ணறன் வடிவு கண்டான். (105)

அனையதோர் தன்மை யாலவ்
வருவிநீ ராற்றின் பாங்கர்ப்
பனிதரு படிவப் பஞ்ச
வடியெனும் பருவச் சோலைத்
தனியிட மதனை நண்ணித்
தம்பியாற் சமைக்கப் பட்ட
இனியபூஞ் சாலை யெய்தி
யிருந்தன னிராம னிப்பால். (106)

வேறு

நீலமா மணிநிற நிருதர் வேந்தனை
மூலநா சம்பெற முடிக்கு மொய்ம்பினாள்
மேலைநா ளுயிரொடும் பிறந்து தான்விளை
காலமோர்ந் துடனுறை கடிய நோயனாள். (107)

செம்பட்டை மயிரை யுடையாளும் இராகுவும் வருந்தும் உடம்பினை யுடையாளும் திரிலோகத்தாருக்கும் நாசம் உண்டாக்குபவளுமாகிய சூர்ப்பணகையானவள் சீராமபிரான் தங்கியிருக்கும் இடத்தை அடைந்து,

எண்டகு மிளைமையவ ரரக்க ரெங்கண்மேல்
விண்டனர் விலக்குதி யென்ன மேலைநாள்
அண்டசத் தருந்துயி லுறந்த வையனைக்
கண்டன டன்கிளைக் கிறுதி காட்டுவாள். (108)

சிந்தையி னுறைபவற் குருவந் தீர்ந்ததால்
இந்திரற் காயிர நயன மீசற்கு
முந்திய மலர்க்கணோர் மூன்று நான்குதோள்
உந்தியி னுலகளித் தாற்கென் றுன்னுவாள். (109)

கற்றையஞ் சடையவன் கண்ணிற் காய்தலால்
இற்றவ னன்றுதொட் டின்று காறுந்தான்
நற்றவ மியற்றியவ் வநங்க னல்லுருப்
பெற்றன னாமெனப் பெயர்த்து மெண்ணுவாள். (110)

அதிகநின் றொளிருமிவ் வழக னுண்முகம்
பொதியவிழ் தாமரைப் பூவை யொப்பதோ
கதிர்மதி யாமெனிற் கலைக டேயுமம்
மதியெனின் மதிக்குமோர் மறுவுண் டென்பரால். ()

எவன்செய வினியவிவ் வழகை யெய்தினோன்
அவன்செயத் திருவுடம் பலச நோற்கின்றான்
நவன்செயத் தகையவிந் நளின நாட்டத்தான்
தவன்செயத் தவன்செய்த தவனெ னென்கின்றாள். ()

கடலை யாடையாக உடுத்து, உருவச்செவ்வி யமைந்து பிடிபோலும் நடையை யுடையாளாகிய பூமிதேவியினது பெண் தன்மை நன்றுநன்று, எங்கும் புல் படர்ந்திருப்பது இப்புருடோத்தமன் அடித்தலந் தீண்டலின் அவட்கு மயிர்க்குச் செறிந்ததுபோல் விளங்குகின்றது. 'ஐயோ சூரியன் ஆகாயத்தில் தன் புல்லொளி செலுத்திச் சிந்தையில் நாணங் கொள்ளா-

மல் நடக்கின்றனே; உடைவாள் தாங்கிய அரையினை யுடைய இவ்வாண்டகையினது திருமேனிப் பொலி-வைக் காணுதிருப்பாரோ!' என்று இவ்வாறு இராம-பிரானது திருமேனி யழகினை யெடுத்துச் சொல்லிக் கொண்டே வானில் வரைந்ததோர் மாதரோவியமே போன்று அசைவற்று நின்று வெம்பிப் புலர்ந்து-யர்ந்து சீராமபிரானது தோளிற் சென்ற கண்ணோட்-டங்களை ஊன்றிப் பறிக்க முடியாமல் சூர்ப்பணகை வருந்தி நின்றாள்.

இவ்வாறெண்ணி நினைந்து உருகி இராகவன்மேற் காதல்கொண்டு தன்னை அரக்கி என்று உள்ளத்தே நினைத்துத் தடுத்துவிடுவான் என்று எண்ணி அவன் தன்னை மயிற்சாயலை உடையாளெனக் கருதப் போவ-தே நலமெனத் துணிந்து திருமகளை மனத்தே பாவி-த்து அவள் மந்திரத்தை உருச்சபித்த மாத்திரத்தில் சந்திரனைக் காட்டிலும் மேன்மையுடையதாய் விளங்கு-கின்ற முகத்தை யுடையவளும் அழகிய நடையை யுடையவளுமாகி, தனது தேகத்தினது மிகுந்த பிர-காசம் ஆகாயத்தில் விளங்க வடிவம் மாறி நின்றாள். பிறகு,

பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவ மனுங்கச்
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடிய ளாகி
அஞ்சொலிள மஞ்ஞையென வன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள். (113)

இவ்வாறு வந்த அம் மாதை அடியார்கட்கு மெய்ஞ்ஞானக் கண்ணருள் செய்யுங் கண்ணன் கண்டு 'மூவுலகத்திலும் இத்தனை அற்புத வடிவமுடையாரைக் கண்டதில்லையே யெனப் பார்த்து, மகளிருள் யாவர்

இவளுக்கு ஒப்பாவார்? அழகிற்கும் எல்லை சொல்ல முடியுமோ', என்று நினைத்துக்கொண் டிருக்கையில், அவள் விரைந்து வந்து மானின் ஒதுங்கி அயலிற் சிறிது நாணி நின்றாள். அதைக் கண்ட இரவிகுல திலகன்,

தீதில்வர வாகதிரு நின்வரவு சேயோய்
போதவுள தெம்முழையோர் புண்ணியம தன்றோ
ஏதுபதி யேதுபெயர் யாவருற வென்றான்
வேதமுதல் பேதையவ டன்னிலை விரிப்பாள். (114)

வேறு

பூவிலோன் புதல்வன் மைந்தன்
புதல்விமுப் புரங்கள் செற்ற
சேவலோன் றுணைவ னான
செங்கையோன் றங்கை திக்கின்
மாவெலாந் தொலைத்து வெள்ளி
மலையெடுத் துலகை மூன்றுங்
காவலான் பின்னை காம
வல்லியாங் கன்னி யென்றாள். (115)

சூர்ப்பணகை கூறியதைக் கேட்ட இரகுவீரன் ஐயம் படர்ந்த நெஞ்சினையுடையானாய் இவள் செய்கையோ களங்கமற்றது அன்று அதனைச் சிறிதறியலா மென்று எண்ணி, 'நீ இராவணனுடைய தங்கையானது மெய்யேயாயின் இவ்வுருவம் அடைந்த தன்மையாது?' என்று வினவினன். இறைவன் அவ்வாறு கட்டளையிடுவதற்கு முன்னமே 'நான் மாயைகள் வல்ல அரக்கருடன் வாழ்க்கை செய்வதை மதியாமல் ஆராய்ச்சியையுடைய மனமுடையேனாகி அறந்தலை நிற்ப எண்ணித் தீவினைதீய நோற்றுத் தேவரின் இவ் வுருவம்

54480
மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL

அடைந்தேன்' என்றனள் இராவணன் தங்கை. இரகுநாயகன், 'இந்திரனும் எளிதாக ஏவல் செய்யும்படி உலக மூன்றையும் ஆள்கின்ற இராவணன் தங்கையானால், நீ பெருஞ் செல்வத்தோடும் தோன்றாமல், யாருந் துணையில்லாமல் தன்னந் தனியளாய் வரக் காரணம் என்ன? சொல்லவேண்டும்' என்று கேட்டான். அதற்கு அவள் 'விமல! அச்சீரிய ரல்லாராகிய அரக்கரோடு சேராமல் தேவர்களிடத்தும் முனிவர்களிடத்தும் அடைந்துள்ளேன். இங்கோர் காரியம் பற்றி உம்மை நாடி வந்தேன்' என்றாள். இரவிகுல திலகனும் ஸ்ரீராமும் பார்க்கினும் மகளிரது நெஞ்சாழம் அறியவொண்ணாதே நன்னெறிப்பாலும் இராதே அதைப் பின்னை யறியலாமென்று நினைத்துச் சூர்ப்பணகையை நோக்கி, 'என்னிடத்தே யாது காரியம் பற்றி வந்தாய்? என்னாலாவதேற் செய்வேன் சொல்' என்று கேட்டனன். அதற்கு அவள், 'தாம் கொண்ட எண்ணத்தைத் தாங்களே சொல்வது என்பது குலமகளிர்க்கு அடுத்ததன்று, நானோ உயிர் வருந்துகின்றேன், யாது செய்யவல்லேன், யாருமில்லேன். உம்மை மணம் புரிவான் எண்ணிப் போந்தனென் நீர் காக்க வேண்டுகின்றேன்' என்றாள்.

இரகுவீரன் அதைக் கேட்டு, 'இவள் நாணமுடையாளல்லள், இழிகுணமுடையவள், நல்லவளும் அல்லள்' என்று ஒன்றும் உரையாடாம லிருந்தான். அவனிருந்த நிலைமையறியாது, 'இவன் நம்மை மணந்து கொள்வானோ அல்லனோ' என்னும் மயக்கத்துடன் வருந்துகின்ற சூர்ப்பணகை, 'எழுதரிய திருமேனியுடையானே! நீ இங்கே எய்தியது அறியாமல்

முழுதும் உணர்ந்த முனிவர்க்கே ஏவற்றொழில்செய்து கொண்டு இளமைப்பருவம் பயனின்றி வறிதே கழிய வீணாகப் பொழுது போக்கினேன்' என்றனள். இரகு நாயகனோ நீதிநெறியிற் செல்லாத இவ்வரக்கி வேறு சிந்தனை மனத்தில் எண்ணி இங்கே வந்தனளாகும் என்று மனத்திற்கொண்டு அவளை நோக்கி, 'இது முறையன்று, நீயோ அந்தணன் மகள், நானோ அரசன் மகன். நாமிருவரும் மணங்கோடல் எவ்வாறு பொருந்தும்?' என அதற்கவள், 'என் தந்தையோ பிராமணன். என்னையீன்றதாயோ உலகைப்புரந்த அரக்கர் பெருமான் மகளன்றோ, நீ என்னை மணக்காது என்னை இகழ்தற்கொத்த காரணம் இதுவாயின் என்னுயிர்க்கு இறுதி காண்பேன்' என்றாள். அவள் அவ்வாறு சொல்லக்கேட்ட இரகுகுல திலகன் குறுநகை புரிந்து 'அரக்கரை மானிடர் மணஞ்செய்து கொள்ளல் பொருத்தமன்று, என்று அறிவுடையோர் கூறுவார்கள்', என அதற்கு அவள், 'நானோ அரக்கரின் நீங்கி தேவர்ப்பராவி அப்பழி படுபிறவி நீங்கினேன்' என்றனள். இரகுநாயகன், 'உன் உடன் பிறந்தவரின் ஒருவனோ உலக மூன்றையும் அரசுபுரியும் செங்கோலுடையான், மற்றொருவனோ சிவபிரான் தோழனெனத்தகும் குபேரன், அவர்களே என்பால் வந்து உன்னை மணஞ்செய்து கொடுப்பாரேல் நான் ஏற்பேன்' என்று சொல்லினன். அதற்கு அவள்,

காந்தர்ப்ப மென்ப துண்டாற்
காதலிற் கலந்த சிந்தை
மாந்தர்க்கு மடந்தை மார்க்கு
மறைகளே வகுத்த கூட்டம்

ஏந்தற்பொற் றோளி னாயி
தியைந்தபி னெனக்கு மூத்த
வேந்தர்க்கும் விருப்பிற் றாகும்
வேறுமோர் குறையுண் டென்றாள். (116)

'இராவணன் முதலான அரக்கரோ முனிவருடன் முதிர்ந்த பகைமை உடையவர்களாக இருக்கின்றனர். நீ என்னை மணந்து கொண்டால் அப்பகைமையைச் சிறிதும் பாராட்டமாட்டார்கள். நீயும் தனித்திருக்கின்றனை ஆதலால் அவர்களுடன் தழுவுதற்கான சமயம் இது வல்லாமல் வேறில்லை என் விருப்பின்படி நீ என்னை மணந்து கொள்வையாயின் அவ்வரக்கர்கள் விண்ணுலகும் நின்னுரிமையாக்கி உனக்கு இனியராய் நின் ஏவல் செய்து ஒழுகுவர்' என்றாள். சீராமபிரான், 'அரக்கர் அருளும் பெற்றேன், உன்னை மனைவியாகவும் பெற்றேன், நின்னொடு நீங்காப்பெருஞ் செல்வத்து உறையவும் பெற்றேன். நான் திருவயோத்தி நீங்கிய பின்பு செய்தற்குரிய தவம் பயந்தது' என்று சிரித்து நின்றான். அச்சமயத்தில் அப் பர்ணசாலையினின்றும் தேவர்கள் பெற்ற வரத்தால் வந்த சீதை எழுந்தருள, அவ்வாறெழுந்தருளிய சீதையாகிய அரக்கர் கூட்டத்தை அழிக்கவந்த கற்பாகிய நெருப்பை அவ்வரக்கி கண்டனள். கண்டு, 'இம்மண நாறும் கூந்தலையுடைய பெண்ணை வனத்தில் இவன் கொண்டுவரவேமாட்டான். இப்படிப்பட்ட உருவமுடையாளை உலகத்தில் நாமெங்கும் கண்டதேயில்லை. தாமரை மலரின் நீங்கி, அடியிணை பூமியிற் படியத் திருமகளார் இங்கே எழுந்தருளிவந்தாரோ' என்று மனந்திகைத்து நின்றாள். பெண் பிறப்பு எடுத்த எனக்கே அவளைக்

கண்ட அளவில் இப்படிப்பட்ட திப்பிரமை உண்டாயின் பிறருக்கு என்னுகாது!' என்று சிராமனையும் சீதை-யையும் பார்த்துப் 'பிரமன் தானே அழகென்று சொல்லப்படுவதை இரண்டு உருவாகப் படைத்தான் என்று சொல்லவேண்டும்; இவர்களே அவ்வழகுக்கு வரம்பானவர்கள்' என்று புகழ்வாளாயினள்.

இவ்வாறு எண்ணிப் பின் சானகியை இகழ்விப்-பேன் எனத் துணிந்து, 'பூவை வண்ணத்தானே, இங்கே நடந்துவந்தவள் மாயை வல்லவள், வஞ்சனைக் குணமிக்க அரக்கி, அவள் நெஞ்சம் அறியவல்லதன்று; அவள் கொண்ட உருவமோ மெய்யானது மன்று, மாமிசமே உண்ணும் வாழ்க்கையுடையாளைக் கண்டு பயந்தேன், நான் அவளை அடையாதிருக்க நீ விலக்க வேண்டுகின்றேன்' என்றனள். பொய்ம் மொழி புகன்ற அரக்கியைக் காகுத்தன் நோக்கி, 'நீ சொல்-வது நன்று யிருக்கின்றது. உன்னை யார் மறைத்து வைக்கும் வலியுள்ளவர்? தெளிந்த அறிவால் உன் எண்ணந் தெரிந்தது; இவளோ கள்ளத் தன்மை யுடைய அரக்கியேயாம்' என்று நகைத்துக் கொண்-டிருக்க, சானகி காகுத்தனை நெருங்கினுள். அவளைப் பார்த்து 'கள்ளத் தன்மையுடைய அரக்கியே, நீ இடையிலே வந்தது என்ன காரணம்?' என்று சூர்ப்-பணகை அதட்ட, அதற்குச் சானகி அஞ்சி, தன்னிட்-டிடை நோவ நடந்து வருந்தி, பஞ்சின் மெல்லடிகள் பதைக்கப் பருவ காலத்திற் றோன்றும் மேகத்தில் விளங்கும் பவளக் கொடியேபோல அங்கே எழுந்-தருளி யிருந்த இராகவனது கையைப் பற்றிக்-கொண்டாள்.

வளையெயிற் றவர்க ளோடு
வரும்வினை யாட்டென் றோதும்
விளைவன தீமை யேயா
மென்பதை யுணர்ந்து வீரன்
உளைவன வியற்ற லொல்லை
யுன்னிலை யுணரு மாயின்
இளையவன் முனியு நங்கை
யேகுதி விரைவி னென்றான். (117)

இரகுவீரன் இவ்வாறு சொல்லியதைக் கேட்ட சூர்ப்பணகை, 'திரிமூர்த்திகளும் மன்மதனும் பிறரும் என்னைப் பெறத் தவஞ் செய்கின்றனரே, பொறுமை என்பது சிறிதேனும் இல்லாத இக்கள்ளியை விழைந்து நின்று நீ என்னை இகழ்வதனால் என்ன காரியம்' என்று சொல்லிக்கொண் டிருந்தாள். 'நாம் இவளை மணக்கமாட்டோம் என்று சொல்லியும் நம்மை விட்டு நீங்காமல் கள்ள வாசகங்கள் சொல்லிக் கொண்டே இங்கு நிற்கின்றனளே, இவளோடு என்ன செய்வது?' என்று சொல்லிக் கொண்டே இரகுநாயகன் சானகியாருடன் பர்ணசாலையுட் புக்கனன். இறைவன் போன பிறகு உணர்வு கெட்டது என்னும் தன்மையளாகி அச் சூர்ப்பணகை உடம்பினின்று நீங்கி உயிர் போய்விட்டது என்று சொல்லும்படி ஒடுங்கி நின்று உயிர்ப்படங்கிக் கோபித்து, சானகியினிடத்து மிக்க விருப்ப முடையானாகிய இரகுவீரனை மணக்கும் நெறியை நினைந்து, 'இன்று இவனை மணம்புணரே னேல் உயிர் இழப்பன்' என்று துணிந்து ஒரு பூஞ்சோலையிற் புகுந்தாள். சூரியனும் அத்தமன வரையை அடைந்தான். எங்குஞ் செவ்வானம் மூடிக்-

கொண்டது. சூர்ப்பணகை, இரகுநாயகன் தன்னை மணக்கமாட்டேன் என்று சொல்லியதை நினைந்து நினைந்து அவ்விரவெல்லாம் வருந்திக்கொண்டே யிருந்தாள். மூன்றுலகத்திலுமுள்ள அரக்கராகிய இருளைத் தொலைக்க இரகு வீரன் தோன்றினாற் போலச் சூரியன் உதயமானான்.

விடியல் காண்டலி னீண்டுத
னுயிர்கண்ட வெய்யாள்
படியி லாண்மருங் குள்ளள
வெனையவன் பாரான்
கடிதி னோடினெ னெடுத்தொல்லைக்
கரந்தவள் காதல்
வடிவி னானுடன் வாழ்வதே
வாழ்வென மதியா. (118)

தனியி ருந்தனள் சமைந்ததென்
சிந்தனை தாழ்வுற்
றினியி ருந்தெனக் கெண்ணுவ
தில்லென வெண்ணாத்
துனியி ருந்தவன் மனத்தின
டோகையைத் தொடர்ந்தாள்
கனியி ரும்பொழில் காத்தய
லிருந்தவன் கண்டான். (119)

நில்ல டீஇயெனக் கடுகினன்
பெண்ணென நினைந்தான்
வில்லெ டாதவள் வயங்கெரி
யாமென விரிந்த

சில்ல லோதியைச் செங்கையிற்
றிருகுறப் பற்றி
ஒல்லை யிற்றுதைத் தொளிகிளர்
சுற்றுவா ளுருவி. (120)

ஊக்கித் தாங்கிவிண் படர்வெனென்
றுருத்தெழு வாளை
நோக்கி நொய்தினின் வெய்திழை
யேலென நுவலா
மூக்குங் காதும்வெம் முரண்முலைக்
கண்களு முறையால்
போக்கிப் போக்கிய சினத்தொடும்
புரிகுழல் விட்டான். (121)

அப்போது அவள் அழுது புலம்பிய ஓசையோ திசை-யனைத்துஞ் செவிடுபட்டது, தேவர்கள் காதிலும் போய் பட்டது. நிலமுழுதும் அவள் அறுப்புண்ட உறுப்பினின்றும் பெருகிய இரத்தவெள்ளம் பரந்தது. இராவணை வேட்டையாடுவான் அவனுடைய மணிகள் பதித்த தலையைத் துணிக்க ஒரு முகூர்த்தங் கொண்டு வைத்த தன்மையும் ஒத்திருந்தது. தன காலடி அதிர நடக்கத் துணிந்த அரக்கி, இராவணன் முதலிய அசுரர்களுடைய ஆவி நீக்க அங்கே தோன்றி உற்பாதமென்ன இரத்தமழை சொரியும் கார்மேகம் ஒத்து உயர்ந்தும், பின் மண்ணில் விழுந்தும் வருந்துவாள். அயர்வடைவாள், கைகுலைத்து அலமருவாள், ஆருயிர் சோர்வாள், பெயர்ந்து செல்வாள், பெண் பிறந்-தேன் பட்ட கொடுமை நன்றாயிருக்கின்றது என்பாள் வருந்துவாள், அறுப்புண்ட மூக்கை ஒற்றுவாள்,

உலைக்களத் தீயேபோற் பெருமூச்சு எறிவாள், கையை நிலத்தி லோங்கி யறைவாள், காலால் ஓடுவாள், இரத்தஞ் சொரிய நிற்பாள்.

ஊற்று மிக்கநீ ரருவியி
னொழுகிய குருதி
சேற்று வெள்ளத்துட் டிரிபவ
டேவரு மிரியக்
கூற்று மூட்குந்தன் குலத்தினோர்
பெயரெலாங் கூறி
ஆற்று கிற்கிலள் பற்பல
பண்ணிநின் றழைத்தாள். (122)

வேறு

நிலையெடுத்து நெடுநிலத்து நீயிருக்கத் தாபதர்கள்
சிலையெடுத்துத் திரியுமிது சிறிதன்றோ தேவரெதிர்
தலையெடுத்து விழியாமை சமைப்பதே தழலெடுத்தான்
மலையெடுத்த தனிமலையே யிவைகாண வாராயோ. (123)

புலி புறத்ததாகக் குட்டி யகப்படாது என்னும் உலகம் எடுத்துக் கூறும் உரை என்னளவில் பொய்த்து விட்டதோ! ஊழிக்காலத்தும் சலியாத மூவருக்கும், வானவருக்குந் தானவருக்கும் மேம்பட்ட வலியை யுடையானே! யான்பட்ட துன்பத்தைப் பார்க்க வாராயோ என்றும், காற்றையும் நீரையும் நெருப்பையும் விண்ணையும் யமனையும் நவக்கிரகங்களையும் ஏவல் கொண்டாயே! நானோ இங்கு இரண்டு மனிதருக்கு ஆற்றாதிருக்க உன் வல்லபத்தை மாற்றி விட்டனையோ!

உருப்படிவ மன்மதனை
யொத்துளரே யாயினுமுன்
னெருப்படியிற் பொடியொவ்வா
மானுடரைச் சீறுதியோ
நெருப்பொடியிற் பொடிசிதற
நிறைந்தமதத் திசையானை
மருப்பொடியப் பொருப்பிடியத்
தோணிமிர்த்த வலியோனே. (124)

'தேனுடைத் தெரியல் புனைந்த தேவரையும் வருத்துகின்ற பேராற்றல் உனக்கும் உன் தம்பியர்க்கும் தவிர்ந்து விட்டதோ? மாமிச தேகம் பெற்று நம்மவர்க் கெல்லாம் உணவாயிருக்கின்ற இம் மனிதரிடத்தில் உங்கள் வலி ஒடுங்கிப் போய்விட்டதோ? இந்திரனும் பிரமனும் சிவனும் தேவரும் குற்றேவல் செய்ய, ஜயமடந்தை பல்லாண்டு கூற, எல்லா உலகங்களுந் துதிக்க, சந்திரவட்டக் குடைநிழலில் நீயிருக்கும் சபைநடுவே நான் நாணாமல் முகங்காட்ட வல்லேனோ? அரனிருந்த மலை எடுத்த அண்ணாவோ! அண்ணாவோ! என் மார்பு சிதைந்துபோக உருட்டி என் மூக்கை அறுத்த சிறு மனிதனிருந்து என் தோளன்றோ இவ் வெற்றி கொண்டதென்று பார்த்துக்கொண்டிருக்க நான் இங்கிருந்து புலம்புவது தகுமோ? இது கரனிருக்கும் காணியாட்சியாகிய வனமன்றோ? நான் இக் காணியாட்சியில் இக் கேட்டையடையலாமா? தேவர்களைக் கருவறுத்து இந்திரனை விலங்கிலிட்டு வானவர்களைக் குற்றேவல் செய்யப் பணிகொண்ட என் மருமகனாகிய இந்திரசித்தே! நான் அடைந்த வசையால் உங்கள் புகழ் மாசுண்டதாகாதோ?'

கல்லீரும் படைத்தடக்கை
யடற்காது டணார்முதலா
அல்லீருஞ் சுடர்மணிப்பூ
ணரக்கர்குலத் தவதரித்தீர்
கொல்லீரும் படைக்கும்ப
கருணனைப்போற் குவலயத்துள்
எல்லீரு முறங்குதிரோ
யானழைத்தல் கேளீரோ. (125)

என்றின்ன பலபன்னி
யிகலரக்கி யழுதிரங்கிப்
பொன்றுன்னும் படியகத்துப்
புரள்கின்ற பொழுதகத்து
நின்றந்த நதியகத்து
நிறைதவத்தின் குறைமுடித்து
வன்றிண்கைச் சிலைநெடுந்தோண்
மரகதத்தின் மலைவந்தான். (126)

வந்தானை யிடைநோக்கி
வயிறலைத்து மழைக்கண்ணீர்
செந்தாரைக் குருதியொடு
செழுநிலத்தைச் சேறாக்கி
அந்தோவுன் றிருமேனிக்
கன்பிழைத்த வன்பிழையால்
எந்தாயான் பட்டபடி
யிதுகாணென் றெதிர்விழுந்தாள். (127)

காலில் விழுந்த அரக்கியைக் கண்ட இரகுநாயகன் இவள் யாதேனும் கொடுஞ்செய்கை செய்திருப்பள் என்று மனத்தெண்ணி, இவளை மூக்கும் காதும் தம்பியே அரிந்திருப்பான் எனத் துணிந்து அவளைப் பார்த்து, ‘நீ யார்?’ என்றான்.

4

அச்சொல்லைக் கேட்ட அரக்கி, 'என்னை நீ அறிய மாட்டாயோ? யான், பகையென்பது தனக்கோர் உலகத்திலுமில்லாத கோபத்தினையுடைய இராவணனாகிய எவ்வுலகமும் உடையானுக்கு உடன்பிறந்தாள் அல்லளோ?' என்றாள். அப்படியாயின், 'அரக்கர் இருக்குமிடத்தை நீங்கி யாம் இருக்கும் இடந்தேடி நீர் இங்கே யாது காரணமாக வந்தீர்?' என்று இரகுவீரன் கேட்க, 'அரக்கி, 'யான் நேற்று வந்திலனோ?' என்றாள். 'தாமோ நேற்றுத் திருமகளார்போலும் அழகிய வடிவங்கொண்டு வந்தது?' என்று இராமன் கேட்க, அதற்குச் சூர்ப்பணகை, 'மூக்கும் காதும் அரிந்தால் ஒருவர்க்கு அழகு அழியமாட்டாதோ?' என, இராமன் குறுநகை புரிந்து இளையவனை நோக்கி, 'இவளை நீ அரிவானேன்?' என்றனன். இளையவன் சக்கரவர்த்தித் திருமகன் பாதங்களை வணங்கி நின்று, 'இவள் தன் வாயிற் பெய்துண்ணவோ? அல்லது தீவினை செய்து உழல்பவராகிய அரக்கர் கூட்டம் புறத்தே உளதோ அறியேன், இவள் விரைந்து ஓடிவந்து சானகியாரை வலிதிற் கைக்கொண் டெடுக்கச் சென்றாள். நான் அதுகண்டு இவ்வாறு செய்தேன்' என்றான். அச் சொல் இரகுநாயகன் செவியிற் புகுமுன்னே, 'அயோத்தி நாட்டரசே, மாற்றவளைக் கண்டால் என் மனம் வருந்தாதோ!' என்று சூர்ப்பணகை சொன்னாள். இரகுநந்தனன்,

பேடிப்போர் வல்லரக்கர்
பெருங்குலத்தை யொருங்கவிப்பான்
தேடிப்போந் தனமின்று
தீமாற்றஞ் சிலவிளம்பி

வீடிப்போ காதேயிம்
மெய்வனத்தை விட்டகல
ஓடிப்போ வென்றுரைத்த
வுரைகடந்தாற் கவளுரைப்பாள். (128)

"இக் காட்டைக் கடந்து ஓடிப்போ" என்று இரகுநந்தனன் சொல்லக்கேட்ட சூர்ப்பணகை, 'நான்முகனே முதலாய அளவற்ற தேவர்கள் இராவணற்குத் திறையிறுக்கும் குடிகளென்றால், 'விரைந்து போய்விடு' என்று என்னைச் சொல்வது நல்லதன்று. உங்களுக்கு வேறாக நின்று யான் சொல்லுஞ் சொல் உண்டு. அது உமக்கு உறுதியைத் தரும். அதைக் கேளுங்கள்' என்று பின் வருமாறு சொல்வாளாயினள்: 'செய்தற்கரிய மூக்கை அரியுண்டாள் என்ற வசைச்சொல் உரைப்பாரை இராவணனே நாக்கரிவான். நீங்கள் என் மூக்கை அரிந்து உங்கள் குலத்தையும் முதலரிந்தீர்கள். உமக்குப் போக்கரிதாகும் உங்கள் அழகை எல்லாம் புல்லிடை உகுத்தீர்கள். கற்புடையாரோ தம் பெருமையைத் தாமே எடுத்துச் சொல்லவு மாட்டார். உம்மிடத்திலுள்ள பேரன்பாலே யான் சொல்கின்றேன். தேவர்களைப் பார்க்கிலும் பெருமிடல் பெற்ற இராவணன் தங்கை இவளாயின் இவள் யாரினும் பெருமிடல் பெற்றவளென்று இளையவனுக்கு நீர் சொல்ல வேண்டும். வானுலகைக் காப்பவர் மண்ணுலகைக் காப்பவர் நாகருலகைக் காப்பவராகிய இவருள் இனி, முதலில் தங்கள் தலைகளைக் காத்து நின்று பிறகு உங்கள் ஊன்களைக் காத்தற்கு உரியர் யாவர்? என் உயிரை நீங்கள் காப்பீராயின் உங்களை யான் காப்பேன்; அல்லாமலும் அவ்விராவணனும் உளர். நானே பெரும்போர் நடக்-

கையில் புறத்தே நின்று காப்பேன், வானிற் சுமந்துஞ் செல்வேன், ஊனைப்போல நறுஞ்சுவையுள்ள கனிகளையுங் கொணர்ந்து தருவேன். நீர் கருதிய வினைத்துந் தருவேன். ஆதலின் உம்மைக் காப்பவரை வெறுத்து என்ன பயன்? பூப்போலும் மெல்லியளாகிய சானகியாற் பெறப்படும் பொருள் யாது? நீர் வல்லீராயின் குலத்தாலும் நலத்தாலும் வேண்டியவற்றை வேண்டியாங்குக் கொணரத்தக்க பலத்தாலும் மதியினாலும் வடிவினாலும் இளமையாலும் நிலத்திலுள்ளாரும் வானத்திலுள்ளாருமாகிய மாதரில் என்னைப்போலச் சொல்லத்தான் வேறு எவர் உண்டு? எனக்கு உயிருதவி செய்து என்னுடன் இருங்கோள்' என்று பலவாறாகச் சொல்லி வேண்டினள். இவைகளை எல்லாம் கேட்ட ரகுவீரன், 'அடி அரக்கி, உன் தாயைப்பெற்ற தாடகையைக் கொன்ற பாணம் என்னிடத்திருக்கின்றது: நானே அரக்கர் வருக்கத்தை யெல்லாம் கொல்லவே இங்கே வந்திருக்கின்றேன். உன் புல்லிய ஒழுக்கத்தை அகலப்போடு, நான் தயரதன் மகன், தாயின் சொல்லை மேற்கொண்டே காட்டுக்கு வந்தேன், வேதியர்களும் மாதர்களும் வேண்டப் படை மிகுந்துள்ள அரக்கர் வருக்கத்தைக் கொன்று களைய விருக்கின்றேன்; அவ்வாறு செய்துவிட்டே நான் திருவயோத்திக்கு மீள்வேன். நெறிவழியே செல்லாத அரக்கரெதிரே தேவர்களே நிற்கமாட்டாமற் போயினர். இருவர் மானிடர், இவரோ போர்புரிவர் என்று நினைப்பாயாயின், உன்னால் மிகுந்த சூரரென்று குறித்திருக்கும் அரக்கர் வருக்கத்தையெல்லாம் இங்கே கொண்டுவந்து போர்செய்யத் தூண்டினாலும் அத்தனைபேரையும் உன் கண் முன்னே கொன்று களைவேன்' என்றனன். அதற்

குச் சூர்ப்பணகை, 'மேல்வாய் தோன்றும்படி கோரப் பற்கள் மிகுதியாகத் தோன்றுகின்ற வாயளொன்றுதா என்னைச் சிறிது பார்ப்பையேயாயின் கொல்லலாம். மாயங்கள் குறித்தனவே கொள்ளலாம், வெற்றியும் பெறலாம், மற்றுமுள்ள வினையனைத்தும் சடக்கலாம், அயோத்தி நகரத்தரசனே கேள்: 'மூங்கில் போன்ற தோளையுடையாளைக் கைவிடமாட்டீரென்றாலும், நான் மிகையோ; கள்வராகிய பொறியில்லாத வெற்றிபெற்ற அரக்கருடனே போர்செய்ய அமைந்தீராயின் அவர் செய்யும் மாயைகள் எல்லாம் தடுப்பேன். உலகத்தில், “பாம்பறியும் பாம்பின்கால்” என்று வழங்கும் பழமொழியையும் கவனிக்கமாட்டேன் என்கிறீர்கள். அரக்கருடன் போர்க்களங்கொள்ள ஒரு மூவரும் கலந்தோமாயின் குளம்பறித்து விடுவோமென்பதுவே பொருந்திய கொள்கை என்பதைச் சிறிதும் எண்ணமாட்டீர்' என்று சொல்லிக்கொண் டிருந்தனள். அப்போது இளையவன் தன் கையிலிருந்த வேலைப் பார்த்துக்கொண்டே சீராமனிடத்தில், 'இவளை இங்கு நாம் கொன்று களையாதிருந்தால் பெரிதும் இடர்ப்படுப்பாள்; நுமது கட்டளை யாது?' என்று வினவினன். சீராமன், 'இவள் இந்த இடத்தைவிட்டுப் போகாமலிருப்பாளேயானால் அப்படியே செய்யலாம்' என்றனன். அதைக் கேட்ட அரக்கி, 'நான் இங்கிருப்பேனேயாயின் உயிரிழப்பேன' என்று நெஞ்சில் நினைந்து, காற்றினும் நெருப்பினுங் கடுமையானவனாகிய கரன் என்னும் பெயருள்ள உங்களுக்கு யமன் போன்றவனை இப்பொழுதே அழைத்துக்கொண்டு வருகிறேன் பாருங்கோள்' என்று சொல்லிப் போய் விட்டாள். போனவள்,

இருந்த மாக்கரன் றாளிணை யின்மிசை
சொரிந்த சோரியள் கூந்தல டம்பெனத்
தெரிந்த மூக்கினள் வாயினள் செக்கர்மேல்
விரிந்த மேக மெனவிழுந் தாளரோ. (129)

அதைக் கண்ட கரன் தன் வாக்கினைப்போலும் புகைமூண்டும் வாயினை யுடையானாய், 'உன்னைக் கூசாமல் இவ்வாறு செய்தவர் யார்?' என்று கேட்க, அரக்கி,

இருவர் மானுடர் தாபத ரேந்திய
வரிவில் வாட்கையர் மன்மதன் மேனியர்
தரும நீரர் தயரதன் காதலர்
செருவி னெரு நிருதரைத் தேடுவார். (130)

ஒன்று நோக்கல ருன்வலி யோங்கறன்
நின்று நோக்கி நிறுத்து நினைப்பினர்
வென்றி வேற்கை நிருதரை வேரறக்
கொன்று நீக்குது மென்றுணர் கொள்கையார். ()

மண்ணி னுக்கரு வானினின் மற்றினில்
எண்ணி நோக்குறின் யாவர்க்கு நோக்கலாப்
பெண்ணி னுக்குடை யாளொரு பேதையென்
கண்ணி னுக்கி யுரைப்பருங் காட்சியாள். (132)

கண்டு நோக்கருங் காரிகை யாடனைக்
கொண்டு போவ லிலங்கையர் கோக்கென
விண்டு மேல்விழுந் தேனை வெகுண்டவர்
துண்ட மாக்கினர் மூக்கெனச் சொல்லினள். ()

அதைக் கேட்டுக் கோபமூண்ட கரன், 'உன்னை இவ்வாறு செய்தாரைக் காட்டு' என்று எழுந்தான். பின்பு அருகிருந்தவரைப் பார்த்து, 'தேரைக் கொண்டு

வாருங்கள்' என்று சொல்ல, அங்கிருந்த பதினன்கு சேனைவீரர்கள் எழுந்து நின்று, 'இக் குற்றேவலை நாங்களே செய்யக் கட்டளையிட வேண்டுகின்றோம்; தேவர்கள்மேற் போர் செய்யவா போகின்றீர், அல்லவே, மானுடர்மேல் வந்த போரேயாதலின் நாங்களே போகிறோம் எங்களுக்கு விடைகொடும்' என்று சொல்லினர். அதைக்கேட்ட கரன், 'நன்றாய்ச் சொன்னீர்கள், நான் அக் குழந்தைமேற் போர்செய்வேனாயின் தேவர்கள் நகை செய்யார்களா? நீங்களே அவர்களைப் போய்க் கொன்று அவர்கள் உதிரத்தைப் பானஞ் செய்து வெற்றிகொண்டு வாருங்கள்' என்று சொல்லினன். அவ்வாறு சொன்ன கரனைப் பதினன்கு சேனை வீரர்கள் பணிந்தெழுந்து மகிழ்ச்சியுடன், யமன் அனுப்பிய தூதெனை வெட்கங் கெட்ட சூர்ப்பணகை முன்னே செல்ல, அவள் பின்னே சென்று சக்கரவர்த்தித் திருமகனர் இருக்கும் இடத்தை அடைந்தார்கள். அங்கே யிருக்கும் ஆயிரமோலி அமலனுதிப்பிரான் மலரடியை மனத்திலிருத்தும் இறைவனை சூர்ப்பணகை அரக்கர்கட்குக் காட்டி நின்றாள்.

அரக்கர்கள் அங்கே போனதும், 'மோதுங்கோள், எறியுங்கோள், பாசத்தால் பிடியுங்கோள், கட்டுங்கோள்' என்று சொல்லி, அச் சோலை முழுதுஞ் சுற்றிக்கொண்டார்கள். ஸ்ரீராமனே இளையவனைப் பார்த்து, 'சீதையைக் காத்துக்கொண்டிரு' என்று சொல்லி விட்டு, கற்பகம் பூத்ததுபோலும் விளங்கும் தன் கையால் வில்லை வளைத்து நாணேற்றி அச் சாலையை நீங்கி, 'இவ்வழியாக வாருங்களடா' என்று அதட்டிப் போர் செய்யத் தொடங்கி, 'மழுவும் வாளும் முத்தலைச் சூலமு-

முடைய யமன்போன்ற ஆற்றலையுடையவர்களாகிய அப்பதினன்கு பேருடைய விற்பிடித்த கைகள் இருபத்தெட்டையும் பாணங்களால் வீழ்த்தித் தள்ளினன். மராமரங்கள் வேர்பறித்து வீழ்ந்தாற்போல அவர்கள் தோள்களற்று வீழவே, அவர்கள் மார்பின் வலியால் தாக்கிப் போர்செய்தற்கு நெருங்கினர். அதைக் கண்டு இரகுநாயகன் விடும்பாணங்கள் அத்துஷ்டர்களுடைய தலைகளை அறுத்துத் தள்ளின. தன்னுடன்வந்த பதினன்கு சேனைவீரர்கள் இறந்துபட் டொழிந்ததைக் கண்ட சூர்ப்பணகை ஓடிப்போய் நடந்த விஷயத்தை எல்லாம் கரனுக்கு எடுத்துச் சொன்னாள். கரனும்,

அங்க ரக்க ரவிந்தழிந் தாரெனப்
பொங்க ரத்தம் விழிவழி போந்துக
வெங்க ரப்பெய ரோன்வெகுண் டான்விடைச்
சங்க ரற்குந் தடுப்பருந் தன்மையான். (134)

கரன் தானே தன் தேரைக் கொண்டுவரும்படி சொன்னதே யன்றிப் 'போர்க்குச் செல்ல வெற்றி முரசறையுங்கோள்' என்றான். அப்படிப் பேரிகை யோசை கேட்டவுடன் மாரிக்காலத்தின் மேகம் அளவில்லாதன வந்தாற்போலத் தேர்ச்சேனை திரண்டன; தேவர் உலகமும் நாகர் உலகமும் நடுங்கின; அச்சேனை போர்க்கெழு முரசமே முழக்கமாகவும் வீரர்தோள்களே பெரிய அலைகளாகவும் இறுதிக் காலத்தில் கருங்கடல் கால்கிளர்ந்தாற்போல ஆரவாரித்து எழுந்தது; காடு நெருங்கி விண் மூடிக்கொண்டாற்போல நீண்டு எங்கும் ஓங்கிய கொடிகள் 'எங்கள் பசி யோடிப் போம்' என்று சந்தோஷித்தெழுந்து துள்ளியாடிக்கொண் டிருக்கின்ற அலகைகளைப்போல ஆடின;

மதயானைக் கூட்டமே போன்ற அரக்கர்கள் கையி-லுள்ள வாளொடு வாள் தேய்தலால் சிந்துகின்ற தீப்-பொறி கான் எங்கும் பரந்தது. ஆதிசேஷனும் அச்-சேனையின் பாரத்தைச் சுமக்க முடியாமல் தலைநெளித்-துக்கொள்ள உலகத்தில் உள்ள மலைகளெல்லாம் ஒரு புறத்தில் வந்து சேர்ந்தாற்போல, புலியின் கூட்டமோ மேகக்கூட்டமோ, யானைக்கூட்டமோ, மலைகளோ அல்லது சிங்கத்தினமோ என்று சொல்லத்தக்க பல பதினாயிரம் படைவீரர்கள் போயினர். தூஷணன் திரிசிரன் முதலிய வீரர்களும் வந்து கலந்தனர். சேனை கள் நெருங்கிச் செல்வதனால் காடுகள் தூள்பட்டன, மலையிற் சஞ்சரிக்கும் மேகங்கள் தூகள் பட்டன, கடல்கள் தூர்ந்தன.

வந்தது சேனை வெள்ளம்
வள்ளியோன் மருங்கு மாய
பந்தமா வினையை மாளப்
பற்றறு பெற்றி யோர்க்கும்
உந்தரு நிலைய தாகி
யுடனுறைந் துயிர்க டம்மை
அந்தகர்க் களிக்கு நோய்போ
லரக்கிமுன் னாக வம்மா. (135)

வாத்தியங்களின் முழக்கத்தால் மேகக் கூட்டங்-கள் அச்சங்கொள்ளவும், விற்களின் நாணொலியால் இடிகளெல்லாம் பயந்து கலக்கமடையவும், சிங்க கர்ச்சனை முதலிய ஆரவாரத்தால் கடல் அஞ்சிநடுக்க-மடையவும், அரக்கர் சேனை இராமலக்ஷ்மணர்வசிக்கு-மிடத்தை யடைந்தது. இலக்குவன் சேனை யடைந்-ததும்,

மின்னின்ற சிலையன் வீர
கவயத்தன் விசித்த வாளன்
பொன்னின்ற வடிம்பின் வாளிப்
புட்டிலன் புகையு நெஞ்சன்
நின்னின்று காண்டி யான்செய்
நிலையென விரும்பி நேரா
முன்னின்று பின்வந் தோனை
நோக்கினன் மொழிய லுற்றான். (136)

ஸ்ரீராமன், போர்மேற் செல்வேன் என்ற இளைய பெருமாளைப் பார்த்து, 'நெறிகொண்ட மாதவருக்கு முன் நான் நிருதர் உயிரைக் கொல்வேன் என்ற சொல் பழுதாகாவண்ணம் நானே கொன்றொழிக்கின்றேன், நீ சீதையைக் காத்துக்கொண்டு இங்கேயே யிரு' என்று சொல்லி, வாளிகளடர்ந்த புட்டிலைக் கட்டிக்கொண்டு, வில்லேந்தி, மார்பிற் கவசமணிந்து, உடைவாளைக் கட்டிக்கொண்டு போர்க்கு ஆயத்தமாயினன். அதைக்கண்ட இலக்குவன்,

மீளருஞ் செருவின் விண்ணு
மண்ணுமென் *மேல்வந் தாலும்
நாளுலந் தழியு மென்றே
நானுனக் குரைப்ப தென்னே
ஆளியின் றுப்பி னாயிவ்
வமரெனக் கருளி நின்றென்
தோளினைத் தின்னு கின்ற
சோம்பினைத் துடைத்தி யென்றான். ()

என்றன னிளைய வீர
னிசைந்தில னிராம னேந்தும்
குன்றன தோளி னுற்ற
வுள்ளத்தி னுணரக் கொண்டான்
அன்றியு மண்ண லானை
மறுக்கில னங்கை கூப்பி
நின்றன னிருந்தான் கண்ணீர்
நிலனுறப் புலர்கின் றுள்பால். (138)

குழையுறு மதியம் பூத்த
கொம்பினுள் குழைந்து சோரத்
தழையுறு சாலை நின்றுந்
தனிச்சிலை தரித்த மேரு
மழையென முழங்கு கின்ற
வாளெயிற் றரக்கர் காண
முழையினின் றெழுந்து செல்லு
மடங்கலின் முனிந்து சென்றான். (139)

அரக்கர் குலங்களை அழிக்கும்படி குகைக்குள் இருந்த சிங்கம் குஞ்சரங்களைத் தேடி வருவதேபோல் பர்ணசாலையி னின்றும் வெளியே வந்த தாசரதியை, மூங்கிலிற் றோன்றிய தீ அம்மூங்கிலை யழிப்பதுபோலத் தான் தோன்றிய குலத்தை அழிக்கவந்த கொடியவளாகிய சூர்ப்பணகை கரனுக்குச் சுட்டிக் காட்டினாள். அப்படிக் காட்டக்கண்ட கரன், 'போர்க்கு வந்தவனோ மனிதனொருவன், நம்முடன் வந்த வலிமை மிகுந்த சேனைக்கு ஈடு இடங் கொள்ளாதே! அப்போது பான் அடைந்த வெற்றி என்னும்? யாவரும் பார்த்துக் கொண்டிருங்கள். மாமிசந் தின்ந்த இவனை நான் இப்போதே கொன்று களைகின்றேன்' என்று சொல்-

வினன். அச் சொல்லைக்கேட்ட அகம்பன் என்பவன் 'நமக்குச் சகுனங்கள் நல்லனவாகத் தோன்றவில்லை. மேகங்கள் குமுறி இரத்த மழை பெய்கின்றன. பகலில் சூரியனைப் பரிவேடஞ் சூழ்ந்திருக்கின்றது. உன் கொடியின்மேல் காக்கைக் கூட்டங்கள் சண்டை செய்து வீழ்ந்து புலம்புகின்றன. வாளின் வாய்களை ஈக்கள் வளைக்கின்றன. வெற்றி வீரருடைய தோள்களும் கண்களும் இடந் துடிக்கின்றன. வீரர்களுடைய குதிரைகள் தூங்கிவிழுகின்றன. நாயும் நரியுங்கூடி ஊளையிடுகின்றன. பெண் யானை மதம் பெருக்கெடுத்துப் பொழிய, ஆண் யானையினுடைய தந்தங்கள் முறிபடுகின்றன. உலகம் அசைகின்றது. வானில் இடிவிழுகின்றது. பெருந்திசைகள் கரிகின்றன. எல்லாச் சேனைவீரர் முடிமாலைகளிலும் புலால் நாற்றம் வீசுகின்றது'

இனைய வாகலின் மானுட
னொருவனென் றிவனை
நினைய லாவதொன் றன்றது
நீதியாம் நின்ற
வினையெ லாஞ்செய்து வெல்லலாந்
தன்மைய னல்லன்
புனையும் வாகையாய் பொறுத்தியென்
றுரையெனப் புகன்றான். (140)

உரைத்த வாசகங் கேட்டலு
முலகெலா முலையச்
சிரித்து நின்றவென் சேவகம்
தேவரைத் தேய

அரைத்த வம்பியா மலங்கெழிற்
றோளமர் வேண்டி
இரைத்து வீங்குவ மானிடற்
கெளியவோ வென்றான். (141)

அத்தருணத்தில் எறிபடைகளை யிடிபோல் முழங்க வீசிச் சேனைகள் சக்கரவர்த்தித் திருமகனை வளைந்தன. அவ்வாறு வளைந்த காலையில் சீராமனது கை வில்லும் வளையப் போர் விளைந்தது. சூலமற்றாரும், மழுவும் வாளுமற்றாரும், தண்டு பிண்டி பாலமற்றாரும், பாணங்க ளொழிந்தாரும், வேற்படை நீங்கினாரும், விற்கனற்றாரும், பல்லயமற்றாரும் கொடியணிந்த தேரொடு தோமரமிழந்தாரும், யானையிழந்தாரும், அச்சுடனே தேர் கொடி முதலியவைக ளிழந்தாரும், குதிரைக ளிழந்தாரும், முடியிழந்தாரும், முசலந் துணிந்தாருமாய் இப்படிப் பலவிதமாகப் போரில் அரக்கர்கள் சின்னபின்னப்பட எங்கே பார்த்தாலும் இரத்த வெள்ளமும் பிண மலையுமாக நிறைந்தன. கவந்தபந்தங்கள் கூத்தாடின.

மருட ருங்களி வஞ்சனை வளையெயிற் றரக்கர்
கருட னஞ்சுறு கண்மணி காகமுங் கவர்ந்த
இருட ரும்புறத் திழைதையர் பழுதுறற் கெளிதே
அருட ருந்திறத் தறனன்றி வலியதுண் டாமோ.

இஃது இவ்வாறாகவே போர்செய்யச் சீராமபிரானை அரக்கர்கள் எல்லாம் ஒன்றாகக் கூடி எதிர்த்தார்கள். அப்போது இரகுநாயகன் தன் வில்லை வளைத்து நாணேற்றிப் பாணப்பிரயோகஞ் செய்தான். அப் பாணங்கள் வானத்திற் செல்வனவும், கடற்-

புறத்தே யுள்ள இடத்திற் செல்வனவும், சந்திரனைச் சூழ்ந்த நக்ஷத்திர மண்டலத்திற் செல்வனவும், காட்டிற் செல்வனவும், மலையிற் செல்வனவும், திசை யானையிடத்திற் செல்வனவும், மண்மேலனவும், மலைமேலனவும், விண்மேலனவும், கடலின்மேல் கீழனவும், வெற்றிநாடிய அவுணர்களுடைய மார்பை உருவிச் செல்வனவுமா யிருந்தன. அதனாற் போரிற் சிலர் அயர்ந்தார்கள், சிலர் கழிந்தனர், சிலர் வருந்தினர், சிலர் பெருமூச் செறிந்தனர், சிலர் புரண்டனர், சிலர் உதிர வெள்ளத்தின் மூழ்கினர், சிலர் பாணமழைப் படப் பூமியில் மாண்டார்கள், சிலர் உயிர் துறந்தனர். இப்படி அவ்வரக்க வீரர்கள் மடியக்கண்ட பதினன்கு படைத் தலைவர்களும் மேரு வில்லியாகிய பரமசிவனைத் திரிபுராதிகள் முன்னளில் வளைத்துப் போர்செய்தவாறேபோல் இரகுநாயகனை மதியாது கண்ணில் தீப்பொறிசிதற வருத்தி வளைந்து போர்செய்யத் தொடங்கி, அவன்மேற் பல பாணங்களை எய்தார்கள். சிலர் பல படைகளை எறிந்தனர், சிலர் மழுவால் வீசினர், சிலர் எழுவால் போர் செய்ய வளைந்தனர். இப்படிப் போர் செய்தாரை எல்லாம் இரகுநாயகன் பதினன்கு பாணங்களை விடுத்து அவர்கள் கையிற் பிடித்த விற்களைப் பொடிப் பொடியாக்க, அவர்கள் வில்லிழந்து வெகுளிமேற்கொண்டு மலைகளைப் பிடுங்கி ஆகாயமார்க்கத்தி னின்றுகொண்டு எறிந்தார்கள். அதைக்கண்ட இரகுநாயகன் தன் புருவச் சிலையையும் கைச்சிலையையும் வளைப்ப, அம் மலைகள் வந்தவழி போனவழி தெரியாமற் போயின. பதினன்கு வீரர்களும் அவ்வாறுயினர். இப்படிப் படைத்தலைவர் படவே திரிசிரனென்னும் பெயர்கொண்ட அரக்கன், இரகுநாய-

கன் முன்றோன்றிப் பாணப் பிரயோகஞ் செய்ய அவனையும் எதிர்த்து நின்றனன். இரகுநாயகனே அவனோடு வந்த ராக்ஷஸ வீரரை எல்லாம் தன் பாணத்தின் வாய்மையால் தேவராக்கினன். ஸ்ரீராமன் கணையால் கொல்லப்பட்டு தேவர்களோடு சேர்ந்த அரக்கர் வானுலகத்தினின்று போர்க்களத்தில் இராகவன் கணையால் துணிக்கப்பட்ட தங்கள் தேகத்திலுள்ள தோள்களை ஒரு புறத்தில் பேய்பற்றி யிழுப்பதையும் மற்றொரு புறத்தில் நாய்பற்றி இழுப்பதையும் கண்டு சிரித்தார்கள். இரகுவீரனது ஞானாஸ்திரங்கள் பாய்வதனால் பிளவுபட்ட மார்பினையுடைய அரக்கர்கள் பெரிய பாவத்தைத் தாண்டிச் சென்று விண்ணுலகை யடைந்தவர்களாய் அரக்கருடைய சேனையின்கண் நெடிது நேரம் நின்று போர் செய்யும் ஸ்ரீராமபிரானை ஒப்பற்றவனாகிய பரம்பொருளென்று கூறி, உள்ளத்தில் அச்சமடைந்தனர். இதுவேயன்றி,

கைக்கரி யன்னவன் பகழி கண்டகர்
மெய்க்குலம் வேரொடுந் துணித்து வீழ்த்தன
மைக்கரு மனத்தொரு வஞ்சன் மாண்பிலன்
பொய்க்கரி கூறிய கொடுஞ்சொல் போன்றவே.

அழகிய இறகுகளையுடைய அறுபதமாகிய வண்டு, தான் கொண்ட புழுக்களைத் தன் மயமாக்குந் தன்மை போல, ஸ்ரீராமபிரான் மாயச் செயலினையுடைய அரக்கர்களை வளைத்துக்கொண்டு தனது பரிசுத்தமான பாணங்களினாலே அவ்வரக்கர்களைத் தேவர்களாகும்படி செய்தனன். திரிசிரன் தனது தேரை ஆகாயத்திற் செலுத்திப் பேரொலி செய்து பிறகு வானத்தினின்றும் இறங்கி தசரதச் சக்கரவர்த்தியின் தோன்ற

ளாகிய சீராமபிரானது திருமேனி மறைய இடியைப் போலுங் கொடிய பாணங்களைப் பொழிந்தான். இரகு நாயகன் பதினொன்கு பாணங்களை ஏவி அவனேறிவந்த தேரை யழித்து அதைச் செலுத்தும் சாரதியையுங் கொன்றான். பின்னும் இரகுவீரன் அத்திரிசிரனுடைய முத்தலைகளில் இரண்டைத் தன் பாணங்களால் அறுத்துத் தள்ளத் திரிசிரன் தன் தேரழிந்தும் திரிசிரன் என்னும் பேரழிந்தும், தன் ஆற்றல் பிழையாளுய் மேகசாலம்போலக் கணைமாரி பொழிந்தனன். பின்னும் அத் திரிசிரன் இப்படிச் சலியாமற் போர்செய்து தன் வில்லை யிழந்தானுயினும் தான் சிறிதும் மனந் துளங்காமல் மாயப் போர் செய்யத் துணிந்தான். அதைக்கண்ட இரகுவீரன் அவன் தாளிரண்டையுந் தோளிரண்டையும் இரண்டு பாணங்களை விட்டெறிந்தது மல்லாமல், அவன் தலையையும் அறுத்துத் தள்ளினான்.

திரிசி ராவெனுஞ் சிகரமண்
சேர்தலுஞ் செறிந்த
நிருத ரோடினர் தூடணன்
விலக்கவு நில்லார்
பரிதி வாளினர் கேடகந்
தடக்கையர் பரந்த
குருதி நீரிடை வார்கழல்
கொழுங்குடர் தொடக்க. (144)

திரிசிரன் இறந்துபட்டதைக் கண்ட தேவர்கள் கையைப் புடைத்து ஆரவாரித்தனர். பிணமலை சுமக்கின்ற நிலம் குழியுறக் கால் புதைந்து நிணத்தின்மேல் விழுந்து அழுந்துவாரும், பிணத்தின்மேல் விழுந்து

உருண்டு போவாருமாய்ச் சிலர் உயிர்பிழைத்து ஓடி-
னர். சிலர் உதிரவெள்ளத்திற் பாய்ந்து கால் பறித்து
அழிந்தினர். சிலர் உதிர வெள்ளத்திற் புகுந்து நிலை
கொள்ளாமல் பயந்து நீந்தினர். சிலர் கச்சும் வாளும்
தங்கள் காலைத் தொடர்ந்து ஈர்ப்பனவற்றைக் காணு-
மல், அச்சமென்பது ஓர் உருவங்கொண்டாற்போல
நின்று மனம் வருந்தினர். இவ்வாறு திகில் அடைந்து
அரக்கர்கள் போருக்கு ஆற்றுமல் ஓடிப் போக,
தூஷணன்.

அனைய ராகிய வரக்கரை
யாண்டொழிற் கமைந்த
வினைய நீங்கிய மனிசரை
வெருளன்மி னன்ன
நினையு நானுமக் குரைப்பது
முண்டென நின்றே
துனையும் வார்பரித் தேரினன்
றூடணன் சொன்னான். (145)

வச்சை யாமெனும் பயமனத்
துண்டென வாழும்
கொச்சை மாந்தரைக் கோல்வளை
மகளிருங் கூசார்
நிச்ச யம்மெனுங் கவசந்தா
னிலைநிற்ப தன்றி
அச்ச மென்னுமீ தாருயிர்க்
கருந்துணை யாமோ. (146)

இந்திரனேடும் திரிமூர்த்திகளோடும் போர்செய்த
காலத்தில் இராக்கதரில் எவர்கள் முதுகு காட்டி
யோடினர்கள், நீங்கள் உங்கட்குப் பயந்து ஓடிப்-
போன தேவர்களிடத்திலா இவ்வாறு புறங்காட்டி

யோடக் கற்றுக்கொண்டீர்கள்? இங்கு ஒரு மனிதனுக்கு இத்தனை வீரர்களும் இடைந்து போனீர்களே, உங்கள் கையிலுள்ள வாளொடு போய் விழுந்து ஊர் புகலுற்றீரோ?

செம்பு காட்டிய கண்ணினை
பாலெனத் தெளிந்தீர்
வெம்பு காட்டிடை நுழைதொறும்
வெரிநுறப் பாய்ந்த
கொம்பு காட்டுதி ரோதட
மார்பிடைக் குளித்த
அம்பு காட்டுதி ரோகுல
மங்கையர்க் கம்மா. (147)

'சிறந்த பல தேவர்களெதிரிற் பின்னிடாத நீங்கள் இந்த மனிதனெதிரிற் பின்னிடுதலால் அம் மனிதனுக்கு உள்ள யுத்த பராக்கிரமம் தேவர்கட்கும் இல்லை என்னலாம்படி செய்துவிட்டீர். உங்கள் குலத் தலைவன் தங்கைக்கு நேர்ந்த அவமானத்தை நீங்கள் போர் செய்து ஒழிக்க வேண்டுவதா யிருக்க, அது செய்யாமல் அந்த அவமானத்தோடு, நீங்கள் புறங்காட்டி ஓடுதலால் உண்டாகும் அவமானத்தையும் விளைவித்துக் கொண்டீர்கள். நீங்கள் வணிகராக அமைவீர்களோ! வீரவாளைக் கொண்டு அவற்றைக் கொழுவாக மற்றைய வேல்களிற் பொருத்திப் பயிர்செய் நிலத்தை உழுவீர்களோ? எவ்வாறு வாழ்வீர்கள்!' என்று பகர்ந்து,

என்று தானுந்தன் னெறிகடற்
சேனையு மிறைநீர்
நின்று காண்டிரென் னெடுஞ்சிலை
வலியென நேராச்

சென்று தாக்கினன் றேவரு
மருள்கொண்டு திகைத்தார்
நன்று காத்தியென் றிராமனு
மெதிர்செல நடந்தான். (148)

அப்போது தூஷணன் படையிலுள்ள யானைகளிற் சில கோடு இழந்தன, தேர்களிற் சில, கொடி, கொடிச்சீலை, அச்சு முதலிய உறுப்பிழந்தன; நெல்லுடறுப்புண்டாற்போல சில குதிரைகள் கழுத்தறுப்புண்டன. சில பாணங்கள் அரக்கர் உடலிற் புகுந்து உருவிச் சென்றன; கச்சையும் கவசமும் இழந்து அருவியாற்று ஒழுக்கேபோற் சிலர் உடம்பினின்றும் உதிரவெள்ளம் ஒழுகக் கேடகத் தட்டுடனே சில பாணங்கள் உடம்பை யுருவிச் சென்றன. இவ்வாறு தூஷணனுடைய படைவீரர்களும் தூஷணனும் புங்கானுபுங்கமாக விட்ட படைக்கல மாறவும் அவ் வரக்கருடைய சேனைக்கடல் வரளவும் இரகுநாயகன் குறைத்துத் தள்ளினன். தேவர்கள் ஆரவாரித்து எழுந்தனர். உதிரவெள்ளமோ மலைகளையும் மரங்களையும் இழுத்துக்கொண்டு ஓடின. இராகவனது பாணங்களோ திசைகள்தோறும் தொடர்ந்து அரக்கர் வெள்ளத்தைப் புவியில் புரட்டின. நிணத்தை யுண்டு அலகைகளின் வயிறு நிரம்பின. போரை விரும்பி வந்தவரெல்லாம் அழிந்தனர். யமனோ அவ் வரக்கர் ஆவியைப் பிடித்துப் பிடித்து மெய்ம்மறந்தான். இவ்வாறு சேனைகள் மடிவதைக் கண்டு தூஷணன் தன் தேரை அரக்கர் பிணக்குன்றின்மேல் விரைவாகச் செலுத்தித் தானும் அரிதின் அடைந்து யமனெதிரே ஆவி சென்றாற்போல இராமபாணத்தை எதிர்த்து நின்றனன்.

சென்ற தேரையுஞ் சிலையுடை
மலையெனத் தேர்மேல்
நின்ற தூடணன் றன்னையு
நோக்கிய நிமலன்
நன்று நன்றுநின் னிலையென
வருளினை நயந்தான்
என்ற காலத்தவ் வெய்யவன்
பகழிமூன் றெய்தான். (149)

தூஷணன் விட்ட மூன்று பாணங்கள் இராகவனது நெற்றியிற் பூண்டிருக்கும் விரபட்டத்தைத் தேவர்கள் வருந்த வெட்டித் தள்ளின. இதைக்கண்ட இராகவன் புன்முறுவல் செய்து, பகைவன் எய்த காலமும் வலியும் நல்லவென்று நினைந்து, அவனது வேகத்தேர் அழிய அழித்து, கையிற் பிடித்திருந்தவில்லையும் கவசத்தையும் அறுத்தான். இவ்வாறு போர்புரிந்து,

தேவ ரார்த்தெழ முனிவர்க
டிசைதொறுஞ் சிலம்பும்
ஓவில் வாழ்த்தொலி நாற்கடன்
முழக்கென வோங்கக்
காவ டாவிது வல்லையே
னீயெனக் கணையொன்
றேவி னனவ னெயிறுடை
நெடுந்தலை யிழந்தான. (150)

வேறு

தம்பிதலை யற்றபடி யுந்தய ரதன்சேய்
அம்புபடை யைத்துணிப டுத்தது மறிந்தான்
வெம்புபடை விற்கைவிச யக்கரன் வெகுண்டான்
கொம்புதலை காட்டியகு லக்கரி கடுப்பான். (151)

அந்தகனு முட்கிட வரக்கர்கட லோடும்
சிந்துரம்வ யப்புரவி தேர்திசை பரப்பி
இந்துவை வளைக்குமெழி லிக்குலமெ னத்தான்
வந்துவரி விற்கைமத யானையை வளைத்தான். (152)

கரன் தன்னைச் சூழ்ந்துகொள்ளவே சீராமபிரான் தன் வில்லினின்றும் பாணங்களைப் பிரயோகஞ் செய்தான். அரக்கர்கள் மாயப்போர் செய்தனர். சீராமன் விட்ட பாணங்கள் :

அன்றிடைவ ளைந்தவர்கு லங்களோ டடங்கச்
சென்றலைவு றும்படி தெரிந்துகணை சிந்த
மன்றிடைந லிந்துவலி யோர்கெளி யோரைக்
கொன்றனர் நுகர்ந்தபொரு ளிற்கடிது கொன்ற ()

தன் சேனைகள் போரில் மாள்வதைக்கண்டகரன், நிணச்சேறு அடர்ந்த உதிர வெள்ளத்தின் நடுவில், நெடுங்கடலிலே மந்தரமலை தனியே நிற்பதுபோல நின்று, தேரிலேறி இராமனை எதிர்த்தான். இராகவனும் தன்னை எதிர்த்த கொடியவனாகிய கரன்மேல் பாணங்களை ஆராய்ந்து எடுத்து எறிந்தான். கரனோ தீயுருவினவாயும் காற்றின் விசையினவாயும் கொடியனவாயுமுள்ள ஆயிரம் பாணங்களை எய்யவே, இராகவனும அவ்வாறே ஆயிரம் பாணங்களை விட்டு, அவைகளை அறுத்துத் தள்ளினான். பிறகு ஊழித் தீப் போன்ற ஒன்பது பாணங்களைக் கரன்மீது இராகவன் பிரயோகஞ் செய்தான். கரனும் அவ்வாறே அத்தனை பாணங்கள் எவி அவைகளை யறுத்துத் தள்ளினான். கரன் மாயப் போர் விளைத்து சீராமனது திருவுருவைப் பாண மழை பெய்து மறைத்தான். தேவர்கள் கரனது போர்த்திறலைக் கண்டு ஓடி ஒளித்தனர்.

இராமனும் கோபங் கொண்டான். பகைவனை இப்போதே முடிப்பேன் என்னும் எண்ணத்துடன வில்லிற் கணைதொடுத்து, தோளுற வாங்கிவிடுக்க இடியோசைபோன்ற சத்தத்துடன் அவ்விராமன் பிடித்த வில் ஒடிந்தது. தேவர்கள் இராகவன் பிடித்திருந்தவில் ஒடிந்ததைக் கண்டு நெஞ்சந் துளங்கி வருந்தினார்கள். ஸ்ரீராமன் வில்லொடிந்து தன்னந் தனியே யிருப்பதற்குச் சிறிதேனும் அஞ்சாமல், *தன் கையைப் பின் பக்கத்திற் சேர நீட்டினான். அதைக் கண்டு அவன் கருத்தினை யறிந்தாற்போல பரசுராமரிடத்தே முன்னே பெற்றுத் தான் சேமித்து வைத்திருந்த வில்லை வருண பகவான் கொண்டு வந்து கொடுத்தான். அப்படி வருணன் கொடுத்த வில்லை இராகவன் கையில் ஏந்திய போது நன்னெறி பற்றி யொழுகாதவர்கட்கெல்லாம் இடக்கண்ணும் இடத்தோளும் துடித்தன. இராமனோ அவ் வில்லில் நாணேற்றிக் கூற்றுவனும் அஞ்சும்படி குனித்து எதிர்ந்து நூறு பாணங்களை விடுத்து அரக்கன் ஏறியிருந்த தேரை யழித்தான். தேரழியவே கரன் அந்தரத்தில் ஆரவாரித்து எழுந்து, தன் கையி லிருந்த பாணங்களை யெல்லாம் இராமபிரானது மந்தர கிரிபோன்ற தோளின்மேல் மழைபோற் சொரிந்தான். தசரதராமனோ சுடுகின்ற கொடிய பாணங்களைத் தூணியினின்றும் எடுத்துப் பொழிந்து அரக்கனது வலக்கையையும் தோளையும் அறுத்துத் தள்ளினான். வலக்கை வீழ்ந்துபோதலும் கரன் தன் இடக்கையால் வெற்றியைத் தரும் உலக்கையை எடுத்துச் சுழற்றி எறிந்தான். ஸ்ரீராமன் அவ் வுலக்கையை ஒரு கொடிய பாணத்தால் விலக்கினான். விடந்தங்கிய பல் லொடிந்தபின்பு, பாம்பு கோபங்கொண்டு சீறியது போன்று

தன் வல்லமையால் கரன் ஓர் மராமரங் கையில் வாங்கி வந்து எதிர்த்தான். இராமபிரான் அவன்மேல் ஒரு பாணத்தைச் செலுத்தினன்.

வரம ரக்கன்ப டைத்திலின் மாயையின்
உரமு டைத்தன்மை யாலுல கேழையும்
பரமு ருக்கிய பாவத்தி னல்வலக்
கரமெ னக்கரன் கண்டமுற் றனரோ. (154)

கரன் கண்டதுண்ட மடைந்ததைக் கண்டவுடன், தேவர்கள் ஆரவாரித்து எழுந்து ஆடிப்பாடி மலர் மழை பெய்து தூர்த்தனர். சீராமபிரானும் சூரியன் உலகிற் படர்ந்த பனிப்படலத்தினின்று நீங்கி விளங்கினாற்போல விளங்கினன். அப்போது காட்டிலுள்ள முனிவர்கள் முறை முறையாக வந்து நெருங்கப் போரை நாடித் தன் ஆருயிரன்ன கணவன் நடக்கத் தன்னந் தனியேயிருந்த சீதையிடம் இராமனு மடைந்தான்.

விண்ணி னீங்கிய வெய்யவர் மேனியில்
புண்ணி னீரும் பொடிகளும் போயுக
அண்ணல் வீரனைத் தம்பியு மன்னமும்
கண்ணி னீரினிற் பாதங் கழுவினர். (155)

முகூர்த்தம் ஒன்றில் கரன் முதலிய அரக்கரை யெல்லாங் கொல்ல, அவர்கள் உடம்பினின்றும் பெருகுகின்ற உதிரவெள்ளம் ஓடவும், தேவர்கள் வாழ்த்தெடுக்கவும் இரகுநாயகன் எழுந்தருளி யிருந்தான்.

இங்கு இப்படியிருக்க, இராவணன் தங்கையாகிய சூர்ப்பணகை தன் கையாலே வயிற்றில் அறைந்துகொண்டு இருள்போன்ற கரனைத் தழுவி எடுத்து

அவனது உதிரவெள்ளத்திற் புரண்டு அழுது நின்று "நானே மனத்தி லாசையை உண்டாக்கிக் கொண்டேன்; அவ்வளவுடன் போகாமல் அவ் வாசையால் என் மூக்கினோடு முடிய முடிந்திலேன்; வாக்கினால் உங்கள் வாழ்க்கையும் போக்கிவிட்டேன்" என்று போனாள்.

அலங்கல் வேற்கை யரக்கரை யாசறக்
குலங்கள் வேரறப் பான்குறித் தாளுயிர்
கலங்கு கூறைவன் போர்நெடுங் காலென
இலங்கை மாநகர் நொய்திற்சென் றெய்தினாள் ()

அரக்கர் இறந்ததை மறந்ததுபோல் இராமனது மலைபோன்ற தோளில் வைத்த பேராசை மனத்தை வருத்தச் சகியாமல், சீதையினது தன்மையை உரைப்பேனென்று சூர்ப்பணகை இலங்கை நகரைச் சென்றடைய, அப்போது இராவணன் கொலு வீற்றிருந்தான்.

பண்டலங்கு திசைக்களிற்றின் பணைமருப்பி
　　னிணையொடியப் படர்ந்த பொற்றோள்
விண்டலங்க ளுறவீங்கி யோங்குதய
　　மால்வரையின் விளங்க மீதில்
குண்டலங்கள் குலவரையை வலம்வருவா
　　னிரவிகொழுங் கதிர்சூழ் கற்றை
மண்டலங்கள் பன்னிரண்டு நாலைந்தாய்ப்
　　பொலிந்தவென வயங்க மன்னோ. (157)

வாளுலா முழுமணிகள் வயங்கொளியின்
　　றொகைவழங்க வயிரக் குன்றத்
தோளெலாம் படிசுமந்த விடவரவின்
　　படைநிரையிற் றோன்ற வான்ற

நாளெலாம் புடைதயங்க நாமநீ
ரிலங்கையிற்றான் வாரி யிட்ட
கோளெலாங் கிடந்தநெடுஞ் சிறையன்ன
நிறையாரங் குலவ மன்னோ. (158)

இராக்கதர் அரசர் முதலானோருடைய மணிமுடிகள் படுவதினால் தேய்ந்து தேய்ந்து ஒளி பிறழ்கின்ற வீரகண்டை இராவணனது பாதத்தில் ஆரவாரித்துக்கொண்டிருந்தன. மூவுலகத்து முதல்வர்களும் பெரியோர்களும் செலுத்திய பொன் காணிக்கையின் வரிசைபோல, தேவர்களும் அசுரர்களும் மற்றையோர்களும் ஆசிர்வதித்துத் தூவின நல்ல மலர்க்குவியல்கள் காணப்பட்டன. வருணன் கற்பகத்தருவின் மலரும், வித்தியாதர லோகத்துச் சுரபுன்னையின்மலரும், சுரந்த தேனைத் தூய நீரோடு கலந்து மேகமாகிய துருத்தியில் பெய்து,சபையிலுள்ள மாதர்கள் சேலையில் படப்போகிறது என்னும் அச்சத்தோடும் தூவிக்கொண்டிருந்தனன். வாயுதேவன், பூவின் தாதுக்களும் இராவணனை வணங்கவரும் தேவர் முதலானோருடைய பல மகுடங்கள் ஒன்றோடொன்று தாக்கி எதிர்கின்ற பொற்பொடியும், மணிகளும், முத்துக்களும் தரையில் விழுவதற்கு முன்னமே தாங்கி அப்புறப்படுத்திக் கொண்டே யிருப்பானாயினன். காலக்கடவுள் சூலம் முதலிய படைகளைத் தாங்காமல் தானுடுத்த ஆடையாலும் செய்கையினாலும் வாய் பொத்திக்கொண்டு தோற்கருவி ஒலிக்கும்போதெல்லாம் அருகேவந்து, நாழிகை இத்தனை என்று அறிவித்துக் கொண்டே யிருப்பன். கங்கை முதலிய தீர்த்த கன்னியர் அட்சதையையும் நல்ல மலர்களையும் தூவி மங்கல வாழ்த்துச் சொல்-

வும், ஊர்வசி முதலிய தெய்வ மாதர்கள் நடனஞ் செய்யவும் இராவணன் கொலுவீற் றிருந்தனன்.

இருந்தன னுலகங்க ளிரண்டு மொன்றுந்தன்
அருந்தவ முடைமையி னளவி லாற்றலின்
பொருந்திய விராவணன் புருவக் கார்முகக்
கருந்தடங் கண்ணியர் கண்ணின் வெள்ளத்தே.()

அப்போது இராவணன் தங்கையாகிய சூர்ப்பணகை தலையின்மேல் வைத்த கையை யுடையவளாய் இரத்தம் ஒழுகுவதனால் சிவந்த மூக்கையும் குண்டலமில்லாத காதுகளையும் உடையவளாய், மேகமுழக்கம் தோன்றும்படி திறந்த வாயினை யுடையவளாய்,

முடிமிடை வாய்தலின் முறையிட் டார்கலிக்
கடையுகக் கடலொலி காட்டக் காந்துவாள்
குடதிசைச் செக்கரிற் சேர்ந்த கூந்தலாள்
வடதிசை வாயிலின் வந்து தோன்றினாள். (160)

இவ்வாறு சூர்ப்பணகை வரக் கண்ட அரக்க மாதர்கள் எதிர்ந்து நின்று வயிறு அலைத்து ஓங்கி இரங்கி திரிலோக கண்டகனது தங்கை மூக்கில்லாதவளாய்த் தன்னந் தனியே வரச் சகியாதாராய் பொருக்கென எழுந்து பார்ப்பார்கள். இன்னது சொல்லலாமென்று அறியவும் மாட்டாதவர்களாயினர். அதைக்கண்ட அரக்கர்களிற் சிலர் இடியேறு போலப் பெருங் குரலிட்டுக் கையோடு கையைப் புடைத்துக்கண்கள் நெருப்பெழவிழித்து வாய்மடித்து நின்றார்கள். அவர்களிற் சிலர், 'இவள் இவ்வாறடைந்த அலங்கோலத்தை எண்ணினால் இந்திரன் மேலதாமோ? பிரமன் மேலதாமோ? திருமால் மேலேதானமோ? சந்திரசேகரனாகிய பரமசிவன் மேலே

தான் எண்ணப்படுமோ? இனி முடிவு யார் பாலதோ' என வருந்துவார்கள். சிலர், 'கொல்லத்தக்க பகைவர்கள் யார்தான் இருக்கின்றார்கள்?' என்பார்கள். சிலர், 'இது மூன்றுலகமும் அடங்கிய இவ்வண்டத்தார் செய்த செய்கை என்று எண்ணப்படாது. அப்புறத் தண்டத்தார் செய்கையாகத்தானே முடியும்' என்று சொல்லிக்கொள்வார்கள். 'இவள் இராவணன் தங்கை யென்று சொன்ன பிறகும் அச்சொல்லைக் கேட்டவர்கள், இவளை அடிவணங்கிப் போவாரே யல்லாமல் ஒருவரால் வேறொன்று எண்ணப் போமோ; அப்படியாகையால் இவள் தன்னைத் தானே அரிந்துகொண்டாளோ!' என்பார்கள். 'அப்படியன்று, காட்டில் குற்றமறத் தவஞ் செய்யும் வாழ்க்கையராகிய முனிவர்களுடைய சாபமாகிய நெருப்பினாலேதான் இப்படியானது' என்று சொல்லிக்கொள்வார்கள். எல்லையில்லாத அவ்விலங்கா நகரத்தில் வசிக்கும் இராக்கதப் பெண்கள் எல்லாம் வளையலை யணிந்த கைகளை நெரித்துப் பார்த்துப் பிரையிட்ட பாலென நிலைகலங்கிய சொல்லை யுடையராய் ஒருவர்முன் ஒருவர் ஓடுவாராயினர். முழவினாலும் வீணையாலும் முரளி யென்னும் பண்ணை வாசிக்கின்ற யாழினாலும் குழலினாலும் சங்கினாலும் உண்டாகின்ற ஓசையில்லாமல், என்று மில்லாத ஓரழுகுரல் அவ்விலங்கையிற் பிறந்தது. சிலர் சூர்ப்பணகையைத் தழுவிக் கொண்டனர், சிலர் கண்ணீர் பெருக்கெடுத்து ஓட சூர்ப்பணகை பாதங்களை வணங்கினர். சில மாதர் ஆடல் முதலிய துறந்து தெருவினின்று புலம்பினர். இவ்வாறு இலங்கையி லுள்ள மாதர்களெல்லாம் வருந்திக்கொண் டிருக்க சூர்ப்பணகை நடந்துபோய் இலங்காதிபதியாகிய இரா-

வணன் கொலுவீற்றிருக்கும் அத்தாணி மண்டபத்தை அடைந்து புரண்டழுதாள். அப்போது உலகமெங்கும் இருட்படலம் மூடிக்கொண்டது. அனந்தனும் பயந்து தன் பணாமகுடங்களை நெரித்துக்கொண்டான். அட்டகுலாசலங்களும் நடுங்கின. சூரியனும் அயிர்த்தான். திசை யானைகள் நிலைபெயர்ந்து ஓடின. தேவர்களும் ஒளித்துக்கொண்டனர். இராவணன்,

மடித்தபில வாய்கடொறும் வந்து புகை முந்தத்
துடித்ததொடர் மீசைகள் சுறுக்கொள வுயிர்ப்பக்
கடித்தகதிர் வாளெயிறு மின்கஞல மேகத்
திடித்தவுரு மொத்துரறி யாவர்செய லென்றான். (161)

கானிடைய டைந்துபுவி காவல்புரி கின்றார்
மீனுடைநெ டுங்கொடியி னோனையர் மேல்கீழ்
ஊனுடையு டம்புடைமை யோருவமை யொவ்வா
மானிடர்த டிந்தனர்கள் வாளுருவி யென்றாள். (162)

செய்தனர்கண் மானுடரெ னத்திசை யனைத்தும்
எய்தநகை வந்தெரி சிந்தினக ணெல்லாம
நொய்தவர்வ லித்தொழினு வன்றமொழி யொன்றோ
பொய்தவிர்ப யத்தையொழி புக்கபுக லென்றான். (163)

மன்மதனை யொப்பர்மணி மேனிவட மேருத்
தன்னெழில ழிப்பர்திர டோளின்வலி தன்னால்
என்னதனை யிப்பொழுதி சைப்பதுல கேழின்
நன்மதன ழிப்பரொரி மைப்பினனி வில்லான் (164)

வந்தனைமு னித்தலைவர் பாலுடையர் வானத்
திந்துவின்மு கத்தநெறி நீரிலெழு நாளக்
கந்தமல ரைப்பொருவு கண்ணர்கழல் கையர்
அந்தமி றவத்தொழில ராரவரை யொப்பார். (165)

வற்கலையர் வார்கழலர் மார்பிணணி நூலர்
விற்கலையர் வேதமுறை நாவர்நனி மெய்யர்
உற்கலைய ருன்னையொர் துகட்டனையு முன்னூர்
சொற்கலையெ னத்தொலைவி றாணிகள் சுமந்தார். ()

ஆறுபுல னஞ்சின மரக்கரை யெனச்சென்
றேறுநெறி யந்தண ரியம்பவுல கெல்லாம்
வேறுமெனு நுங்கள்குலம் வேரொடு மடங்கக்
கோறுமென முந்தையொரு சூளுறவு கொண்டார். ()

மாரருள ரேயிருவ ரோருலகின் வாழ்வார்
வீரருள ரேயவரின் வில்லதனில் வல்லார்
ஆரொருவ ரன்னவரை யொப்பவர்க ளையா
ஓரொருவ ரேயிறைவர் மூவரையு மொப்பார். (168)

தராவலய நேமியுழ வன்றயர தப்பேர்ப்
பராவருந லத்தொருவன் மைந்தர்பழி யில்லார்
விராவருவ னத்தவன் விளம்பவுறை கின்றார்
இராமனு மிலக்குவனு மென்பர்பெய ரென்றாள். (169)

மருந்தனைய தங்கைமணி நாசிவடி வாளால்
அரிந்தவரு மானிடர ரிந்துமுயிர் வாழ்வார்
விருந்தனைய வாளொடும்வி ழித்திறையும் வெள்கா
திருந்தனனி ராவணனு மின்னுயிர்கொ டின்னும்.(170)

மூளுமுள தாயபழி யென்வயின் முடித்தோர்
ஆளுமுள வாமவர தாருயிரு முண்டாம்
வாளுமுள தோதவிட முண்டவன் வழங்கும்
நாளுமுள தோளுமுள நானுமுளெ னன்றோ. (171)

புத்துறவு றப்பழி புகுந்ததெனை நாணித்
தத்துறுவ தென்னைமனை னேதளர லம்மா
எத்துயரு னக்குளதி னிப்பழி சுமக்கப்
பத்துளத லைப்பகுதி தோள்கள்பல வன்றே. (172)

என்றுரைசெ யாநகைசெ யாவெரி விழிப்பான்
வன்றுணையி லாவிருவர் மானுடரை வாளால்
கொன்றிலர்க ளாநெடிய குன்றுடைய கானில்
நின்றகர னேமுதலி னோர்நிருத ரென்றான். (173)

வேறு

சொல்லென்றன் வாயிற் கேட்டார்
தொடர்ந்தெழு சேனை யோடும்
கல்லென்ற வொலியிற் சென்றார்
கரன்முதற் காளை வீரர்
எல்லொன்று கமலச் செங்க
ணிராமனென் றிசைத்த வேந்தல்
வில்லொன்றிற் கடிகை மூன்றி
னேறினர் விண்ணி லென்றாள். (174)

ஆயிடை யெழுந்த சீற்றத்
தழுந்திய துன்ப மாழித்
தீயிடை யுகுக்கு நெய்யிற்
சீற்றத்திற் கூற்றஞ் செய்ய
நீயிடை யிழைத்த குற்ற
மென்னைகொ னின்னை யின்னே
வாயிடை யிதழு மூக்கும்
வலிந்தவர் கொய்ய வென்றான். (175)

என்வயி னுற்ற குற்றம்
யாவர்க்கு மெழுதொ ணாத
தன்மைய னிராம னோடுந்
தாமரை தவிரப் போந்தாள்
மின்வயின் மருங்குல் கொண்டாள்
வேய்வயின் மென்றோள் கொண்டாள்
பொன்வயின் மேனி கொண்டாள்
பொருட்டினாற் புகுந்த தென்றாள். (176)

அதைக்கேட்ட இராவணன் "யாரவள்?" என்ன, அரக்கியும், 'ஐயனே, பூதேவி தன் பாதந் தீண்ட என்ன பாக்கியம் படைத்தாள் என்னத்தக்காள்: அவள் பெயரோ சீதை என்று சொல்வார்கள்' என்று அவள் வடிவெல்லாம் சொல்லத் தொடங்கினாள்.

காமரு முரலும் பாடல்
கள்ளெனக் கனிந்த வின்சொற்
றேமலர் நிரந்த கூந்தற்
றேவர்க்கு மணங்கா மென்னத்
தாமரை யிருந்த தையல்
சேடியாந் தரமு மல்லள்
யாமுரை வழங்கு மென்ப
தேழைமைப் பால தன்றே. (177)

மஞ்சொக்கு மளக வோதி
மழையொக்கும் வடித்த கூந்தல்
பஞ்சொக்கு மடிகள் செய்ய
பவளத்தின் விரல்க ளைய

அஞ்சொற்க ளமுதி லள்ளிக்
கொண்டவள் வதன மைதீர்
கஞ்சத்தி னளவிற் றேனுங்
கடலினும் பெரிய கண்கள். (178)

ஈசனார் கண்ணின் வெந்தா
னென்னுமி திழுதைச் சொல்லிவ்
வாசநா றோதி யாளைக்
கண்டனன் வல்ல வாற்றால்
பேசலாந் தகைமைத் தல்லாப்
பெரும்பிணி பிணிப்ப நீண்ட
ஆசையா லழிந்து தேய்ந்தா
னநங்கனவ் வுருவ மம்மா. (179)

தெவ்வுல கத்துங் காண்டி
சிரத்தினிற் பணைத்தி ணோர்கள்
அவ்வுல கத்துங் காண்டி
யலைகட லுலகிற் காண்டி
வெவ்வுலை யுற்ற வேலை
வாளினை வென்ற கண்ணாள்
இவ்வுல கத்தா ளங்கம்
யாவர்க்கு மெழுதொ ணாதாள். (180)

தோளையே சொல்லு கேனோ
சுடர்முகத் துலவு கின்ற
வாளையே சொல்லு கேனோ
வல்லவை வழுத்து கேனோ
மீளவுந் திகைப்ப தல்லாற்
றனித்தனி விளம்ப லாற்றேன்
நாளையே காண்டி யன்றே
நானுனக் குரைப்ப தென்னே. (181)

வில்லொக்கு நுதலென் றாலும்
வேலொக்கும விழியென் றாலும்
பல்லொக்கு முத்தென் றாலும்
பவளத்தை யிதழென் றாலும்
சொல்லொக்கும் பொருளொவ் வாவாற்
சொல்லலா முவமை யுண்டோ
நெல்லொக்கும் புல்லென் றாலு
நேருரைத் தாக வற்றே. (182)

இந்திரன் சசியைப் பெற்றா
னிருமூன்று வதனத் தோன்றன்
தந்தையு முமையைப் பெற்றான்
றாமரைச் செங்க ணானும்
செந்திரு மகளைப் பெற்றான்
சீதையைப் பெற்றாய் நீயும்
அந்தரம் பார்க்கி னன்மை
யவர்க்கில்லை யுனக்கே யையா. (183)

பாகத்தி லொருவன் வைத்தான்
பங்கயத் திருந்த் பொன்னை
ஆகத்தி லொருவன் வைத்தா
னந்தண னவில் வைத்தான்
மேகத்தின் மின்னை முன்னே
வென்றநுண் ணிடையை நீயும்
மாகத்தோள் வீர பெற்றா
லெங்ஙனம் வைத்து வாழ்தி. (184)

பிள்ளைபோல் பேச்சி னாளைப்
பெற்றபின் பிழைக்க லாற்றாய்
கொள்ளைபோ கின்ற செல்வ
மவளுக்கே கொடுத்தி யைய

வள்ளலே யுனக்கு நல்லேன்
மற்றுநின் மனையில் வாழும்
கிள்ளைபோன் மொழியார்க் கெல்லாங்
கேடுசூழ் கின்றே னன்றே. (185)

இன்னவ டன்னை யுன்பா
லுய்ப்பலென் றெடுக்க லுற்ற
என்னையவ் விராமன் றம்பி
யிடைபுகுந் திலங்கு வாளால்
முன்னைமூக் கரிந்து விட்டான்
முடிந்ததென் வாழ்வு முன்னின்
சொன்னபி னுயிரை நீப்பான்
றுணிந்தனெ னென்னச் சொன்னாள். ()

சூர்ப்பணகை இவ்வாறு சொல்லவே இராவண-னுக்கு கோபமும் மானத்தாலாகிய மனக் கொதிப்பும் ஆகிய இவையெல்லாம் பாபம் நின்ற இடத்து நில்லாத செல்வம்போற் பற்றுவிட்டன. தாபமும் விருப்ப-மும் ஆருயிரிற் கலந்து நின்றன.

கரனையு மறந்தான் றங்கை
மூக்கினைக் கடிந்து நின்றான்
உரனையு மறந்தா னுற்ற
பழியையு மறந்தான் வெற்றி
அரனையுங் கொண்ட காம
னம்பினுன் முன்னைப் பெற்ற
வரனையு மறந்தான் கேட்ட
மங்கையை மறந்தி லாதான். (187)

விதியது வலியி ஞனு
 மேலுள விளைவி ஞனும்
பதியுறு கேடு வந்து
 குறுகிய பயத்தி ஞனும்
கதியுறு பொறியின் வெய்ய
 காமநோய் கல்வி நோக்கா
மதியிலி மறையச் செய்த
 தீமைபோல் வளர்ந்த தன்றே. (188)

வேறு

பரங்கி டந்த மாதி ரம்ப
 ரித்த பாழி யானையின்
கரங்கி டந்த கொம்பொ டிந்தி
 ரங்க வென்ற காவலன்
மரங்கு டைந்த தும்பி போல
 நங்கன் வாளி வந்துவந்
துரங்கு டைந்து நொந்து நொந்து
 ளைந்து ளைந்தொ துங்கினன். (189)

வேறு

கூலத்தா ருலக மெல்லாங்
 குளிர்ப்பொடு வெதுப்பு நீங்க
நீலத்தா ரரக்கன் மேனி
 நெய்யின்றி யெரிந்த தன்றே
காலத்தால் வருவ தொன்றோ
 காமத்தாற் கனலும் வெந்தீச்
சீலத்தா லவிவ தன்றிச்
 செய்யத்தா னவ துண்டோ. (190)

தன் தங்கையாகிய சூர்ப்பணகை தன்பாலுய்க்க
எடுத்த சீதாபிராட்டியாரின் அழகைக் கேட்ட இரா-

வணன் அவள்பால் மனம் வைத்து அவளையே நினைந்து நினைந்து வருந்துவானாயினான். அப்போது,

நேரிழை மகளிர் கூந்த
லின்னறுநறை வாச நீந்தி
வேரியஞ் சரளச் சோலை
வேனிலான் விருந்து செய்ய
ஆர்கலி யமுழவந் தந்த
மருந்தெனை வொருவ ராவி
தீரினு முதவற் கொத்த
தென்றல்வந் திறுத்த தன்றே. (191)

காற்றினேன் றன்னை வாளா
முனிதலிற் கண்ட தில்லை
கூற்றுவந் தென்னை யின்னே
குறுகுமாற் குறித்த வாற்றால்
வேற்றருங் கருங்கட் சீதை
மெய்யருள் புனையே னென்றால்
ஆற்றலா லடுத்த தெண்ணு
மமைச்சரைக் கொணர்தி யென்றான். ()

வந்தமந் திரிய ரோடு
மாசற மனத்தி னெண்ணிச்
சிந்தையி னினைந்த செய்யுஞ்
செய்கையன் றெளிவில் நெஞ்சன்
அந்தரஞ் செல்வ தாண்டோர்
விமானத்தி னுரு மின்றி
இந்திய மடக்கி நின்ற
மாரீச னிருக்கை சேர்ந்தான். (193)

வேறு

சந்த மலர்த்தண் கற்பக
 நீழற் றலைவற்கும்
அந்தக னுக்கு மஞ்சு
 வடுக்கு மரசாள்வாய்
இந்த வனத்தென் னின்ன
 விருக்கைக் கெளியோரின்
வந்த கருத்தென் சொல்லுதி
 யென்றான் மருள்கின்றான். (194)

வன்மைத ரித்தோர் மானுடர்
 மற்றங் கவர்வாளால்
நின்மரு கிக்கு நாசியிழக்கு
 நிலை நேர்ந்தார்
என்மர புக்கு நின்மர
 புக்கு மிதன்மேலோர்
புன்மை தெரிப்பின் வேறினி
 யெற்றே புகல்வேலோய். (195)

வெப்பழி யாதென் னெஞ்சு
 முலந்தேன் விளிகின்றேன்
ஒப்பழி வென்றே போர்செய
 வொல்லே னுடன்வாழும்
துப்பழி செவ்வாய் வஞ்சியை
 வவ்வத் துணைகொண்டிட்
டிப்பழி நின்னாற் றீரிய
 வந்தே னிவணென்றான். (196)

இச்சொல னைத்துஞ் சொல்லிய
　　ரக்க னெரிகின்ற
கிச்சி னுருக்கிட் டெய்த்தன
　　னென்னக் கிளவாமுன்
சிச்சி யெனத்தன் மெய்ச்செவி
　　பொத்தித் தெருமந்தான்
அச்சம கற்றிச் செற்றம
　　னத்தோ டறைகின்றான். (197)

மன்னா நீநின் வாழ்வை
　　முடித்தாய் மதியற்றாய்
உன்னா லன்றீ தாழ்வினை
　　யென்றே யுணர்கின்றேன்
இன்னா நெஞ்ச னேனு
　　முரைப்ப விதமென்னாச்
சொன்னா னன்றே யன்னவ
　　னுக்குத் துணிவெல்லாம். (198)

நாரங் கொண்டார் நாடு
　　கவர்ந்தார் நடையல்லா
வாரங் கொண்டார் மற்றொரு
　　வர்க்காய் மனைவாழும்
தாரங் கொண்டா ரென்றிவர்
　　தம்மைத் தருமந்தான்
ஈரும் கண்டாய் கண்டக
　　ராய்ந்தா ரெவரையா. (199)

அந்தா முற்றா னகலிகை
　　பொற்பா லழிவுற்றான்
இந்திர னெப்பா ரெத்தனை
　　யோர்தா மிழிபுற்றார்.

செந்திரு வெப்பா ரெத்தனை
    யோர்நின் றிருவுண்பார்
மந்திர மற்றோ ருற்ற
    துரைத்தாய் மதியற்றாய். (200)

செய்தா யேனுந் தீவினை
    யோடும் பழியல்லால்
எய்தா தெய்தா தெய்தி
    னிராம னுலகின்றான்
வைதா லன்ன வாளிகள்
    கொண்டுன் வழியோடும்
கொய்தா னன்றே கொற்ற
    முடித்துன் குழுவெல்லாம். (201)

வெய்யோர் யாரே வீரவி
    ராதன் றுணைவெய்யோர்
ஐயோ போனா னம்பொடு
    மும்பர்க் கவனென்றால்
உய்வார் யாரே நம்பி
    யனைக்கொண் டுணர்தோறும்
நையா நின்றே னீயி
    துரைத்து நலிவாயோ. (202)

எம்பிக் கும்மென் னன்னைத
    னக்கு மிறுதிக்கோர்
அம்புய்க் கும்போர் வில்லி
    தனக்கு மயனிற்கும்
தம்பிக் குந்நம் மாண்மை
    தவிர்ந்தே சயநிற்கும்
கம்பிக் கும்மென் னெஞ்சவ
    னென்றே கவல்கின்றேன். (203)

நின்றுஞ் சென்றும் வாழ்வன
யாவு நிலையாவால்
பொன்றும் மென்றும் மெய்மை
யுணர்ந்தாம் புலையாடற்
கொன்றும் முன்னு மென்னுரை
கொள்ளா யுயர்செல்வத்
தென்றும் மென்றும் வைகுதி
யையா வினியென்றான். (204)

வேறு

கங்கைசடை வைத்தவ
னெடுங்கயிலை வெற்பேர்
அங்கையினெ டுத்தவெ ன
தாடெழின் மணித்தோள்
இங்கொர்மணி தற்கெளிய
வென்றனையெ னத்தன்
வெங்கணொரி யப்புருவ
மீதுற விடைத்தான். (205)

இதைக்கேட்ட இராவணன், 'மாரீச, நீ நடந்ததைச் சிறிதும் நெஞ்சில் நினைத்தா யில்லையே, என் மனநிலைக்கு அஞ்சாமல் இகழ்ந்தாயே! எனக்கு இளையவளாகிய சூர்ப்பணகை முகமெங்கும் அகழ்ந்தவர்களை நீயும் வாய்விட்டுப் புகழலாமோ? இந்தப் பிழையையும் பொறுத்தேன்' என்றான். இவ்வாறு தன்னைக் கோபித்த இராவணனை நோக்கி மாரீசன், 'உன்னைக் கோபித்துக் கொண்டது உன் சந்தியாரைக் கோபித்ததே யல்லது என்னைக் கோபித்ததன்றே; மேலும், நீ எடுத்த கயிலைமலையையே நினைத்தாயாயின் அவ்விறைவன் வில்லாகக் கொண்ட மலையைக் காட்டி

'இதை வலித்தி' என்று சனகன் சொல்ல, அதைச் ஸ்ரீராமன் வாரியெடுத்து நாணேறிட்டு இறச்செய்ததையும் உலகம் அறியாதோ? நீ என்ன ஏதுமறியாது இருக்கின்றாயே? என் சொல்லையும் சிறிதும் கொள்ளாய் போலும்; இராமபிரானோ தன் வில்லில் நாணேற்றி விடுவதற்குமுன்னே உன்னுயிர் போம் என்பதை நீ உறுதியாகக் கொள்ளவேண்டுகிறேன். நீ அறியாமையினாலேயே பெண்ணுருவம் என்று நினைத்தே அச் சீதையினுருவைப் பேசிவிட்டாயே! அது நம்மவரது தீவினையென்றே நினைக்கவேண்டும். சிவலோக முதலிய உலகங்களும் மற்றைய தேச முழுவதும் ஒரிமைப்பில் உயிர் குடிப்பனவாகிய, கோசிக முனிவன் அளித்த, தெய்வத்தன்மை பொருந்திய படைக்கலங்கள் அளவில்லாதன அவ்விராமனுக்கு எந்நாளும் குற்றேவல் செய்துகொண்டே யிருப்பன. இது கிடக்க, நீயோ வேதனையினால் கொடிய வார்த்தைகளையுஞ் சொல்லினை! இப்படிப்பட்ட காரியம் கெடுதிக்கு ஏதுவன்றோ? நானோ உனக்கு மாமனாயும் நமது மரபில் முன்வந்தோனுமா யிருப்பதனால் இந்த நீதிமொழி கூறினேன். இந்த எண்ணத்தை மாத்திரம் ஒழித்துவிடு' என்றான்.

இவ்வாறுசொல்லிய மாரீசனது சொல்லைக்கேட்ட இராவணன், "மாரீசா, நீ என்ன உன் தாயாகிய தாடகையைக் கொன்ற ஸ்ரீராமனைப் பழிக்கு பழிவாங்காமல் பயந்துகொண் டிருக்கின்றாயே! உன்னையும் ஒரு சுத்தவீரன் என்று எண்ணலாமோ? திசை யானைகள் ஒளிக்கவும் தேவர்கள் நிலைகெட்டு நடுங்கவும் அவர்களிருக்கும் பதங்களை எல்லாம் நெருப்பி

விட்டுப் புகையாக்கி எல்லாவுலகத்திலும் என் ஆக்கினை சக்கரத்தை நடத்துவல்ல என்னையா சாதாரணமான அந் தயரதன் மக்கள் கொல்லவல்லவர்? நான் எதிரொருவரும் இல்லாமல் திரிலோக கண்டகன் என்று பெயரெடுத்திருக்கின்றேன். சத்துருக்கள் கிடைத்தால் அதன்மேலும் இனிமை எனக்கு மற்றொன்று உண்டோ? நீ என் ஆக்கினைக்குள் அடங்கி நடக்க வேண்டியது உன் கடமை. நீ அதை மறுத்துப் பேசுவையாயின் என் கைவாளால் வெட்டிக் கொலை செய்துவிட்டு என் மனக்குறையை முடித்துக்கொள்வேன்; நீ உயிரோடு இருக்க விரும்பினால் என் குறிப்பின் வழி நில்' என்றான். இதைக்கேட்ட மாரீசன், 'கர்வங் கொண்டவர்கள் கெடுவார்கள் என்பது உண்மையே யன்றோ' என்று நினைத்து,

உன்வயி னிறுதி நோக்கி
யுண்மையி னுணர்த்தி னேன்மற்
றென்வயி னிறுதி நோக்கி
யச்சத்தா லிசைத்தே னல்லேன்
நன்மையுந் தீமை யன்றோ
நாசம்வந் துற்ற போது
புன்மையி னுற்ற நீராய்
செய்வது புகறி யென்றான். (206)

எனலும் இராவணனும் கோபந்தணிந்து, 'நீ எனக்குத் தென்றற் காற்றைப் பகையாகச் செய்த சானகியைத் தரவேண்டும்' என்றான். அதற்கு மாரீசன், 'ஐயா, நான் சில நாட்களுக்கு முன்னே இரண்டு அரக்கருடன் கூடிக்கொண்டு சீராமன் தங்கியிருக்கும் பஞ்சவடிக்குப்

போயிருந்தேன். அவன் எனக்குத் துணை வந்தார் இருவரையும் பாணங்களாலே கொன்று களைந்தான்; அவர்கள் தலைகள் பூமியில் உருளுவதைக்கண்டு நான் நெஞ்சம் நடுநடுங்கி மீண்டேன். அவ்வாறு மீண்ட யான் செய்யத் தக்க காரியம் யாது?' என்று சொல்லி முடித்தான். அதைக் கேட்ட இராவணன் 'உன் தாயாகிய தாடகையைக் கொன்று களைந்தவனை யானே கொல்லச் சமைந்து நிற்கின்றேன். நீ போய்ச் செய்யவேண்டியது யாதுளது? நமது மாயையினாலே வஞ்சித்தே யன்றோ அச்சானகியைக் கவரவேண்டும்' என்றான். அதற்கு மாரீசன், 'வேறு சொல்ல இனி என்ன இருக்கின்றது. அவ்விராமன் மனைக்கொடியை நம்மாற்றலைக் காட்டிக் கவாவதல்லாமல் நாம் வஞ்சனையாற் கவர்ந்து கொள்வது மிகச் சிறுமையாய் முடியும். நீ போர் செய்து வென்று கைக்கொள்வதே அறத்துறை என்பார்கள்; அப்படிப் போர் செய்து வென்றே உன் மறத்துறையை நிறுத்த வேண்டும்' என்றான். இராவணன் 'அவர்களை வெல்லச் சேனை-யும் வேண்டுமோ! என் கையிலிருக்கும் வாளொன்றே போதுமானது என்று அறி! அவ்விருவரும் போரில் என் கையால் இறந்துபடுவாராயின் தன்னந் தனியா யிருக்கும் சானகியும் இறந்துபடுவ ளன்றோ? மான் போன்றவ ளாகையால் அவளை நீ மான்வடிவாய்க் கவரப் போ' என்றான். மாரீசன், 'சீதையைக் கைக் கொள்வதற்கு முன்னமே இவன் தலைகள் பாணத்தாற் சிந்திப்போம் வகையைச் செய்வேன் என்று நினைக்-கும் எனக்கும் ஆம் வகையானது மில்லை. யாவரே விதிவலி கடப்பவர். நான் ஏவியது செய்வதல்லாமல் 'வேறொன்றும் இல்லை' என நினைத்து,

என்னமா மாயம் யான்மற்
றியற்றுவ தியம்பு கென்றான்
பொன்னின்மா னாகிப் புக்குப்
பொன்னைமால் புணர்த்து மென்ன
அன்னது செய்வெ னென்று
மாரீச னமைந்து போனான்
மின்னும்வே லரக்கர் கோனும்
வேறொரு நெறியிற் போனான். (207)

அந்த மாரீசன் முன்னாளில் ஸ்ரீராமன் வில்லாற்றலைக் கண்டிருப்பவ னாதலால் அவ் விராகவன் வீற்றிருக்கின்ற கானை நாடி ஒரு பொன்மான் உருக்கொண்டு சென்றான்.

கலைமான்முத லாயின கண்டவெலாம்
அலைமா னுறு மாசையின் வந்தனவால்
நிலையாமன வஞ்சனை நேய்மிலா
விலைமாதர்கண யாருமவிழுந்தெனவே. (208)

மாரீசன் பொன்மா னுருக்கொண்டு வந்தவளவில், யாவரும் இதுகாறும் எய்தப்பெறாப் பெருந் துயரத்தை அனுபவிக்கப் போகின்ற வைதேகியார் அம் மானைக் கண்டு இது பொய்மான் என்று துணியாமலேயிருந்தனர். இராவணன் மாளவேண்டிய காலம் குறுகினமையாலும் அவன் வீழுங் காலத்தில் பூவுலகில் தருமப்பயிர் ஓங்கி வளருங் காலம் எய்தினமையாலும் அம் மாயமான்மேல் ஆசைகொண்டு அதைப் பிடித்துக் கொடுக்கச் சொல்லவேண்டும் என்னும் எண்ணத்துடன் கோதண்டபாணிபாற் சென்று தன் எண்ணத்தை அறிவித்தனர்.

ஆணிப்பொனி ளுகிய தாய்கதிரால்
சேணிற்சுடர் கின்றது திண்செவிகால்
மாணிக்க மயத்தொரு மானுளதால்
காணத்தகு மென்றனள் கைதொழுவாள். ()

அதைக் கேட்ட இரகுவீரன் இத்தகைய மான் இந்நிலத்தில் இல்லையே யெனினும், அஃது இன்னவகையான மான் என்று தன் சிந்தையிற் சிறிதும் எண்ணுமலே தானும் அம் மாயமானின் மீது ஆசை கொண்டான். இறைவன் அதன்மே லாசை கொண்டான் என்றதை அறிந்த இளையபெருமாள் இரகுவீரனை நோக்கி, 'இது மாயமானேயன்றி வேறன்று: அதற்குச் சிறிதும் ஐயுற வேண்டியதில்லை' என்றான். இரகுநாயகனும், 'தம்பி, இவ்வுலகத்தின்கண் எத்தனையோ கோடி உயிர்கள் இருக்கின்றன; அதனுலன்றே உணர்ச்சி யுடையாரும் உலகின் நிலைமையை அறிகின்றாரில்லை. இது மாயமா னென்றும் பொன்னுருக் கொண்டதாகிய மானை எங்கேனுங் கண்டதில்லை என்றும் எண்ணுகின்றாயே; முன்னாளிற் பொன்னுருப்படைத்த அன்னங்கள் எழும் இருந்தன என்று சொல்வதை நீ கேட்டதில்லையோ' என்றனன். சகோதரர் இருவரும் இவ்வாறு சம்பாஷித்துக் கொண்டிருப்பதைக் கேட்டுக்கொண் டிருந்த சானகியார் அம் மான் பல நெறிகளிலுஞ் சென்று மறைவதைக் கண்டு வருந்தினர்.

சீதாபிராட்டியாரின் கருத்தை அறிந்த அஞ்சன மலைபோன்ற இராகவன், 'சானகியே, அம் மானைக் காட்டு' என்று அவருடன் சென்றனன். அவ்வாறு போதலைக் கண்ட இளையவன் பொருத மனத்தை

யுடையவனாய் அவர்கள் பின் நடந்து சென்றனன். அப்போது யாவராலும் கடக்கவொண்ணாத வினையே போல மானும் எதிரே வந்து தோன்றியது. இராமனும் அம் மானை நோக்கித் தன்னெஞ்சில் ஒன்றும் ஆராயாமல், 'இது நன்றா யிருக்கின்றது' என்றான். இராமன் அவ்வாறு சொல்லி விட்டுத் தம்பியை நோக்கி, 'தம்பீ, இம் மானை நன்றாகப் பார்! தன்னை யொப்பது பிறிது இல்லதாக விளங்குகின்றது. இதன் வடிவங்கண்ட மாதர் மைந்தர் முதலானோரில் யாவரே-தான் இதனை விரும்பாதவர்! உருகிய நெஞ்சமுடை-யனவாய் ஊர்வனவும் பறப்பனவு மாகிய எல்லா உயிர்களும் சுடர்விளக்கைக் கண்ட விட்டிலைப்போல இம் மானைக் கண்டே வீழ்கின்றன பார்' என்றான். அதைக் கேட்ட இளையவனும், 'இது பொன்மானே யாயினும் நமக்கென்ன காரியம். வீரனே நாம் மீண்டு போவதே நன்மை' என்றான். இவ்வாறு இளையவன் சொல்லி வாய்மூடு முன்னமே அழகே ஒரு திருவுரு-வங்கொண்டு நின்றது போன்ற சானகியார் இராமனை நோக்கி, 'அம் மானை விரைவில் பற்றித் தரவேண்டும்' என்றார்.

ஐயநுன் மருங்கு னங்கை
யஃதுரை செய்ய வையன்
செய்வெனென் றமைய நோக்கித்
தெளிவுடைச் செம்மல் செப்பும்
வெய்யவல் லரக்கர் வஞ்சம்
விரும்பினார் வினையிற் செய்த
கைதவ மானென் றண்ணல்
காணுதி கடையி னென்றான். (210)

மாயமேன் மடிவா மன்றே
வாலியின் மடிந்த போது
காய்ச்சினத் தவரைக் கொன்று
கடன்கழித் தேழு மாதும்
தூயதேற் பற்றிக் கோடுஞ்
சொல்லிய விரண்டி னொன்றும்
தீயதே யுரைத்தி யென்றான்
றேவரை யிடுக்கண் டீர்ப்பான். (211)

இதைக் கேட்ட இளையபெருமாள், 'பின்னே நின்றவர் இன்னாரென்றும் அவர்கள் பிடித்த மாயவஞ்சனை இது-வென்றும் அறியா திருக்கின்றோம். நீதி வழுவாது நின்றவர்களான முன்னுள்ள நம் பெரியோர்களால் வெறுத்து விலக்கப்பட்ட வேட்டையை ஆடுதல் கீர்த்தி தருவதன்றாம்' என்று சொல்லினன். இராமன், இலக்குவன் சொன்னதை மறுத்து, 'பகைத்தன்மை யுடைய இராக்கதர்கள் பலரென்றும் அவர்கள் செய்-யும் மாயம் மிகுதியை யுடையதென்றும் சொல்லும் காரணத்தால் அவர்களைக் கொல்லவேண்டும் என்று நாம் மேற்கொண்ட விரதத்தைவிடுதல் நகையுடைத்தே, யாம்' என்று பகர்ந்தனன். இதைக் கேட்ட இலக்-குவன், 'அண்ணா, எந்தக் காரியங்களையும் முன் ஆலோசித்துப் பின்பு செய்தல் ஏற்றமான தல்லவா? இம் மாயமானை முன்னே செலுத்திப் பின் நின்ற பகைவர்கள் உளரெனினும் அவர்களை என் அம்பினால் கொன்று நானே இம்மானைப் பற்றிக்கொண்டு வரு-கின்றேன்' என்றனன். இதைக் கேட்ட சீதை இரகு-நாயகனை நோக்கி, 'இம் மானைத் தாமே பற்றித் தர-வேண்டும்' என்று குதலைச் சொல்லால் உரைத்தனள். இராகவன், 'நானே இம் மானைப் பற்றிக் கொண்டு

விரைந்து வருகின்றேன். அதுவரையில் சானகி-யாரைக் காத்துக்கொண்டிரு' என்று தன் தம்பிக்குச் சொல்லி, தன் வில்லை இளையானிடத்து வாங்கிக்-கொண்டு அம் மானின் பின்னே விரைந்து சென்றான். இலக்குவன்,

முன்னமு மகவாய் வந்த
மூவரி னொருவன் போனான்
அன்னமா ரீச னென்றே
யயிர்த்தென னிதனை யைய
இன்னமுங் காண்டி வாழி
யேயென விருகை கூப்பிப்
பொன்னனாள் புக்க சாலை
காத்தனன் புறத்து நின்றே. (212)

இளையவன் கூறியவைகளைக் கவனியாமல் சான-கியார் வேண்டுகோட்கு இரங்கி சீராமன் அம் மானின் பின்னே சென்றான். அம் மான்

மிதித்தது மெல்ல மெல்ல
வெறித்தது வெருவி மீதிற்
குதித்தது செவியை நீட்டிக்
குரபத முரத்தைக் கூட்டி
உதித்தெழு மூதை யுள்ள
மென்றிவை யுருவச் செல்லும்
கதிக்கொரு கல்வி வேறே
காட்டிய தொத்த தன்றே. (213)

குன்றிடை யிவரு மேகக்
குழாத்திடைக் குதிக்கும் கூடச்
சென்றிடி னகலுந் தாழிற்
றீண்டலாந் தகைமைத் தாகும்

நின்றதே போல நீங்கு
நிதிவழி நேய நீட்டும்
மன்றலங் கோதை மாதர்
மனமெனப் போயிற் றம்மா. (214)

இவ்வாறு அம் மான் ஓடுவதைக் கண்ட இரகு-நாயகன், 'இம் மானின் காயம் வேறாகச் செய்யும் காரியம் வேறேயாக இருக்கின்றதே. எனக்கு முன்-னமே என் தம்பி இலக்குவற்கு இது வஞ்சனையான காரியம் என்று தோன்றியது பொருத்தமுடையதே என்று புலப்படுகிறது: நான் சிறிது ஆலோசித்திருப்பேனாயின், இம் மானைத் துரத்திக் கொண்டு இவ்வளவு தூரம் வந்திருக்க வேண்டியதில்லை. இஃது அரக்கர் செய்த வஞ்சனையே' என்று திருவுளத்திற் கொண்டான். இராகவன் இவ்வாறு ஆலோசித்துக் கொண்டிருக்கையில் மாரீசன், 'இவன் நம்மைப் பிடிக்க எண்ணங் கொண்டதாக ஏற்படவில்லை. இனிப் பாணத்தை விடுத்து நம்மைக் கொலை செய்துவிடு-வான்' என்று துணிந்து, அதிக வேகமாக ஓடத் தொடங்கினான். அதைக் கண்ட ஸ்ரீராமன்,

அக்க ணத்தினி லையனும் வெய்யதன்
சக்க ரத்திற் றகைவரி தாயதோர்
செக்கர் மேனிப் பகழிசெ லுத்தினான்
புக்க தேயம்புக் கின்னுயிர் போக்கென. (215)

நெட்டி லைச்சரம் வஞ்சனை நெஞ்சுறப்
பட்ட தப்பொழு தேபகு வாயினால்
அட்ட திக்கினு மப்புற மும்புக
விட்ட ழைத்தொரு குன்றென வீழ்ந்தனன். (216)

வெய்ய வன்ற னுருவொடு வீழ்தலும்
செய்ய தன்றெனச் செப்பிய தம்பியை
ஐயன் வல்லனென் னுருயிர் வல்லனன்
உய்ய வந்தவன் வல்லனென் றன்னினன். (217)

ஆசை நீளத் தரற்றினன் வீந்தவந்
நீசன் மேனியை நின்றுட னோக்கினன்
மாசின் மாதவன் வேள்வியின் வந்தமா
ரீச னேயிவ னென்பதுந் தேறினன். (218)

உழைத்த வாளி யுரம்புகப் புல்லியோன்
இழைத்த மாயையி னென்குர லாலிசைத்
தழைத்த துண்டது கேட்டயர் வெய்துமால்
மழைக்க ணேழையென் றுள்ளம் வருந்தினன். (219)

மாற்ற மின்னது மாயமா ரீசனென்
றேற்ற முன்னுணர்ந் தானெனி னென்னுடை
ஆற்ற றேரு மறிவின னுதலான்
தேற்று மாவினை யோனெனத் தேறினன். (220)

இறைவன், 'இவ் வரக்கன் தான் இறப்பது கருதியே வந்தானல்லன், யாதோ ஒரு தீமையை நாடியே வந்தான். அதனால் தீமையே நேரும். அது நேரு முன்னர் நாம் மீள்வதே நலம்' என்று மீண்டனன்.

கடல்நிற வண்ணனாகிய காகுத்தன் செய்தி இவ்வாறாக, மாரீசன் இரகுவீரன் குரலேபோல் வாய்விட்டார்த்தது வைதேகியின் செவியிற் பட்டது. அப்போது சானகி, ஒரு குயில் மரத்தினின்றுந் தவறித் தரையில் விழுந்தாற்போல வயிற்றி லடித்துக்கொண்டு தரையில் விழுந்து மயக்கமுற்றாள். சானகி, 'மானைப் பிடித்துத் தா' என்றதனால் பேதையேனாகிய யான்

என் வாழ்வு நீங்கினேன்' என்று இடியோசை கேட்ட நாகம் போல ஏங்கி யழுதனள்! பிறகு இளையபெருமாளை நோக்கி,

குற்றம் வீந்த குணத்தினெங் கோமகன்
மற்றை வாளரக் கன்புரி மாயையால்
இற்று வீந்தன னென்னவு மென்னயல்
நிற்றி யோவிளை யோயொரு நீயென்றாள். (221)

இதைக் கேட்ட இளையவன், 'சராசரங்கட்கெல்லாந் தாயீர்! உலகின்கண் எம்மிறைவனாகிய சீராமனைப் பார்க்கிலும் ஏற்றமுடையார் பிறர் உளரெனத் துணியப்படுமோ. தேவரீர், 'பேதைமை என்பது மாதர்க்கணிகலம்' என்னும் பழமொழிப்படி பெண்டன்மையால் இவ்வாறு சொல்லினீர். தாயீர்! கடல் ஏழும், உலகம் பதினான்கும் அவ்வுலகத்தைச் சூழ்ந்த மலை யேழும் தொடர்ந்திருக்கிற இப் பூமியின்கண் வாழும் கடையர் சிறு வலிமைக்கு எமது நாயகனது வீரத் தன்மையும் தாழுமோ! பாரென்றும் நீயென்றும் நீரென்றும் பிறவென்றும் கூறப்படுகின்ற பஞ்ச பூதங்கள் அவர் கோபித்த மாத்திரத்திற் பெயர்ந்துவிடுமே; அக் கார்போலுந் திருமேனியையுடைய அப் பெருந்தகையை யாரென்று எண்ணி இவ்விடரில் ஆழ்கின்றீர்? அரக்கருக்குச் சீராமன் இடைந்துபோய் தனக்குத் துன்பம் நேர்ந்தவழி பிறரைத் தனக்குத் துணையாக அழைப்பதுண்டோ? அப்படி யழைக்குமாயின் நெருங்கியிருக்கின்ற அண்டங்கள் மேல்கீழாக மாட்டாவோ? உடைந்து போக மாட்டாவோ? பிரமனாதிய உயிர்கள் தீய்ந்து போக மாட்டாவோ? மற்றும் அவனது ஆற்றலைக் குறித்து யான் சொல்ல

வேண்டிய வார்த்தை யாதுளது? மண்ணுலகத்தவரும் விண்ணுலகத்தவரும் கொண்டாட, வலிய முப்புரத்தையும் எரித்த சிவபெருமானுடைய வில் அச் ஸ்ரீராமபிரானுடை ஆற்றலினால் தேவரீர் திருமணத்திற்கு முன் இற்றுப் போயிற்றென்றால் அப் பெருமானது வல்லமையேபோல் பொருந்துவதாகிய ஒரு வல்லமை உளதோ; காகுத்தன் யாதொரு தீங்குமின்றி இங்கே விரைவில் வந்து சேருவன். நீர் எண்ணியதுபோல் எம்பெருமானுக்கு சம்பவிக்குமாயின் மூவகை யுலகமும் முடியுமே; முற்பட்ட தேவர் முனிவர் முதலாகிய பெரியோர் யாவரும் இறந்து படுவரே, தருமதேவனையும் இறந்து படுமே.' மேலும்,

பரக்கவென் பகர்வது பகழி பண்ணவன்
துரக்கவுங் கதுபடத் தொலைந்து சோர்கின்ற
அரக்கனவ் வுரையெடுத் தரற்றி னானதற்
கிரக்கமுற் றிரங்கலி ரிருத்திரீண் டென்றான். (222)

என்றவ னியம்பலு மெடுத்த சீற்றத்தள்
கொன்றன வின்னலள் கொதிக்கு முள்ளத்தள்
நின்றநின் னிலையிது நெறியிற் றன்றெனா
வன்றறு கண்ணினள் வயிர்த்துக் கூறுவாள். (223)

ஒருபகல் பழகினா ருயிரை யீவரால்
பெருமக னுலைவுறு பெற்றி கேட்டுநீ
வெருவலை நின்றனை வேறென் யானினி
எரியிடை வீழ்ந்துயி ரிறப்ப லீண்டெனா. (224)

தாமரை வனத்திடை தாவுமன் னம்போல்
தூமவெங் காட்டெரி தொடர்கின் றாடனைச்
சேமவிற் குமரனும் விலக்கிச் சீறடிப்
பூமுக நெடுநிலம் புல்லிச் சொல்லுவான். (225)

துஞ்சுவ தென்னைநீர் சொற்ற சொல்லையான்
அஞ்சுவென் மறுக்கிலெ னவலந் தீர்ந்தினி
இஞ்சிரு மடியனே னேகு கின்றனென்
வெஞ்சின விதியினை வெல்ல வல்லமோ. (226)

போகின்றே னடியனேன் பொருந்தி வந்துகே
டாகின்ற தரசன்ற னாணை நீர்மறுத்
தேகென்றீ ரிருக்கின்றீர் தமியி ரென்றுபின்
வேகின்ற சிந்தையான் விடைகொண் டேகினான். ( )

இருப்பனே லெரியிடை யிறப்ப ராலிவர்
பொருப்பனை யானிடை போவெ னேயெனின்
அருப்பமில் கேடுவந் தடையு மாருயிர்
விருப்பனேற் கென்செய லென்று விம்மினான். (228)

அறந்தனா லழிவில தாகி னாக்கலாம்
இறந்தபா டிவர்க்குறு மிதனி னிவ்வழி
துறந்துபோ மிதனையே துணிவென் றொல்வினைப்
பிறந்துபோந் திதுபடும் பேதை யேனென. (229)

போவது புரிவல்யான் புகுந்த துண்டெனின்
காவல்செ யெருவையின் றலைவன் கண்ணுறும்
ஆவது காக்குமென் றறிவித் தவ்வழி
தேவர்செய் தவத்தினாற் செம்ம லேகினான். (230)

இளையவ னேகலு மிறவு பார்க்கின்ற
வளையெயிற் றிராவணன் வஞ்ச முற்றுவான்
முளைவரித் தண்டொரு மூன்று முப்பகைத்
தளையரி தவத்தவர் வடிவுந் தாங்கினான். (231)

ஊணில ளுமென வுலந்த மேனியன்
சேணெறி வந்தோர் வருத்தச் செய்கையன்
பாணியி னடத்திடைப் படிக்கின் றென்ன
வீணையி னிசைபட வேதம் பாடுவான். (232)

பூப்பொதி யவிழ்ந்தன நடையன் பூதலம்
தீப்பொதிந் தாமென மிதிக்குஞ் செய்கையன்
காப்பரு நடுக்குறுங் காலன் கையினன்
மூப்பெனும் பருவமு முனிய முற்றினான். (233)

தாமரைக் கண்ணொடோர் தவத்தின் மாலையின்
ஆமையி னிருக்கையன் வளைந்த வாக்கையன்
நாமநூன் மார்பின னணுகி னானரோ
தூமனத் தருந்ததி யிருந்த சூழல்வாய். (234)

தோமறு சாலையின் வாயி றுன்னினான்
நாமுதற் குழறிட நடுங்கு சொல்லினான்
யாவிரிவ் விருக்கையு ளிருந்து ளீரென்றான்
தேவரு மருள்கொளத் தெரிந்த மேனியான். (235)

தோகையு மிவ்வழித் தோமில் சிந்தனை
சேகறு நோன்பின ரென்னுஞ் சிந்தையாள்
பாகியல் கிளவியாள் பவளக் கொம்பர்போன்
றேகுமி னீண்டென வெதிர்வந் தெய்தினாள். (236)

வெற்பிடை மதமென வியர்க்கு மேனியன்
அற்பினற் றிரைபுர ளாசை வேலையன்
பொற்பினுக் கணியினைப் புகழின் சேக்கையைக்
கற்பினுக் கரசியைக் கண்ணி னோக்கினான். (237)

தூங்கலி னுருவினைச் சொல்லி னும்பரும்
ஓங்கிய வழகினு ளுருவங் காண்டலும்
ஏங்கினன் மனனிலை யாதென் றுன்னுவாம்
வீங்கினன் மெலிந்தனன் வீரத் தோள்களே. (238)

சீதாபிராட்டியாரைக் கண்ட கண்ணுங் கருத்தும், இசைபாடும் வண்டின் கூட்டமே போற் களிப்பெய்தின. பின்னும், 'தாமரை மலரைத் துறந்த தையலார் இங்கெய்தியமையைக் காண்பதற்கு இருபது கண்கள் அமையாவே ஆயிரங் கண்கள் வேண்டுமே' என்று அல்லற்பட்டனன். 'யான் தவத்தாற் படைத்த மூன்றரைக்கோடி ஆயுளும் இவளுடன்கூடி வாழ்வதற்குப் போதுமோ' என்றும் எண்ணினன். 'தேவரும், அவுணரும் தந்தந் தேவிமாருடன் குற்றேவல் செய்யவும், திரிவித உலகமும் இவர் முறையின் ஆளவும் யானேவற்பணி செய்து வாழ்வேன்' என்றும் எண்ணினன். 'இவர்க்குத் துன்பத்தோடும் பொருந்திய முகத்தின் ஒளி இதுவேயாமெனின், முளைக்கின்ற பற்களிற் றோன்றும் ஒளியையுடைய நகை என்ன பயத்ததாம். இத் தன்மையளாகிய கட்டழகினுக் கரசியை எனக்குக் கொணர்ந்து கொடுத்த என் இளையவளாகிய சூர்ப்பணகைக்கு என் வாழ்வும் அரசும் கொடுப்பதே தக்கதாம்' என்று மனத்தில் நினைந்து உருகி நின்றான். இவ்வாறு மனத்தில் நினைந்து நினைந்து இராவணன் ஆசைப் பெருக்கில் அலைந்து நிற்கையில், முறைமையல்லாத சிந்தை யடைந்த அவ் விராவணனைச் சீதாபிராட்டியார் கண்டு, 'ஈண்டு எழுந்தருள வேண்டுகின்றேன்' என்று சொல்லி,

ஏத்தின ளெய்தலு மிருத்தி நீண்டென
வேத்திரத் தாசனம் விதியி னல்கினாள்
மாத்திரி தண்டயல் வைத்த வஞ்சனும்
பூத்தொடர் சாலையி னிருந்த போழ்தினே. (239)

பன்னசாலையில் இராவணன் ஆசனத்தில் அமர்ந்தபோது, மலைகளும் மரங்களும் நடுங்கின; நாவிலிந்து விலங்குகளும் பறவைகளும் அடங்கின; பாம்புகளும் படங்குறைந்து ஒடுங்கின. இராவணன் சானகியாரை நோக்கி, 'இப்பர்ணசாலையி லெழுந்தருளி யிருக்கும் பெருந்தவன் யார்? நீவிர் யாவர்? இவ் வாச்சிரமத்திற்குப் பெயர் யாது?' என்று வினவினன். சானகி,

நயரதன் றொல்குலத் தலைவன் றம்பியோ
டுயர்குலத் தன்னைசொ லுச்சி யேந்தினன்
அயர்வில திவ்வழி யுறையு மன்னவன்
பெயரினைத் தெரிகுதிர் பெருமையீ ரென்றாள். (240)

கேட்டனென் கண்டிலென் கெழுவு கங்கைநீர்
நாட்டிடை யொருமுறை நண்ணி னேன்மலர்
வாட்டடங் கண்ணினீர் யாவன் மாமகள்
காட்டிடை யரும்பகல் கழிக்கின் றீ ரென்றான். (241)

அநகமா நெறிபட ரடிக ளும்மலால்
நினைவதோர் தெய்வம்வே றிலாத நெஞ்சினன்
சனகன்மா மகள்பெயர் சனகி காகுத்தன்
மனைவியா னென்றனண் மறுவில் கற்பினாள். (242)

அவ்வழி யனையன வுரைத்த வாயிழை
வெவ்வழி வருந்தினிர் விளைந்த மூப்பினிர்
இவ்வழி யிருவினை கடக்க வெண்ணினிர்
எவ்வழி நின்றுமிங் கெய்தினீ ரென்றாள். (243)

இந்திரற் கிந்திர னெழுத லாகலாச்
சுந்தர னென்முகன் மரபிற் றோன்றினான்
அந்தரத் தோடுமெவ் வுலகு மாள்கின்றான்
மந்திரத் தருமறை வைகு நாவினான். (244)

ஈசனொ டிருந்தபே ரிலங்கு மால்வரை
ஊசிவே ரொடும்பறித் தெடுக்கு மூற்றத்தான்
ஆசைகள் சுமந்தபே ரளவில் யானைகள்
பூசல்செய் மருப்பிறப் பொடிசெய் தோளினான். ()

வெம்மைதீ ரொழுக்கினன் விரிந்த கேள்வியன்
செம்மையோன் மன்மதன் திகைக்குஞ் செவ்வியன்
எம்மையோ ரனைவரு மிறைவ ரென்றெணும்
மும்மையோர் பெருமையு முற்றும் பெற்றியான். ()

ஆண்டையா னரசுவீற் றிருந்த வந்நகர்
வேண்டியான் சில்பக லுறைய வேண்டினேன்
நீண்டனெ னிருந்தவற் பிரிந்த நெஞ்சினேன்
மீண்டனெ னென்றனன் வினைய முன்னுவான்.(247)

இதைக் கேட்ட சானகி, 'முற்றத்துறத்தலால் சரீரமும் மிகுதி என்று நினைக்கும் முனிவரரே, வேதங்களையும் அவ்வேதங்கட்குரிய அந்தணர்களது கருணையையும் விரும்பாமல் அறிவோடுங் கூடிய உயிர்களைப் பிடித்துத் தின்கின்ற கொடிய செய்கையை யுடைய பாவிகளான அரக்கர் வாழும் ஊரில் நீர் தங்குதற்குக் காரணம் என்னை? வனத்தின்கண் மாட்சிமை பொருந்திய தவத்தினையுடையார் பக்கத்தே தங்காது ஒழிந்தீர்; வயல் சூழ்ந்த சிறப்புப் பொருந்திய கோசலம் முதலிய நாடுகளினிடத்துள்ள பரிசுத்தம் பொருந்தி-

யவர்களுடைய ஊர்களினிடத்தும் பிரவேசிக்க நினை யாமற் போயினீர்; தருமமார்க்கத்தைக் கருதாதவர்க ளாகிய அரக்கர்களது கூட்டத்தில் தங்கினீர்! யாது காரியம் செய்தீர்' என்றனள். சானகியார் அவ்வாறு சொல்லக் கேட்ட வரம்புகடந்த நடக்கையை யுடைய வஞ்சிய இராவணன், 'சந்திரன் போன்ற ஒளியுள்ள முகத்தினை யுடையாய், கொடிய கண்களையும் வாட் படையையும் உடைய அரக்கர்கள் குற்றங்களில் மிக்க-வர்கள் என்று நாங்கள் அஞ்சமாட்டோம். யோசித்-துப்பார்க்கும் அளவில் அவர்கள் தேவர்களைப்போலக் கொடியவர்கள் அல்லர். எங்கள் போலியர்க்கு அவ்-விராக்கதர்களே நல்லவர்' என்றனன். சானகி 'மனத்-தூய்மை யுடையார் தீயவரைச் சேரமாட்டார்' என்ற-னள். அதைக் கேட்ட இராவணன்,

அயிர்த்தன ளாகு மென்றோ
  ரையுற வகத்துக் கொண்டான்
பெயர்த்தது துடைக்க வெண்ணிப்
  பிரிதுறப் பேச லுற்றான்
மயக்கரு முலக மூன்றின்
  வாழ்பவர்க் கனைய வல்லோர்
இயற்கையிற் றிரியி னல்லா
  லியற்றலா நெறியென் னென்றான். ()

திறந்தெரி வஞ்ச னச்சொற்
  செப்பலுஞ் செப்ப மிக்காள்
அறந்தரு வள்ள லீண்டிங்
  கருந்தவ முயலு நாளுள்

மறந்தலை திரிந்த வாழ்க்கை
யரக்கர்தம் வருக்கத் தோடும்
இறந்தனர் முடிவர் பின்ன
ரிடரிலை யுலக மென்றாள். (249)

இதைக் கேட்ட இராவணன், 'மானுடர் அரக்கரையெல்லாம் அவர் வருக்கத்துடன் கொல்வரெனின் யானையினத்தை யெல்லாம் இளமுயல் கொல்லும், பின்னும் கூரிய உகிரையுடைய சிங்கவேற்றை மான் கூட்டம் கொல்லும் போலும்' என்றான். அதற்குச் சானகியார், 'மின் திரண்டாலன்ன மயிரையுடைய விராதனும் கோபமிகுந்து கன்றிய மனமுடைய கரன் முதலானோரும் இறந்துபட்ட போர்த் திறலைச் சிறிதேனும் கேட்டிலீர்போலும்' என்றதன்றி,

வாளரி வள்ள றன்னு
லிலங்கைமா நிருத ரெல்லாம்
கேளொடு மறியு மாறும்
வானவர் கிளரு மாறும்
நாளையே காண்டி ரன்றே
நவையிலி ருணர்கி லீரோ
மீளருந் தருமந் தன்னை
வெல்லுமோ பாவ மென்றாள். (250)

தேனிடை யமுத ளாய
வன்னமென் சிலசொன் மாலை
தானுடைச் செவிக ளூடு
தவழுறத் தளிர்த்து வீங்கும்

ஊனுடை யுடம்பி னானு
முருகெழு மான மூன்ற
மானிடர் வலிய ரென்ற
மாற்றத்தாற் சீற்றம் வைத்தான். (251)

இராவணன் கோபமிக்கானாய், 'சிலைவலி படைத்த அரக்கர்கட்கு ஒரு மனிதனே இறுதியைத் தேடிவைத்-தான் என்று கூறுவையேயாயின் இருபது தோளை-யுடைய அவ்விராவணனோடு நடக்கும் பெரும்போரில் அவர் பூளைப் பூ வெனக் கெடுவது உண்மை என்பதை நாளையே யறிவை! பேருலைப் பழிக்க வேண்டினா-லும் விண்ணை யிடிக்க வேண்டினாலும் நெருப்பை அவிக்க வேண்டினாலும் பாரை எடுக்க வேண்டினாலும் அவ் விராவணனால் ஆகாத காரியமும் உண்டோ? அவரை நீர் யா ரென்றே எண்ணிச் சொன்னீர்?' என்றனன்.

அரண்டரு திரடோள் சால
வுளவெனி னாற்ற லுண்டோ
கரண்டநீ ரிலங்கை வேந்தைச்
சிறைவைத்த கழற்கால் வீரன்
திரண்டதோள் வனத்தை யெல்லாஞ்
சிறியதோர் பருவந் தன்னில்
இரண்டுதோ ளொருவ னன்றே
மழுவினா லெறிந்தா னென்றாள். (252)

என்றிவ ளுரைத்த லோடு
மெரிந்தன நயனந் திக்கிற்
சென்றன திரடோள் வானந்
தீண்டின மகுடந் திண்கை

ஒன்றொடொன் றடித்த மேகத்
துருமென வெயிற்றி னொளி
மென்றன வெகுளி பொங்க
விட்டது மாய வேடம். (253)

அப்போது சானகியார் 'இவன் இருவினையுந் துறந்த மேலோன் அல்லன்' என்று கருதி ஐயப்பாடு அடைந்து, 'யாரே இவன்' என்று சிறிதும் தெரியாத நிலைமை யுடையாராய் நிற்க, இராவணன் பெரும் பாம்பு சினங்கொண்டு பணம் விரித்து உயர்ந்தது போலத் தன்னுருக்கொண்டு விளங்கினான். சானகியார் பெருந் துன்பத்தின்மேல் அளவிலாத் துன்பமுற்றவளாய் யாதொன்றையுங் கருதவும் செய்யவுமாட்டாமல் யமனைக் கண்ட உயிர்போல மிக அஞ்சி நிலை குலைந்தனள்.

விண்ணவ ரேவல் செய்ய
வென்றவென் வீரம் பாராய்
மண்ணிடைப் புழுவின் வாழு
மானுடர் வலிய ரென்றாய்.
பெண்ணெனப் பிழைத்தா யன்றே
லுன்னையான் பிசைந்து தின்ன
எண்ணுவெ னெண்ணிற் பின்னை
யென்னுயி ரிழப்பெ னென்றான். (254)

குலைவுற லன்ன முன்னம்
யாரையுங் கும்பிடா வென்
தலைமிசை மகுட மென்னத்
தனித்தனி யினிது தாங்கி

அலகில்பூ ணரம்பை மாத
ரடிமுறை யேவல் செய்ய
உலகிமீ ரேழு மாளுஞ்
செல்வத்து ளுறைதி யென்றான். (255)

செவிகளைத் தளிர்க்கை யாலே
சிக்குறச் சேமஞ் செய்தாள்
கவினுட்வெஞ் சிலைக்கை வென்றிக்
காகுத்தன் கற்பி னேனைப்
புவியிடை யொழுக்க நோக்காய்
பொங்கெரிப் புனித ரீயும்
அவியைநாய் வேட்ட தென்ன
வென்சொனா யரக்க வென்னா. (256)

புன்னுனை நீரி னெய்தாய்ப்
போதலை புரிந்து நின்ற
இன்னுயி ரிழத்த லஞ்சி
யிற்பிறப் பழித லுண்டே
மின்னுயிர்த் தருமிற் சீறும்
வெங்கணை விரவா முன்னம்
உன்னுயிர்க் குறுதி நோக்கி
யொளித்தியா லோடி யென்றாள். (257)

அரக்கன் சானகியார் சொன்ன சொல்லைக்கேட்டு, ‘உன் ஆருயிர்த் துணைவனாகிய இராமன் விடும் பாணம் திசையானைகள் மருப்பு ஒடியப் போர் செய்த என் மார்பிற் பட்டால் குன்றின் மேற் றொடுத்து விட்ட பூங்கணை போலாம். தெய்வப் பெண்கட் கெல்லாம் தலைமையுடையீரே, மிக்க ஆசைநோய் வருந்த வருந்திய உடம்பினேன் உளமகிழ அத் தெய்வப் பெண்-

கள் எல்லாம் வந்து வணங்கும் பெரும் பதத்தைக் கொள்ளுவீர்' என்று உலகந் தாங்கும் மலையினும் வலிய தோளையுடைய இராவணன் வணங்கி நின்றான்.

வேறு

தறைவா யவன்வந் தடிதா ழுதலும்
கறைவாள் படவா விகலங் கினள்போல்
இறைவா விளையோ வெனவேங் கினளால்
பொறைதா னுயிர்போ வதுபோற் புகல்வாள். (258)

ஆண்டா யிடைதீ யவனு யிழையைத்
தீண்டா லெனுமே லுரைசிந் தைசெயாத்
தூண்டா னெனலா முயர்தோள் வலியால்
கீண்டா னிலம்யோ சனைகீ ழொடுமேல். (259)

கொண்டா னுயர்தேர் மிசைகோல் வளையாள்
கண்டா டனதா ருயிர்கண் டிலளால்
மண்டா னுறுமின் னின்மயங் கினளால்
விண்டான் வழியா லெழுவான் விரைவான். (260)

இராவணன் ஆகாய மார்க்கமாய்த் தேரை விரைந்து செலுத்தவே, சீதாபிராட்டியார் கொடுங்கனலால் வருந்துங் கொடியேபோல் புரண்டு குலைந்து அயர்ந்து துடித்து விழுவார். துயரத்தாலே மீளவும் எழுந்திருப்பர். 'என்னைத் தரும தேவதையே! காத்தருள்வீர்' என்பார். மலைகளையும் மரங்களையும் மயில்களையும் குயில்களையும் கலைகளையும் பிணைகளையும் களிறுகளையும் பிடிகளையும் நிலைத்தலில்லாத உயிரினையும் கண்டு அவைகளை விளித்து எனது நிலைமையை நீங்கள் அறிந்தவர்களாய்ச் சென்று கெடாத வலிமையை

உடையவர்களாகிய தசரத குமாரரிடத்தில் என் பரி-தாபமான நிலையைச் சொல்லுங்கள்,

செஞ்சே வகனார் நிலைநீர் தெரிவீர்
மஞ்சே பொழிலே வனதே வதைகாள்
அஞ்சே லெனநல் குதிரே வடியேன்
உய்ஞ்சா லதுதா னிழிபோ வுரையீர். (261)

நிருதா தியர்வே ரறநீண் முகில்போல்
சரதா ரைகள்வீ சினிர்சார் கிலிரோ
வரதா விளையோய் மறுவே துமிலாப்
பரதா விளையோய் பழிபூ ணுதிரோ. (262)

கோதா வரியே குளிர்வாய் குழைவாய்
மாதா வனையாய் மனனே தெளிவாய்
ஓதா துணர்வா ருழையோ டினைபோய்
நீதான் வினையே னிலைசொல் லலையோ. (263)

என்று இப்படிப் பலவற்றையுஞ் சொல்லி, மனந் தளர்ந்து அழுகின்ற சானகியாரை, தன் வாணாள் வீணே யழியப் பெறுபவனாகிய இராவணன், 'பொன் குண்டலம் அணிந்தவளே, போரில் என்னைக் கொன்றும் மனிதர் உன்னை மீட்பார்களோ! மீட்டுக்-கொள்ளட்டும்' என்று சொல்லிக் கை கொட்டிச் சிரித்-தான். அப்போது சானகியார் 'மாயையால் மானொன்றை ஏவி, உன் ஆருயிர் உண்ணுங் கூற்றுவ-ரைப் போக்கி என்னை இப்போது கவர்ந்து செல்கின்-றாய். நீ போர் செய்து காத்துக்கொள்வதானால் இப்-போதே தேரை ஓட்டிப் போகாமலிரு. நீ சுத்த வீரனேயாயின் இவ்வாறு செய்வையோ? உன் கூட்-டத்தவர்களாகிய அரக்கர்களை எல்லாம் கொன்று

களைந்து உன் தங்கையின் மூக்கும் காதும் அரிந்த மனிதர் இக்காட்டி லிருக்கின்றார்கள் என்ற அச்சத்தாலே யன்றோ இம்மாயைகளைச் செய்து கவர்ந்து செல்கின்றனை ?' என்றனர். அதைக் கேட்ட இராவணன், 'வலியற்ற சரீரமுள்ள இழிந்த மனிதருடனே போர்க்கு எழுவேன் எனின் நெற்றிமேல் ஒற்றை நாட்டத்தைப் பெற்ற நின்மலக் கொழுந்தின் கயிலை மலையை எடுத்த என் தோளாற்றலுக்குப் பழிவரும் என்றும், மாயமே நல்ல பயன் விளைக்கும் என்றும் இவ் வகையான காரியஞ்செய்யத் துணிந்தேனே அன்றி வேறன்று' என்றனன். இதைக் கேட்ட சானகியார், 'அரக்கர்கட்குத் தன் குலப் பகைவர் தம்பாற் போவது குற்றம், வாளிற்பொருவது நாணம், கற்பினையுடைய மாதரை வஞ்சிப்பது வல்லமை போலாம், அரக்கர்கட்குப் பாவமும் பழியும் இல்லை யல்லவோ' என்றனள். அப்போது,

என்னுமவ் வேலை யின்க
ணெங்கடா போவ தென்னா
நின்னிலென் றிடித்த சொல்ல
னெருப்பிடைப் பரப்புங் கண்ணன்
மின்னென விளங்கும் வீரத்
துண்டத்தன் மேரு வென்னும்
பொன்னெடுங் குன்றம் வானின்
வருவதே போலு மெய்யான். (264)

பாழிவன் கிரிக ளெல்லாம்
பறித்தெழுந் தொன்றே டொன்று
பூழியி னுதிர விண்ணிற்
புடையுறக் கிளர்ந்து பொங்கி

ஆழியு முலகு மொன்று
யழிதர முழுதும் வீசும்
ஊழிவெங் காற்றி தென்ன
விருசிறை யூதை மோத. (265)

சாகையுடன் மரங்கள் தாழ மேகங்கள் விண்ணிற் செல்ல மேலே கருடன் வருகின்றான் என்று நாகங்கள் படம் ஒளித்து ஒதுங்கி வருந்த, யானை யாளி முதலிய மிருகங்களும் காற்றொடும் மரத்தினொடும் ஆகாயத்தில் நிறைந்து மூடிக்கொள்ள, வானமும் காடும் மாறுகொள்ளவும் விரைந்து வந்து 'உத்தமனாகிய இராகுவீரனது தரும பத்தினியை எங்கடா தேரில் வைத்துச் செல்கின்றனை? இத்தனை திசையையும் வாளொடு மறைப்பேன்' என்று சடாயு தன் சிறைகளைப் பரப்பி அத்தேரைத் தடைப்படுத்த,

வந்தன னொருவையின் மன்னன் மாண்பிலான்
எந்திரத் தேர்செல வொழிக்கு மெண்ணினன்
சிந்துரக் கால்சிரஞ் செக்கர் சூடிய
கந்தரக் கைலையை நிகர்க்குங் காட்சியான். (266)

அவ்வாறு வந்த சடாயு சானகியாரைப் பயப்பட வேண்டா என்று சொல்லிவிட்டு, 'இவனோ நமது சானகியாரைத் தீண்டிலன்' என்று சிந்தை தெளிந்து பெருங்கோபம் எய்தாமலே இராவணனைப் பார்த்து,

கெட்டாய் கிளையோ டுநின்வாழ் வையெலாம்
சுட்டா யிதுவென் னதொடங் கினைநீ
பட்டா யெனவே கொடுபத் தினியை
விட்டே குதியால் விளிகின் றிலையால் (267)

பேதாய் பிழைசெய் தனைபே ருலகின்
மாதா வனையா ளைமனக் கொடுநீ
யாதா கநினைத் தனையெண் ணமிலாய்
ஆதா ரநினக் கினியா ருளரோ. (268)

எல்லா வுலகங் களுமிந் திரனும்
அல்லா தவர்மூ வருமந் தகனும்
புல்வாய் புலிகண் டதுபோல் வரலால்
வில்லா ளரைவெல் லுமிடுக் குளரோ. (269)

இம்மைக் குறவோ டிமிறந் தழியும்
வெம்மைத் தொழிலிங் கிதன்மே லிலையால்
அம்மைக் கருமா நரகந் தருமால்
எம்மைக் கிதமா கவிதெண் ணினைநீ. (270)

முத்தே வரின்மூ லமுதற் பொருளாம்
அத்தே வரிம்மா னிடரா கலினால்
எத்தே வரொடெண் ணுவதெண் ணமிலாய்
பித்தே றினையா தல்பிழைத் தனையால். (271)

'சூரியகுலத் தோன்றலாகிய இராகவன் தன் வில்லை வளைத்து நின்று நேர்படுவானாயின், அவனை யாரும் முன்னின்று தடுப்பதோ அரிது; இப் பெண்மணியை நானே கொண்டு சென்று அங்கே விடுகிறேன் நீ விரைந்துபோ' என்று சடாயு உடையார் பகர்ந்தனர். அதைக்கேட்ட இராவணனோ வாயை மடித்து, 'நீ வெற்றியாளரென்று சிறப்பித்துச் சொல்லப்படுவோரைக் காட்டாய்' என்று கோபித்துரைத்தனன். அதற்குச் சடாயு 'நீ உடல் முழுவதும் பாணங்களால் தொளைக்கப்பட்டு பெரும் புண்ணுகா முன்னே இவ்விடம் விட்டு அகன்று போய்விடு' என்றனர். அத-

றற்கு இராவணன், 'இரும்புண்ட நீர் ஒரு காலத்தின் மீண்டபோதும் என் கையிலகப்பட்ட கரும்பன்ன சொற் காரிகை மீளமாட்டாள் என்பதை மெய்யாக உணர்ந்துகொள்' என்றனன். அரக்கன் சொல்லியதைக் கேட்ட சானகியார் முன்னினும் இருமடங்கு பயமடைந்தனர். அன்னம் போன்ற சானகியார் வருந்துதலைக் கண்ட சடாயு, 'இவ்வரக்கன் உடம்போ இப்போது சின்ன பின்னப்படும், நமது சக்கரவர்த்தித்திருக்குமரன் இங்கே வந்திலன் என்று சிறிதும் மனங்கவலற்க. இவன் தலைகள், பனைமரத்தில் தொத்திக்கொண்டிருக்கும் குலைகள் பூமியில்விழுவதேபோல், இவன் வெற்றிகொண்ட பத்துத் திசையினும் சென்று விழுவதைப் பார்க்கலாம்' என்று சொல்லி,

இடிப்பொத் தமுழக் கினிடுஞ்சிறை வீசி யெற்றி
முடிப்பத் திகளைப் படியிட்டு முழங்கு துண்டம்
கடிப்பக் கடிதுற் றவன்காண்டகு நீண்ட வீணைக் [ன்.
கொடிப்பற் றியொடித் துயர்வானவ ராசி கொண்டா

அந்தச் சமயத்தில் இராவணனே அரக்கினுருக்கு ஒத்த கண்ணையுடையானாய் இது வரையும் இவ்வகையான அபசெயம் பெறுமையால் உலகேழும் நடுநடுங்க நகைத்து மலை போன்ற தன் கையி லுள்ள வில்லை எடுத்து வளைத்து பாண வருஷம் பொழிந்தான். சடாயு அப் பாணங்களில் சிலவற்றைத் தன் சிறகில் எழுங் காற்றால் அடித்தும், சிலவற்றைத் தன் நகத்தால் துண்டப்படுத்தியும், சிலவற்றை மூக்கின் அலகால் துண்டப்படுத்தியும் அடித்ததே யல்லாமல், சர்ப்பங்களை எல்லாம் கண்டதுண்டப்படுத்தும் கருடனைப்போல், அவ் விராவணனது தலை பத்தினும் நீட்டும்

மூக்கின் அலகு என்னுஞ் சக்கரமுடையனைய் வருத்த, அவன் வில்லை வளைக்குமளவிலே அவன் இரத்தின குண்டலங்களைக் கவர்ந்து சென்றனன். அதைக் கண்ட இராவணன் புகர்நிற முள்ள பதினான்கு பாணங்களை அச் சடாயு மார்பே இலக்காகவிட அதைக் கண்ட தேவர்கள் எல்லாம் இனிச் சடாயு விழுந்தான் என்றே எண்ணி வருந்தினர். சடாயுவோ மிகுந்த கோபமடைந்து இராவணனது தோள் இருபதையும் வரிசையாகத் தத்தி நகத்தால் கொத்தி அலகாற் குடைந்து சிறகாற் புடைத்து முத்தாரமணிந்த மார்பிலிருக்கும் கவசத்தையு மூட்டறுத்தான். தன் கவசம் அறுபட்டதைக் கண்ட இராவணன் சடாயுவின்மேல் நூறு அம்பு அவன் மார்பே இலக்காகக் கொடுத்துவிடத் தேவர்களஞ்சி வெருக்கொண்டனர். அப்படித் தேவர்கள் வெருக்கொள்வதற்கு முன்னமே சடாயுவும் அவன் வில்லைப் பல்லாற்பறித்து ஒடித்து விட்டான். தேவர்கள் ஆனந்தக்கடலில் அழுந்தினர். உலகத்திற்கு அழிவு செய்பவனாகிய இராவணன் தனது வலிமைக்குத் தக்க சிறந்த வில் சடாயுவினால் அடியோடே ஒடிக்கப்பட்டதைக் கண்டு கோபித்த மனத்தையுடையவனும் பகைவெல்லும் வீரத்திற் சோர்வுறாதவனும் முப்புரம் பொடிபடுத்த முதல்வனது அம்பேபோன்ற சூலமெடுத்து சடாயுவின் மீது எறிந்தனன். அப்போது சடாயு இராவணனைப் பார்த்து, 'இவன் இதைப் பொறுக்கமாட்டான் என்று எண்ணுதலை அகற்றிவிடு; இதோ என் வல்லமையைப் பார்' என்று அச் சூலத்தைத் தன் மார்பிலேந்தி நின்றான். இப்படிச் செய்ய வல்லாரும் உண்டோ என்று தேவர்கள் எல்லாம் தம் தோள் புடைகொட்டி ஆரவா-

ரித்தனர். சடாயுவோ இராவணன் அம் முத்தலை-வேல் இழந்தமையால் அவன்படை வேறு எடா முன்னே ஆகாயம் மறையும்படி நீண்ட குதிரை பூண்ட தேரைச் செலுத்தும் பாகனுடைய தலையைப் பறித்து இராவணனது முகத்தில் வீசியெறிந்தான். அப்படி எறிந்த சடாயுவினது ஆற்றலை இராவணன் தன்னெஞ்-சின் மதித்து அச்சடாயுவின்மேல் ஓர் ஆடகத் தண்-டினை வாங்கி மோதியடித்தான். அதனால் சடாயுவும் மலைபோல மண்மேல் விழுந்தான். சடாயு மண்மேல் விழுந்தவுடன் இராவணன் தன்தேரை ஆகாயமார்க்க-மாகச் செலுத்தத் தொடங்கினான். அதைக்கண்ட சானகியாரோ பசும்புண்ணில் தீ நுழைந்தாற்போலத் துடி துடித்து நிலத்தில் வீழ்ந்து புரண்டு அழுதனர். அவ்வாறு சானகியார் வருந்துவதைக் கண்ட சடாயு, 'அன்னாய், நீ அவலத்தில் அழுந்தவேண்டா' என்று உயிர்த்து எழுந்து 'நீ எங்கடா போவது?' என்று இராவணன் தேரின்மேல் தேவர்கள் ஆரவாரிக்கப் பாய்ந்தான். அப்படித் தேரிற்பாய்ந்த சடாயு அவன் தண்டினைப்பிடுங்கி எறிந்து, தேரை யழித்துவிட்டு, தன் அலகாகிய வாளால் அவன் தேரிற்பூட்டியிருக்கும் குதிரை அறுபத்து நான்கினையும் அழித்துக் கொன்-றனன். இதுவேயன்றி அவன் அம்பறாத்தூணியையும் தன் நகத்தாற் பறித்து எறிந்து விட்டான். பிறகு,

மாச்சிச் சிரம்பாய்ந் தவன்மார்பினுந்
 தோள்கண் மேலும்
ஓச்சிச் சிறகாற் புடைத்தான்கடித்
 தானு லையா

மூச்சிற் றவிரா வணனும்முடி
சாய்ந்தி ருந்தான்
போச்சித் தனைபோலு நின்றுற்ற
லெனப் புகன்றான். (273)

அவ்வே லையினை முனிந்தான்முனிந்
தாற்ற லன்ன
வெவ்வே லரக்கன் விடலாம்படை
வேறு காணான்
இவ்வே லையினை யிவனின்னுயி
ருண்ப லென்னாச்
செவ்வே பிழையா நெடுவாளுனை
தீர்த்தெ றிந்தான். (274)

வலியின் றலைதோற் றிலன்மாற்றருந்
தெய்வ வாளால்
புவியுந் தலையென் றஃதன் றியும்
வாழ்க்கை நாளும்
மெலியுங் கடைசென் றுளதாகலின்
விண்ணின் வேந்தன்
குலியம் மெறியச் சிறையற்றதோர்
குன்றின் வீழ்ந்தான். (275)

விரிவுற்று நிறைந்த சிறகுகள் அறுபட்டுக் கீழே விழ சடாயுவும் பூமியில் விழுந்தான். தேவர்கள் எல்லாம் ஓடிப்போயினர். முனிவர் கூட்டங்கள் சானகியார் துணையிழந்தார் என்று வருந்தினர். வைகுண்டத்தி லுள்ளவர் பசும்பொன் மழையைப் பொழிந்தனர். இராவணனோ சடாயு கீழேவிழவே ஆரவாரித்தான். சானகியாரோ கானவர் வலையி லகப்பட்ட மானைபோல் மனஞ் சோர்ந்து வருந்தி, பெருமூச்

செறிந்து ஒரு துணையுமில்லாளாய்க் கொள்கொம்பு ஒடியக் கீழே விழுந்த கொடிபோல மனங் குலைந்து, பின்னர் 'எனக்குத் துணையாக வந்த சடாயுவும் தோற்று வீழ்ந்தனன். இனி எனக்குத் துணை வருவார் யார்' என்று இனிய துணைபிரிந்து இன்னலில் வருந்தும் அன்றிற் பெடைபோல நின்று புலம்பத் தொடங்கினார்.

'இளையவன் சொல்லை மறுத்தும் பேதையேன் அவரை விரைந்துபோக நீக்கினேன். இச் சடாயுவினால் சிறை நீங்கும் என்று இருந்தேன். விதியார் இன்னமும் என்ன செய்வாரோ!' என்று வருந்தினாள் சீதை.

அல்லலுற் றேனைவந் தஞ்ச லென்றவிந்
நல்லவன் றோற்பதே நரகன் வெல்வதே
வெல்வதும் பாவமோ வேதம் பொய்க்குமோ
இல்லையோ வறமென விரங்கி யேங்கினாள். (276)

நாணிலெ னுரைகொடு நடந்த நம்பிமீர்
நீணிலை யறநெறி நின்று ளோர்க்கெலாம்
ஆணியை யுந்தையர்க் கமைந்த வன்பனைக்
காணிய வம்மெனக் கலங்கி விம்மினாள். (277)

கற்பழி யாமையென் கடமை யாயினும்
பொற்பழி யாவலம் பொருந்தும் போர்வலான்
விற்பழி யுண்டது வினையி னேன்வந்த
இற்பழி யுண்டதென் றிரங்கி யேங்கினாள். (278)

எல்லியில் விசும்பிடை யிருந்த நேமியாய்
சொல்லிய லாய்நெறி தொடர்ந்த தோழமை
நல்லிய லருங்கடன் கழித்த நம்பியைப்
புல்லுதி யோவெனப் பொருமிப் பொங்கினாள்.

இவ்வாறு அழுகின்ற சீதாபிராட்டியாரினது தன்மையையும், தன் சிறகு இழந்து பூமியில் குற்றுயிருடன் வீழ்ந்து கிடக்கும் சடாயுவின் தன்மையையும் கண்டு இராவணன் சீதாபிராட்டியாரை இரதத்தின் மேல் வைத்த நிலத்தோடும் எடுத்துத் தன் பருத்த புயங்களின்மீது வைத்துக்கொண்டு ஆகாய மார்க்கத்திற் சென்றான். இராவணன் ஆகாய மார்க்கத்திலே செல்லுகின்ற வேகத்தினால் சீதையின் கண்களும் மனமும் சுழலலுற்றன; பதிவிரதையான பேதை உள்ளத்தில் நிறைந்த அறிவு அழியப் பெற்று யாதொன்றையும் உணர மாட்டாதவளாய்த் தன்னை மறந்தவளாய் மூர்ச்சையடைந்து நிலத்திற் சோர்ந்து கிடந்தாள்.

எகின னரக்கனு மெருவை வேந்தனும்
மோகவெந் துயர்சிறி தாறி மூர்ச்சியா
மாகமே னோக்கினான் வஞ்சன் வல்லையில்
போகுதல் கண்டகம் புலர்ந்து சொல்லுவான். (280)

வந்திலர் மைந்தர்நம் மருகிக் கெய்தி
வெந்துயர் துடைத்தன ரென்னு மெய்ப்புகழ்
தந்திலர் விதியினார் தரும வேலியைச்
சிந்தினர் மேலினிச் செயலெ னாங்கொலோ. (281)

வெற்றிய ருளரெனின் மின்னி னுண்ணிடைப்
பொற்றொடிக் கிந்நிலை புகுதற் பாலதோ
உற்றதை யின்னதென் றுணர கிற்றிலேன்
சிற்றவை வஞ்சனை முடியச் செய்ததோ. (282)

பஞ்சணை பாம்பணை யாகப் பள்ளிசேர்
அஞ்சன வண்ணனை யிராம னாகலால்
வெஞ்சின வரக்கனால் வெல்லற் பாலனோ
வஞ்சனை யிழைத்தனன் கள்ள மாயையால். (283)

வேரற வரக்கரை வென்று வெம்பழி
தீருமென் சிறுவனுந் தீண்ட வஞ்சுமால்
ஆரியன் றேவியை யரக்க னன்மலர்ப்
பேருல களித்தவன் பிழைப்பில் சாபத்தால். (284)

பருஞ்சிறை யின்னன பன்னி யுன்னுவான்
அருஞ்சிறை யுற்றன ளாமெ னுமனம்
பொருஞ்சிற கிற்றதே பூவைக் கற்பெனும்
இருஞ்சிற கிறுதென விடரு நீங்கினான். (285)

அஞ்சிறை குருதியா லழிந்து சோர்வுற
வஞ்சியை மீட்கிலே னென்னு மானமும்
செஞ்சவே மக்கள்பாற் சென்ற காதலும்
நெஞ்சுறத் துயின்றன னுணர்வு நீங்கலான். (286)

வஞ்சியை யரக்கனும் வல்லை கொண்டுபோய்ச்
செஞ்செவே திருவுருத் தீண்ட வஞ்சுவான்
நஞ்சிய லரக்கியர் நடுவ ணுயிடைச்
சிஞ்சுப வனத்திடைச் சிறைவைத் தானரோ. (287)

இந்நிலை யினையவன் செயலி யம்பினும்
பொன்னிலை மானின்பின் றொடர்ந்து போகிய
மன்னிலை யறிகென மங்கை யேவிய
பின்னிளை யவனிலை பேசு வாமரோ. 288)

சீராமனைத் தேடிச் சென்ற இளைய பெருமாள் சானகியார் தனிமையை எண்ணி எண்ணி மனம் பதை பதைக்குஞ் சிந்தையனாய்க் காகுத்தனைப் பிரிந்ததனால் வருந்தும் பரதாழ்வானது செய்கையை யொத்து விரைந்து நடப்பதாயினான்.

தெண்டிரைக் கலமென விரைவிற் செல்கின்றான்
புண்டரி கத்தடங் காடு பூத்தொரு
கொண்டல்வந் திழிந்தெனக் கோலத் தான்றனைக்
கண்டனன் மனமெனக் களிக்குங் கண்ணினன். ()

காகுத்தன், துண்ணென்று மாரீசன் இட்டழைத்த ஓசை சென்று மயக்கச் சானகி தன் பெண்டன்மையால் மனம அயர்வாளென்று எண்ணிக்கொண்டு வருகின்ற சமயத்தில் இளையவனைக் கண்டனன். 'உடம்போடு மனமும் தளர்ச்சியடையப்பெற்ற இளைய வீரனை இலக்குவன், சீதையைப் பர்ணசாலையிற் பாதுகாத்திருக்கும்படி கட்டளையிட்ட எனது வார்த்தையைமீறி, இது மாயமான் இதனைத் தொடரலாகாது என்று உண்மையை உணர்ந்து முன்பு கூறிய தனது வார்த்தையைக் கடந்து, இங்கு வந்து சோர்வடைகின்ற மனத்தையுடையவனாய் இவன் என் அருகிலே தனித்துவந்த தன்மை என்னை ? பெண்களுக்கு உரிய பேதைமையுடைய சீதை, வருத்தந்தருஞ் சொற்களைக் கூறிய, பிளவுபட்ட வாயையுடைய மாயமானாய்வந்த, இவ்வரக்கனது வார்த்தைகளை வஞ்சனை என்று கருதாமல் மெய்யென்றே நம்பினவளாய்க் கொடிய வார்த்தைகளைக் கூறி வலிய ஏவியதனால் எனது நிலைமையை அறிதற்கு வந்த விபரீதச் செயலேயாகும்' என்று இராகவன் மனத்தி லெண்ணினன். மேலும், 'விதியானது இன்னமும் என்னென்னமுடிக்குமோ' என்று வருந்துகிற இரகுவீரனை இளையபெருமாள் திருவடி தொழுது நின்றனன். சீராமன் அவனை மார்போடு இறுகத்தழுவி, 'அப்பா இளஞ்சிங்கமே. நீ என் சொல்லைக் கடந்து இங்கே வரவேண்டிய காரணம் என்ன ?' என்று கேட்க, அதற்கு

'உலகத்திற் கேட்டறியாத கொடுஞ் சொல்கூறிச் சாணகியார் என்னை ஏவ, நான் அது மாய அரக்கன் உரை' யென்று தடுத்தேன். மீண்டும் அன்னையார் 'நீ போய் அறிந்துவா' என்று வற்புறுத்த நான் தேவரீரது புயவலியை எடுத்துச் சொல்லினேன், மீண்டும் மறுத்து,

ஏகாது நிற்றி யெனின்யா னெருப்பி
னிடைவீழ்வெ னென்று முடுகா
மாகா னகத்தி னிடையோட லோடு
மனமஞ்சி வஞ்ச வினையேன்
போகா திருக்கி னிறவா திருக்கை
புணரா னெனக்கொ டுணரா
ஆகா திறக்கை யறனென்றெ னக்கொ
டிவண்வந்த தென்ன வமலன் (290)

இதைக்கேட்ட இரகுநந்தனன் சானகி சாவாதிருத்தலிலள், அவளடைந்த துன்பமோ தடுக்க முடியாது; ஐயோ துன்பப்படும் அப் பெண்மணியைத் தெளிவிக்கச் சொன்ன சொற்கள் அவள் மனத்திற் பதியவில்லை; இஃது அவரைக் கைக்கொண்டு போகிறவர்கள் செய்த வஞ்சனையே யல்லது வேறல்ல என்று தன் மனந்துணிந்து,

வந்தாய் திறத்தி னுளதன்று குற்ற
மடவாண் மறுக்க முறுவாள்
சிந்தா குலத்தொ டுரைசெய்த செய்கை
யதுதீரு மென்று தெளிவாய்
முந்தே தடுக்க வொழியா தெடுத்த
வினையேன் முடித்த முடிவால்
அந்தோ கெடுத்த தெனவுன்னி யுன்னி
யழியாத வுள்ள மழிவான். (291)

சீராமன் 'காரியக் கேடாய் விட்டது' என்று எண்ணி எண்ணி மனமழிந்து, 'இனி இங்கே நின்று, நாம் தாமதிப்பதனால் ஆம் பயன் என்ன? சானகி-யாரைக் கண்டால் நமது துயரம் நீங்கும்' என்று விரைந்து தன் பாணத்தினும் மிக்க வேகமாய் நடந்து போய்ச் சானகியாரை விட்டு நீங்கிய இடத்தை யடைந்தான்.

ஓடி வந்தனன் சாலையின்
சோலையி னுதவும்
தோடி வர்ந்தபூஞ் சுரிகுழ
லாடனைக் காணான்
கூடு தன்னுடை யதுபிரிந்
தாருயிர் குறியா
நேடி வந்தது கண்டில
தாமெனா நின்றான். (292)

தைத்த சிந்தையன் சனங்குழை
யணங்கினைக் காணு
துய்த்து வாழ்தர வேறொரு
பொருளிலா னுதவ
வைத்த மாநிதி மண்ணொடு
மறைந்தன வாங்கிப்
பொய்த்து ளோர்கொளத் திகைத்துநின்
றுரையும் போன்றான். (293)

இராகவன் திகைப் பெய்தியபோது மண் சுழன்-றது, மலைகள் சுழன்றன, அறிவுடையோர் நெஞ்சு சுழன்றது, வேத நான்கும் சுழன்றன, பிரமனுடைய கண்ணுஞ் சுழன்றது, சூரிய சந்திரரும் சுழன்றனர். இவ்வாறு நிகழ அறத்தைக் கோபிப்பானே! அரு-

ளையே கோபிப்பானே! தேவர்களையே கோபிப்பானே! முற்றத் துறந்த முனிவரையே கோபிப்பானே! வேதங்களையே கோபிப்பானே! யாதோ முடிவென்று யாவரும் மனநடுங்கினர். பிரம கற்பத்தில் எப்பொருளும் ஒடுங்கிப் போவதேபோல் கீழ்மேலும் மேல் கீழுமாகக் கலங்கின; இவ்வாறாக, 'ஒரு புறத்தே தேர்ச் சக்கரம் பதிந்திருப்பதாகக் காணப்படுகின்றதே, சானகியாரைத் தீண்ட அஞ்சிப் பூமியோடு தோண்டி யிருப்பதாகவும் தெரிய வருகின்றதே, நாம் அறிவிலார் போல நின்று யோசிப்பதனால் ஒரு பயனுமில்லை; அவர் நெடுந்தூரம் போவதன் முன்னே நாம் தொடர்ந்து போவதே கருமம்', என்று இளையவன் தொழுது சொல்லினன். இரகுநாயகன், 'ஆம் ஆம் அப்படிச் செய்வதே தக்கது' என்று தன் முதுகில் அம்பறாத் தூணி முதலியவை தாங்கிக்கொண்டு மலைமரம் முதலியவை மடிந்துபோக நிலத்தின்மேல் அவன் தேர் சென்ற வழியை நோக்கி நடந்து சென்றனன்.

மண்ணின் மேலவன் றேர்சென்ற
சுவடெலா மாய்ந்து
விண்ணி னோங்கிய தொருநிலை
மெய்யுற வெந்த
புண்ணி னூடுறு வேலென
மனமிகப் புழுங்கி
எண்ணி னுமினிச் செய்வதென்
னிளவலே யென்றான். (294)

இளையவன் 'தேரோ தெற்கு நோக்கி நடந்ததென்றே தெரிய வருகின்றது. அண்ணலே, உமது பாணத்திற்கு அது நெடிதன்று; மனம் வருந்தி நிற்-

பதனுல் என்ன பிரயோசனம்' என்றுன்: அதுதான் தக்கது என்று இருவரும் அத்தென்திசை நோக்கி நடந்து யோசனை இரண்டு நடந்து போக பூமியில் வீணைக்கொடி யொன்று வீழ்ந்திருக்கக் கண்டனர். அவ்வீணைக் கொடியைக் கண்டு 'அக் கண்டகரோடு நமது சானகி பொருட்டாகத் தேவர்கட்குப் போர் நடந்ததோ' என்று சந்தேகித்து 'இது சடாயுவினுல் நடந்த போர்' என்று உணராமல் புண்டரீகம்போன்ற தன் கண்ணில் நீர்வார நின்றுன் சீராமன், பின்னும் 'இளையவனே இக்கொடி முறிந்திருப்பதைப் பார்த்தால் இங்கு விரைவில் வந்து சேர்ந்த உங்கள் தந்தையாகிய சடாயு வுடையாருடைய ஆலகினுல் இக்கொடி முறியப்பட்டதாகத் தோன்றுகின்றது. அவர் வலிமைகொண்டு தாக்கி யிருப்பார், அவருக்கு அதனுல் இடையிற் சம்பவித்தது யாதோ அதை அறிந்தோமில்லை. அவரோ துணையில்லாது தனிப்பட்டவர். மேலும் அவர் உடல் மெலிவுறத்தக்க கணக்கிடுதற்கு அருமையான காலங்கள் கழியப் பெற்றவர்', என்று இராகவன் சொல்லினன். அதைக் கேட்ட இளையவன் 'சடாயுவும் வல்லமை யுடையவராகையால் இன்றைப் பொழுது முழுவதும் அவர் பகைவனைச் செல்ல விடாமல் மிகவும் தடை செய்துகொண் டிருந்தாலும் இருக்கலாம்; ஆகையால் நாமும்போய் அவரைச் சேரலாம், அவரே பகைவனை வென்று பிராட்டியாரை மீட்டாலும் மீட்டுவருவர். இங்கே நாம் காலதாமதஞ் செய்வதால் யாதொரு பயனும் இல்லை' என்று கூறினன். அதற்கு இராகவன் இசைய இருவரும் காற்றே போலவும் காற்றுடிபோலவும் விரைந்து செல்கையில் ஒரு வில்லானது ஆகாயத்தி னின்றும் இந்திரவில்

முறிந்து விழுந்தாற்போல பூமியில் விழுந்திருப்பதைக் கண்டனர் இராகவன் இளையவனை நோக்கி, 'இவ்-வில்லோ தேவர்களாற் கடையப்பட்ட பாற்கடலின் மத்தாகிய மந்தரகிரியேபோலத் தோன்றுகின்றது. இதை நமது பிதாவாகிய சடாயுவோ விரைந்து ஒடித்திருக்கின்றார். இது கிடக்கின்ற நிலையை நோக்கிப் பார்' என்று சொல்லி வெகுதூரம் நடந்துபோகையில் முத்தலைச் சூலம் முதலிய பல பாணங்கள் நிரம்பிய புட்டில் இரண்டு மலைபோலக் கிடப்பதைக் கண்டார்-கள். பின்னும் வெகுதூரம் நடந்துபோகவே ஆகா-யத்தில் சுடர்விட்டெறிக்கும் சோதிகள் யாவும் கூடிய தென்று சொல்லத்தக்கதாகவும் அக் கானகமெல்லாம் பரந்த சோதியை விளக்குவதாகவும் இராவணனது மார்பினின்றும் பறித்து வீசிய கவசத்தைக் கண்டார்கள். பின்னும் நடந்துபோகையில் அக்காடு மறை-யும்படி குதிரைகளும் சாரதிகளும் இறந்து கிடக்கக் கண்டார்கள். பின்னும் மேலே செல்கையில் சூரிய-மண்டலம் பல மண்ணிற் கிடந்தாற்போல மணிக்-குண்டலங்களுடன் பல பூண்களின் குவியலும் தோளணிகளும் இரத்தின கிரீடங்களும் இருக்கக்கண்டு இரா-கவன் இளையவனைப் பார்த்து, 'நமது பிதாவோ வெகு காலங் கண்டவர், அவருடன் பலபேர் நெருங்கிப் போர் செய்திருக்கலாம்போற் காண்கின்றதே; யாது செய்வார்' என்று சொல்லினன்.

திருவி ளையக ளுரைசெயச் சுமித்திரை சிங்கம்
தருவி னீளிய தோள்பல தலைபல வென்றால்
பொருது தாதையை யித்தனை நெறிக்கொடு போனான்
ஒருவ னேயவ னிராவண னெனை வுரைத்தான்.

மடலு ணூட்டிய தாரிளை யோன்றனை மதியா
மிடலு ணூட்டங்க டீயுக நோக்கினன் விரைவான்
உடலு ணூட்டிய குருதியம் பரவையி னும்பர்
கடலு ணூட்டிய வரையெனத் தாதையைக் கண்டான்.

இரகுவீரன் சடாயுவைக் கண்டவுடன் தாமரை மலர்போன்ற கண்ணினின்றும் நீர்த்துளிகள் சிந்த வெள்ளிமலைமேல் அஞ்சனமலை வீழ்வதேபோல் விழுந்து உயிர்ப்படங்கி ஒரு நாழிகை வரையிலும் உணர்வில்லாமல் இருக்க அதைக்கண்ட இளையவன் அருவிநீரைக்கொண்டு தெளிக்க அயர்வு நீங்கினவனாய்,

தந்தா தையரைத் தநயர் கொலைநேர்ந்தார்
முந்தாரே யுள்ளார் முடிந்தான் முனையொருவன்
எந்தாயோ வெற்காக நீயு மிறந்தனையோ
அந்தோ வினையே னருங்கூற்ற மானேனே. (297)

பின்னுறுவ தோராதே பேதுறுவேன் பெண்பாலாள்
தன்னுறுவ நீர்ப்பான் றனியுறுவ தோராதே
உன்னுறவு நீதீர்த்தா யோருறவு மில்லாதேன்
என்னுறுவான் வேண்டி யிடருறுவே னென்றுயே. ()

மாண்டேனே யன்றோ மறையோர் குறைமுடிப்பான்
பூண்டேன் விரத மதனு னுயிர்பொறுப்பேன்
நீண்டேன் மரம்போல நின்றொழிந்த புன்றொழிலேன்
வேண்டேனிம் மாமாயப் புன்பிறவி வேண்டேனே.

என்றாம் பற்றுண்ண வேன்றுயைச் சான்றோயைக்
கொன்றானு நின்றான் கொலையுண்டு நீகிடந்தாய்
வன்றாட் சிலையேந்தி வாளிக் கடல்சுமந்து
நின்றேனு நின்றே னெடுமரம்போ னின்றேனே. ()

சொல்லுடையா ரென்போ
　　லினியுளரோ தொல்வினையேன்
இல்லுடையாள் காணா
　　விறகுடையா யெண்ணிலாப்
பல்லுடையா யுன்னைப்
　　படையுடையான் கொன்றகல
வில்லுடையே னின்றேன்
　　விறலுடையே னல்லேனே. (301)

இவ்வாறு இரகுவீரன் அழுது புலம்ப இளையவனும் அத்தன்மையனாக, அதனால் நினைப்புற்று மனத்தில் சிறிது தெளிவு தோன்றினமையின் பறவைகட்கு அரசனாகிய சடாயு துன்பத்தோடும் சுவாசம் விடுவானாகி இராமலட்சுமணர் இருவரையும் பார்த்தான்,

உற்ற துணரா துயிருலைய வெய்துயிர்ப்பான்
கொற்றவரைக் கண்டான்ற னுள்ளங் குளிர்ப்புற்றான்
இற்ற விருசிறகு மின்னுயிரு மேழுலகும் [றான்.
பெற்றனனே யொத்தான் பெயர்த்தேன் பழியென்

பாக்கியத்தா லின்றென் பயனில் பழியாக்கை
போக்குகின்றேன் கண்ணுற்றேன் புண்ணியரே வம்பி
தாக்கி யரக்கன் மகுடத் தலைதுமித்த [னென்று
மூக்கினா லுச்சி முறைமுறையே மோக்கின்றான். ()

‘இது வஞ்சனையால் வந்த வருகை யென்றே என் மனம் முன்னமே நினைந்ததாயினும் நீங்களிருவீரும் அருந்ததியை யொத்த சானகியாரை நீங்கினீரோ’ என்று வருந்துகின்றேன் என்று சடாயு சொல்ல, இளையபெருமாள் மாயமான் வந்தது முதலாகச்சடாயு விழுந்திருந்ததைக் கண்டது ஈறாக நடந்தன யாவற்றையும் ஒன்றும் விடாமல் எடுத்துச் சொல்லினான்.

அதைக் கேட்ட சடாயுவும் அவர்கள் மனத்திலே துன்பம் அடையாத வண்ணம் தேற்றுவது நல்லது என்று எண்ணிச் சொல்வானாயினான்.

அதிசய மொருவரா லமைக்க லாகுமோ
துதியறு பிறவியி னின்பதுன் பந்தான்
விதிவய மென்பதை மேற்கொ ளாவிடின்
மதிவலி யான்விதி வெல்ல வல்லமோ (304)

தெரிவுறு துன்பம்வந் தூன்றச் சிந்தையை
இரிவுசெய் தொழியும திழுதை நீரதால்
பிரிவுசெய் துலகெலாம் பெறுவிப் பான்றலை
அரிவுசெய் விதியினார்க் கரிதுண் டாகுமோ. ()

அலக்கணு மின்பமு மணுகு நாளிவை
விலக்குவ மென்பது மெய்யிற் றுகுமோ
இலக்கமுப் புரங்களை யெய்த வில்லியார்
தலைக்கலத் திரந்தது தவத்தின் பாலதோ. (306)

பொங்குவெங் கோளரா விசும்பு பூத்தன
வெங்கதிர்ச் செல்வனை விழுங்கி நீங்குமால்
அங்கண்மா ஞாலத்தை விளக்கு மாய்கதிர்த்
திங்களு மொருமுறை வளருந் தேயுமால். (307)

அந்தரம் வருதலு மனைய தீர்தலும்
சுந்தரத் தோளினிர் தொன்மை நீரவால்
மந்திர விமையவர் குருவின் வாய்மொழி
இந்திர னுற்றன வெண்ண வொண்ணுமோ. ()

தடைக்கரும் பெருவலிச் சம்ப ரப்பெயர்க்
கடைத்தொழி லவுணனாற் குலிசக் கையினான்
படைத்தனன் பழியது பகழி வில்வலாய்
துடைத்தன னுந்தைதன் குவவுத் தோளினால். ()

வேறு

பிள்ளைச்சொற் கிளிய னாளைப்
பிரிவுற லுற்ற பெற்றி
தன்னாற்ற வறமுந் தேவர்
துயரமுந் தந்த தேயால்
கள்ளப்போ ரரக்க ரென்னுங்
களையினைக் களைந்து வாழ்தி
புள்ளிற்கும் புலனில் பேய்க்குந்
தாயன்ன புலவு வேலோய். (310)

வடுக்கண்வார் கூந்த லாளை
யிராவணன் மண்ணி னோடும்
எடுத்தன னேகு வானை
யெதிர்ந்தென தாற்றல் கொண்டு
தடுத்தனெ னாவ தெல்லாந்
தவத்தரன் றந்த வாளால்
படுத்தன னீங்கு வீழ்ந்தே
னிதுவின்று பட்ட தென்றான். (311)

இதுதான் நடந்த செய்தி யாகுமென்று சடாயு சொன்ன சொல் காதிற் படா முன்னே இராகவன் கண்ணோ உதிரமயமாயின. நெருப்பே போலப் பெருமூச் செறிந்தது; புருவம் நெற்றிமே லேறின; அக்கினிச் சுவாலைகள் எவ்விடத்தும் அதிகமாக ஓடின; அண்ட கோளங் கலங்கியது; மலைகள் எல்லாம் பிளவுபட்டன; மண்ணுலகம் திரியவும், பெரிய மலைகள் திரியவும், மற்ற பூதமைந்தும் திரியவும், சூரிய சந்திரர் திரியவும், விண்ணுலகம் திரியவும், பிரமனும் திரியவும்

நின்றதனால் இரகுநாயகன் எப் பொருளுந் தானேயா மென்பது விளங்கக் காட்டியது. இவன் கொண்ட கோபம் யார் பாலதோ என்று உலக மெல்லாம் பயந்து வெறுத்து நின்று வருந்துகின்ற சமயத்தில் இராகவன் கோப நகையுடன், 'பெண்மணி யொருத்தியை அறிவில்லாத அரக்கன் கைப் பற்றிச் செல்லவும் நீர் இவ் வகையான துன்பத்தை அடையவுமாய்விட்டபடியால் எட்டுத் திக்குகள் வரையிலும் உள்ள இவ் வுலகங்களை யெல்லாம் தேவர்களுடனே இப்போதே அழிக்கின்றேன். நக்ஷத்திரங்கள் உதிர்வதும், சூரிய சந்திரர் பிதிர்வதும், வானமெங்கும் எரி தோன்றுவதும், நிலம முதலிய பஞ்ச பூதங்கள் அழிவதும், தேவர்க ளிறப்பதும், சத்த லோகங்களும் அழிவதும், அண்டகோளமும் அப்புறத்ததாகிய இடமுந் தீய்ந்து நீர்க்குமிழிபோல் அழிவதும் நீர்பார்க்கப் போகிறீர்' என்று கோபிக்குங் காலத்தில் சூரியனும் மேருவில் மறையலானான். அட்ட திக்கயங்களும் அஞ்சி ஓடின. உலகமெல்லாம் அழிந்துவிடப் போகிறது என்பது என்! அருகில் நின்ற அஞ்சாத இளையபெருமாளும் அஞ்சினான்.

இவ்வழி நிகழும் வேலை
யெருவைகட் கிறைவன் யாதும்
செவ்வியோய் முனியல் வாழி
தேவரு முனிவர் தாமும்
வெவ்வலி வீர நின்னால்
வெல்லுமென் றேமுற் றய்வார்
எவ்வலி கொண்டு வெல்வா
ரிராவணன் செயலை யென்றான். (312)

நாட்செய்த கமலத் தண்ணா
　　னல்கின நகையி லாற்றல்
தோட்செய்த வீர மென்னிற்
　　கண்டனை சொல்லு முண்டோ
தாட்செய்த கமலத் தானே
　　முதலினர் தலைபத் துள்ளாற்
காட்செய்கின் றார்க ளன்றி
　　யறஞ்செய்கின் றார்கள் யாரே. (313)

தெண்டிரை யுலகந் தன்னிற்
　　செறுநர் மாட் டேவல்செய்து
பெண்டிரின் வாழ்வ ரன்றே
　　யிதுவன்றோ தேவர் பெற்றி
பண்டுல களந்தோ னல்கப்
　　பாற்கட லமுத மந்நாள்
உண்டில ராயி னிந்நா
　　ளன்னவர்க் குய்த லுண்டோ. (314)

வம்பிழை மார்பின் வஞ்சி
　　வனத்திடைத் தமியள் வைகக்
கொம்பிழை மானின் பின்போய்க்
　　குலப்பழி கூட்டிக் கொண்டீர்
அம்பிழை வரிவிற் செய்கை
　　யையன்மீ ராயுங் காலை
உம்பிழை யென்ப தல்லா
　　லுலகஞ்செய் பிழையு முண்டோ. (315)

ஆதலான் முனிவா யல்லை
　　யருந்ததி யனைய கற்பின்
காதலா டுயர நீக்கித்
　　தேவர்தங் கருத்து முற்றி

வேதனூன் முறையின் யாவும்
விதியுளி நிறவி வேறும்
தீதுள தடைத்தி யென்றான்
சேவடிக் கமலஞ் சேர்வான். (316)

புயனிற வண்ண னண்டப்
புண்ணியன் புகன்ற சொல்லைத்
தயரதன் பணியி தென்னச்
சிந்தையிற் றழுவி நின்றான்
அயலினி முனிவ தென்னை
யரக்கரை வருக்கந் தீர்க்கும்
செயலினிச் செயலெ லென் றெண்ணிக்
கண்ணிய சீற்றந் தீர்ந்தான். (317)

ஆயபின் னமலன் றானு
மையநீ யமைதி யென்ன
வாயிடை மொழிந்த தன்றி
மற்றொரு செயலு முண்டோ
போயதவ் வரக்க னெங்கே
புகலெனப் புள்ளின் வேந்தன்
ஓய்வின னுணர்வுந் தேய
வுரைத்தில னுயிருந் தீர்ந்தான். (318)

சீதங்கொண் மலரு ளோனுந்
தேவரு மென்ப தென்னே
வேதங்கள் காண்கி லாமை
வெளிநின்றே மறையும் வீரன்
பாதங்கள் கண்ணிற் பார்த்தான்
படிவங்கொ ணெடிய பஞ்ச
பூதங்கள் விளியு நாளும்
போக்கிலா வுலகம் புக்கான். (319)

வீடவ னெய்தும் வேலை
 விரிஞ்சனே முதல மேலோர்
ஆடவர்க் கரச னோடு
 தம்பியு மழுது சோரக்
காடமர் மரனு மாவுங்
 கற்களுங் கரைந்து சாய்ந்த
சேடரும் பாரி னோர்க்கும்
 கரஞ்சிரஞ் சேர்ந்த வன்றே. (320)

அறந்தலை நின்றி லாத
 வரக்கனி னுண்மை தீர்ந்தேன்
துறந்தனென் றவஞ்செய் கேனோ
 துறப்பெனோ வுயிரைச் சொல்லாய்
பிறந்தனென் பெற்று நின்ற
 பெற்றியாற் பெற்ற தாதை
இறந்தன னிருந்து ளேன்யா
 னென்செய்கே னிளவ லென்றான். (321)

சிராமன் சொன்னதைக் கேட்ட இளைய பெருமாள் அவனை வணங்கி, 'விதியின் தன்மையால் விளைந்தது ஒன்றோ? நாம் இங்கு நினைவதனால் என்ன பயன்! நாம் அரக்கரை வருக்கத்தோடும் கொன்றபின் அன்றோ நமது கொடுந் துயரம் நீங்கும்? தேவரீர் சானகியாரைப் பிரிந்திருக்கின்றீர்! அதுவுமல்லாமல் உமது பிதாவை உயிர்கொண்ட இராவணனை உயிர் வாங்காமல் இருந்தே தவஞ்செய்வது என்ன காரியம்' என்று சொல்லி முடித்தனன். அதைக் கேட்டு இராகவன் அயர்ச்சி நீங்கி, 'இவ்வாறு எண்ணிக்கொண்டிருப்பது மதியீனம்' என்று எண்ணித் தன் கண்-

ணீரை விலக்கி இறந்த பிதாவுக்குச் செய்யவேண்டிய உரிமைக் கடன்களை எல்லாம் செய்து முடிக்கத் தீர்மானித்து,

இந்தன மனைய வென்னக்
காரகி லீட்டத் தோடும்
சந்தனங் குவித்து வேண்டுந்
தருப்பையுந் திருத்திப் பூவும்
சிந்தினன் மணலின் வேதி
தீர்தர வியற்றித் தெண்ணீர்
தந்தனன் றாதை தன்னைத்
தடக்கையா னெடுத்துச் சார்வான். (322)

ஏந்தின னிருகை தன்னு
லேற்றின னீமந் தன்மேல்
சாந்தொடு மலரு நீருஞ்
சொரிந்தனன் றலையின் சாரல்
காந்தெரி கனலை மூட்டிக்
கடன்முறை கடவா வண்ணம்
நேர்ந்தன னிரம்பு நன்னூன்
மந்திர நெறியின் வல்லான். (323)

கிளித்தன களித்த மேனி
தாமரைக் கெழுவு செம்பூத்
துளித்தன வனைய வென்னத்
துள்ளிசோர் வெள்ளக் கண்ணன்
குளித்தனன் கொண்ட லாற்றுக்
குளித்தபின் கொண்ட நன்னீர்
அளித்தன னரக்கர்ச் செற்ற
சீற்றத்தா னவலந் தீர்ந்தான். (324)

மீட்டினி யுரைப்ப தென்னே
விரிஞ்சனே முதல மேல்கீழ்
காட்டிய வுயிர்க ளெல்லா
மருந்தின களித்த போலாம்
பூட்டிய கைக ளாலப்
புள்ளினுக் காசைக் கொள்கென்
றாட்டிய நன்னீ ரைய
னுண்டநீ ரொத்த தன்றே. (325)

பல்வகைத் துறையும் வேதப்
பலிக்கடன் பலவு முற்றி
வெல்வகைக் குமர னின்ற
வேலையின் வேலை சார்ந்தான்
தொல்வகைக் குலத்தின் வந்தான்
துன்பத்தாற் புனலுந் தோய்ந்து
செல்வகைக் குரிய வெல்லாஞ்
செய்குவா னென்ன வெய்யோன். (326)

அந்திக் காலம் வரவே இராமலட்சுமணர்கள் அச் சடாயு உயிர் நீங்கிய இடத்தைக் கடந்து மேகந் தவழும் மலைச் சிகரத்தில் துயில் கொண்டனர். இந்திரனுக்கும் அடங்காத இராக்கத சேனை எங்குஞ் சூழ்ந்து கொண்டாற் போலக் கொடுந் துயரத்திற்கு ஊன்று கோலே போன்ற விரிந்த இருள் எங்கும்நெருங்கியது. மலைகளினின்று மரங்கள் அருவியாய் தேனைச் சிந்துவது இராகவன் சீதை பிரிவாற் படுந் துயரங் கண்டு கண்ணீர் விடுவதே போலத் தோன்றின. மானமும், கோபமும், தாதை மரணமும், ஞானமும், துயரமும் அவனை மலைபோல நின்று வருத்தின. நீல நிறமுள்ளவரான இராமபிரானது மனத்திலே சீதை பிரிந்த-

தனு னுண்டான துன்பம், சூலாயுதம் போல வருத்த, வருந்துகிற சமயத்தில், எல்லாவற்றிற்கும் முதற்காரணமான எம்பெருமானது பெரிய நாபித் தாமரை மலரில் தோன்றிய பிரமன் முடிகின்ற ஊழிக்காலம் கழிந்தாற்போல அப் பேரிரவு நீங்கியது. அப்போது,

மயிலும் பேடையு முடன்றிரிய
மானுங் கலையு மருவிவர
மயிலும் பிடியுங் கடகரியும்
வருவ திரிவ பார்க்கின்றான்
குயிலுங் கரும்புஞ் செழுந்தேனும்
குழலும் யாழுங் கொழும்பாகும்
அயிலு மமுதுஞ் சுவைநீத்த
மொழியைப் பிரிந்தா லழியாதே. (327)

முடிநாட் டியகோட் டுதயத்து
முற்ற வுற்றான் முதுகங்குல்
விடிநாட் கண்டுங் கிளிமிழற்று
மென்சொற் கேளா வீரற்காண்
டடிநாட் செந்தா மரையொதுங்கு
மன்ன மிலளால் யானடைத்த
கடிநாட் கமலத் தெனவவிழ்த்துக்
காட்டு வான்போற் கதிர்வெய்யோன். ()

சூரியோதய மானதும் இரகுவீரன் சோலையிலுள்ள அன்னப்பறவை முதலியன பெடையுடன் உலாவுவதைக் கண்டு சீதை தன்னைவிட்டுப் பிரிந்தமையை நினைந்து வருந்தலாயினன். இதைக்கண்ட இளையவன் இராகவனை நோக்கி 'நாம் சானகியாரைத் தேடிப் போகா திருப்பது தகுதியோ' என்று சொல்ல இரகுநாயகன் 'நாம் அவ்வரக்கன் கொண்டு-

போய் வைத்திருக்கும் இடத்தைத் தேடித் திரிவோம்' என்று பல காடுகளையுங் கடந்து பதினெட்டு யோசனை தூரஞ் சென்றனர். அப்படித் தேடித் திரிந்தும் சானகியாரைக் காணாமற் போயினர். சூரியனும் மேருவை வலங்கொள்ள மறைந்தான். பத்துத் திசையும் இருள் மூடிக்கொண்டது. இரகுவீரன் பளிக்குக் கற்பாறையைக் கண்டு அதிற் சயனித்துக் கொண்டான்.

அவ்விடை யெய்திய வண்ணலி ராமன்
வெவ்விடை போலிள வீரனை வீர
இவ்விடை நாடினை நீர்கொணர் கென்றான்
தெவ்விடை யில்லவ னுந்தனி சென்றான். (329)

எங்கணு நாடின னீரிடை காணான்
சிங்கமெ னத்தமி யன்றிரி வானை
அங்கவ னத்துள யோமுகி யாய
வெங்கண ரக்கி விரும்பினள் கண்டாள். (330)

இளையவன் கானமெங்கும் நீரைத் தேடித் திரிந்துகொண் டிருக்கையில், அக் கானத்துள்ள அயோமுகி என்னும் அரக்கி அவனை மந்திரத்தாற் றடைபடாப் பாம்பேபோலத் தொடர்ந்து சென்றாள். அவள் காதலால் வருத்தும் நோயால், 'இவனை நம்மை விரும்பும்படி கேட்டுப் பார்ப்போம் இவன் இணங்காவிட்டால் நாம் நமது குகைக்குத் தூக்கிக்கொண்டு போவோம்' என்னும் எண்ணத்துடன் இளையவன் எதிரே வந்து நின்றனள். அவளை இளையவன் பார்த்து 'மூக்கும் காதும் இழந்த சூர்ப்பணகை, தாடகை முதலிய அரக்கர் கூட்டத்தைச் சேர்ந்தவளே இவள்; இப்படிப் பட்ட செய்கையையுடைய அரக்கி நம்மை நாடிவர

வேண்டிய காரணம் என்ன' என்று யோசித்து அவளை 'நீ யாரடீ? ஏன் இங்கே வந்தாய்?' என்று கேட்டனன். அதைக்கேட்ட அயோமுகி நாணாமல் ஊசல் வடம் போல மனமுடையவளாய், 'உன் மேல் காதல் கொண்டுவந்த அயோமுகி என்பவள் நான்; இன்னும் ஒருவரையும் விரும்பாத என்னை மணந்து நீ என்னுயிரைத் தரவேண்டும்' என்றாள். தன்னிடத்தே இவ்வாறு சொல்லிய அயோமுகியை நோக்கி இளையவன் கண்சிவந்து, 'இவ்வகையான சொல்லை வாயினாற் சொல்வையேயானால் உன்னுடைய உடம்பை என் பாணத்தாற் கூறிடுவேன்' என்றான். இளையவன் சொல்லியதைக் கேட்ட அயோமுகி கோபங்கொள்ளாமலே தன் கைகளைத் தலைமேல் கூப்பி அஞ்சலி செய்து, 'தாம் என்னை யடிமை கொண்டால் இன்று நான் பிறந்த பயனைப் பெற்றவளாவேன்; நீர் இப்பொழுது நீர் வேண்டித் திரிகின்றீர், அழகிய கையை அமைத்து என்னை அஞ்ச வேண்டா என்றால் கங்கையின் நீரையேனும் உமக்கு இப்போது கொண்டுவந்து கொடுப்பேன்' என்றாள். சுமித்திரை சிங்கம் அதைக் கேட்டு இப்பொழுது 'நான் உன் காதும் மூக்கும் அரிவதற்கு முன்னமே நீ ஓடிப் போய்ப் பிழை' என்றான். அயோமுகி, 'இவனை நாம் எடுத்துக்கொண்டுபோய் குகையிலடைத்தால் பிறகு கோபம் நீங்கி நம் வேண்டு கோட்கு இணங்குவான்' என்று வெளியே சென்று,

மோகனை யென்பது மூந்திமு யன்றாள்
மாக நெடுங்கிரி போலிலை வவ்வா
ஏகின ளும்பரி னிந்துவொ டேகும்
மேகமெ னும்படி நொய்தினின் வெய்யாள். (331)

இப்படி யேகின னன்னவ னிப்பால்
அப்பிடை தேடிந டந்தவ னுவித்
துப்புடை மால்வரை தோன்றல னென்னு
வெப்புடை மெய்யுடை வீரன்வி ரைந்தான். ()

இப்பால் நீர்வேட்கைக்காக நீர் தேடிக்கொணரச் சென்ற தம்பி வாராமையை நோக்கி இக்காட்டில் நீர் இல்லாமையாலோ அன்றி வே றென்ன காரணத்தாலோ. அவன் விரைந்து வாராதிருக்கின்றான்; இஃது என்ன? அங்கே சானகியை எடுத்துச் சென்ற அரக்கரோடு சண்டை நடக்கின்றதோ! அல்லது, நமது தம்பியையும் அவ்விராவணன் கைக்கொண்டு போனானோ, விதி கூட்ட அக் கொடியவன் தீச் செயலாற் கொலையுண்டானோ!

வரிவிற் கையெனு ருயிர்வந் திலனால்
தருசொற் கருதே னொருதை யலையான்
பிரிவுற் றனெனென் பதோர்பி ழைபெருத்
தெரிவுற் றிடவா வியிழந் தனனே. (333)

"என் அருமையான உயிர் போன்றவனே, நீயும் ஒளித்துக்கொண்டாயோ! நீ பிழை செய்தமை மிகக் கொடிது. இதை உலகமும் கொள்ளமாட்டாதே! விலகாத ஆபத்தாக வந்தவைகளை விலக்க வல்லவனே! எனக்கு நீங்காத துன்பத்தைக் கொடுத்தாய். பகைவர் தொழுகின்ற வீரனே! என்னை, வெறுத்துவிட்டாயோ! இந்நேரம் வரையில் வெளிப் பக்கத்தே தங்குவையோ?'

என்னைத் தருமெந் தையையென் னையரைப்
பொன்னைப் பொருகின் றபொலன் குழையாள்
தன்னைப் பிரிவே னுளனா வதுதான்
உன்னைப் பிரியா தவுயிர்ப் பலவோ. (334)

பொற்றோ டிவர்கின் றபொலங் குழையாள்
தற்றே டிவருந் துதவம் புரிவேன்
நிற்றே டிவருந் தநிரப் பினையோ
எற்றே டினைவந் தவிளங் களிறே. (335)

இன்றே யிறவா தொழியே னெமரோ
பொன்றா தொழியார் புகல்வா ருளரோ
ஒன்றா கியவுன் கிளையோ ரையெலாம்
கொன்றாய் கொடியா யிதுவுங் குணமோ. (336)

மாந்தா முதன்மன் னவர்தம் வழியில்
வேந்தா கைதுறந் தபின்மெய் யுறவோர்
தாந்தா மொழியத் தமியே னுடனே
போந்தா யெனைவிட் டனைபோ யினையோ. (337)

என்னா வுரையா வெழும்வீ ழுமிருந்
துன்னா வுணர்வோய் வுறுமொன் றலைவால்
மின்னா திடியா திருள்வாய் விளைவீ
தென்னா வெனுமென் றனிநா யகனே. (338)

நாடும் பலசூ ழல்கடோ றுநடந்
தோடும் பெயர்சொல் லியுளைந் துயிர்போய்
வாடும் வகைசோ ருமயங் குறுமால்
ஆடுங் களிமா மதயா னையனான். (339)

கமையா ளொடுமென் னுயிர்கா வலினின்
றிமையா தவனித் துணைதாழ்வுறுமோ
சுமையா வுலகூ டுழறொல் வினையேன்
அமையா துகொல்வாழ் வறியே னெனுமால். ()

அறப்பா லுளதே லவன்முன் னவனைப்
பிறப்பா னுறின்வந் துபிறக் கவென
மறப்பால் வடிவாள் கொடுமன் னுயிரைத்
துறப்பா னுறுகின் றதொடர்ச் சியின்வாய். ()

போந்தா னெடுமா யையினிற் பிரியா
ஈர்ந்தா னவனை சிபிடித் திளையோன்
சோர்ந்தா னிடுபூ சல்செவித் தொளையில்
சேர்ந்தார் தனுமே திருமா றெருளா. (342)

அயோமுகி அழும் பேரோசை இரகுவீரன் செவியிற் பட்டது; அஃது அரக்கியினது குரலாகவே தோன்றுவதாகக் கண்டு தன் வில்லை எடுத்து வளைத்து ஆக்கிநேயாஸ்திரத்தைப் பிரயோகிக்க அவ்விருளும் பகற்பொழுதாகவே தோன்றியது. பிறகு விரைந்து நடந்து தம்பியை எதிர்ந்தனன். அதைக்கண்ட இளையவனே, ‘அண்ணா, வருந்தவேண்டா! வருந்தவேண்டா! இதோ வந்தேன், வந்தேன்’ என்று இழந்த கண் மீண்டும் வந்தாற்போலத் தாசரதியை யடைந்தனன்.

ஊற்றுறு கண்ணினீ ரொழுக நின்றவன்
ஏற்றிளங் கன்றினைப் பிரிவுற் றெங்கணும்
ஆற்றிலி னுற்றுவ தரிதி னெய்திய
பாற்றிளம் பான்முலை யாவின் பான்மையான். ()

தன்னைப் பிரிந்த தம்பியைக்கண்ட தாசரதி அவனைத் தழுவி ‘நடந்த வரலாறு என்ன’ வென்று கேட்க-

இளையவன், 'அயோமுகி வந்ததும் அவள் தன்னைக் கொண்டு சென்றதும், தான் அவள் நாசியை யரிந்ததும் ஒன்றும் விடாமற் சொல்லினன்'. அயோமுகி கைக்கொண்டு சென்றமைக்கும் அவளைக் கொலைபுரியாது நாசியும் செவியும் அரிந்து மீண்டமைக்கும் ஸ்ரீராமன் மனமகிழ்ந்து தம்பியை நோக்கி,

மூவகை யமரரு முலக மும்மையும்
மேவரும் பகையெனக் காக மேல்வரின்
ஏவரே கடப்பவ ரெம்பி நீயுளை
ஆவதே வலியினி யாரும் வேண்டுமோ. (344)

பிரிபவர் யாவரும் பிரிக பேரிடர்
வருவன யாவையும் வருக வார்கழற்
செருவலி வீரநிற் றீரு மல்லது
பருவர லென்வயிற் பயிலற் பாலதோ. (345)

வன்றொழில் வீரபோர் வலிய ரக்கியை
வென்றுபோர் மீண்டனெ னெனவி ளம்பினாய்
புன்றொழி லனையவள் புகன்ற சீற்றத்தால்
கொன்றிலை போலுமாற் கூறு வாயென்றான். ()

தொளைபடு மூக்கொடு செவிது மித்துகத்
தலைவயி னகிலொடு தடிந்து நீக்கிய
அளவையிற் பூசலிட் டரற்றி னாளென
இளையவன் விளம்பிநின் றிருகை கூப்பினான். ()

தொல்லிரு டனைக்கொலத் தொடர்கின் றானையும்
கொல்லலை நாசியைக் கொய்து நீக்கினாய்
வல்லைநீ மனுமுதன் மரபி னோயெனப்
புல்லினா னுவகையிற் பொருமி விம்முவான். ()

பெயர்தற்கு அருமையான துயரமானது முற்றும் நீங்கி யிருக்கின்றார்கள் என்னும்படி, ஸ்ரீராமனும் இளையபெருமாளும் விடியற்காலத்தை எதிர் பார்ப்பவர்களாகி, வாருண மந்திரத்தைச் செபித்து, ஆகாய கங்கை நீரையே அங்கே தருவித்துப் பருகி ஒரு மலையிற் றங்கியிருந்தார்கள்.

கல்லகல் வெள்ளிடைக் கான கத்துள
பல்லவ மலர்கொடு படுத்த பாயலின்
எல்லையி றுயரினோ டிருந்து சாய்ந்தனன்
மெல்லடி யிளையவன் வருட வீரனே. (349)

மயில்போலுஞ் சாயலையுடையவளாகிய சானகி பிரிவுற்ற பிறகு, ஸ்ரீராமன் வெட்கமாகிய பிணியினாலே ஒரு பொருளையும் உண்ணாதவனாகி, துன்பத்தை யடைதலால் அவன் தூக்கமில்லாதவனானான் என்று சொல்லவும் வேண்டுமோ? ஸ்ரீராமன் நித்திரை யில்லாமல் வருந்துவதைக் கண்டு அவன் வருத்தந் தணிப்பான்போலக் கீழ்த்திசையில் சூரியன் உதயமாயினான்.

சானகியாரைத் தேடி வருந்திப் பறவைகளும் விடியற் காலத்திலே அழுவன போலச் சத்தஞ் செய்ய இராம லக்குமணர் இருவரும் சீதாபிராட்டியாரைத் தேடி இருபத்தைந்து யோசனை தூரம் நடந்து சென்றனர்.

ஐயைந் தடுத்த யோசனையி
னிரட்டி யடவி புடைபடுத்த
வையந் திரிந்தார் கதிரவனும்
வானி னுப்பண் வந்துற்றான்

எய்யுஞ் சிலைக்கை யிருவருஞ்சென்
றிருந்தே நீட்டி யெவ்வுயிரும்
கையின் வளைத்து வயிற்றடக்குங்
கவந்தன் வனத்தின் கண்ணுற்றார். ()

கவந்தன் வனத்தைக் கண்டு, யானை முதலிய பேருயிர்களும் எறும்பு முதலிய சிற்றுயிர்களும் வலைகளில் அகப்பட்டவை போல மயங்கலுற்ற பார்வையை யுடையனவா யிருந்தன. முறைமையில் திறக்கச்செய்து காக்கும் பெருங்குணமும் நல்லறிவும் இல்லாத கொடுங்கோலரசனது நாட்டுக் குடிகள்போல விலங்கு பறவை முதலியன கவந்தனை அஞ்சிச் சிதறி ஓடியும் ஓரிடத்தில் கூட்டமாய்க் கூடியும் நின்றன. மலைகள் உருண்டு வருவதையும், பெருமரங்கள் முறிந்து வருவதையும், காட்டாறுகள் திக்குகளோடு வெளி நிலத்தை மறைத்துக்கொண்டு ஓடுவதையும், மேகங்கள் சுருண்டு விழுவதையும் பார்த்துக்கொண்டே போய் இராமலக்ஷ்மணர்கள் கவந்தனுடைய கைம்மதிட்குள் சேர்ந்தனர். மேரு மலையில் இரண்டு சூரியர்களைப் பதித்தாற்போன்ற கண்களையும், இடைவெளி இரண்டு காதமாகப் பற்கள் அமைந்துள்ள வாயையும், மந்தர மலையைக் கட்டி தேவாசுரர் வலித்த வாசுகி நீட்சியுற்றதுபோலக் கிடந்த இரு கைகளையும், கொல்லனது துருத்தியின் தொளைபோலத் தீயையும் புகையையும் வீசுகின்ற மூக்கையும், வடவைத்தீயின் கொழுந்து போலத் திரும்புகின்ற நாக்கையும், இராகுவுக்குப் பயந்து பெருமலையின் துவாரத்தில் நுழைகின்ற முழுச் சந்திரனைப் பாகித்து அதனை இருபுறத்தில் வைத்தாற் போன்ற கோரைப்பற்களையும், ஐம்பூதங்-

களினால் அன்றிப் பாதகத்தினால் செய்த உடலையும் உடைய கவந்தனைக் கண்டனர். கண்ட வளவில் இளையவன் நன்றாக உற்றுப் பார்த்து, 'இஃது ஒரு பெரிய பூதம் எல்லா உயிர்களையும் வாரித் தன் வாயில் பெய்கின்றது. இங்கே நாம் செய்வது யாது?' என்றனன். அதைக் கேட்ட ஸ்ராமன்,

பாரிட மேயிது பரவை சுற்றுறும்
பாரிட மரிதெனப் பரந்த மெய்யது
பாரிடம் வலம்வரப் பரந்த கையது
பாரிடந் தெடுத்தமா வனைய பாழியாய். (351)

தோகையும் பிரிந்தன ளெந்தை துஞ்சினன்
வேகவெம் பழிசுமந் துழல வேண்டலென்
ஆகலின் யானினி யிதனுக் காமிடம்
ஏகுதி யீண்டுநின் றிளவ லேயென்றான். (352)

ஈன்றவ ரிடர்பட வெம்பி துன்புறச்
சான்றவர் துயருறப் பழிக்குஞ் சார்வுமாய்த்
தோன்றலி னென்னுயிர் துறந்த போதலால்
ஊன்றிய பெரும்பழி துடைக்க வொண்ணுமோ.

இல்லியல் புடையநீ ரளித்த வின்சொலாள்
வல்லிய வரக்கர்தம் மனையு ளாளெனச்
சொல்லிநன் மலையெனச் சுமந்த தூணியென்
வில்லினென் செல்வெனோ மிதிலை வேந்தன்பால்.

தலையவிழ் கோதையைத் தாங்க லாற்றலென்
இளைபுரிந் தளித்தன்மே லிவர்ந்த காதலன்
உளனென வுரைத்தலி னும்ப ரானென
விளைதனன் றாகலின் விளிதனன் றென்றான். ()

வேறு

ஆண்டா னின்னன பன்னிட
　　வையற் கிளைவீரன்
ஈண்டியா னுன்பின் னேகிய
　　பின்னிவ் விடர்வந்து
மூண்டான் முன்னே யாருயி
　　ரோடு முடியாதே
மீண்டே போதற் காமெனி
　　னன்றென் வினையென்றான். (356)

என்றா னென்னாப் பின்னுமி
　　சைப்பா னிடர்தன்னை
வென்றா ரன்றே வீரர்க
　　ளாவார் விரவாரின்
தன்றாய் தந்தை தம்மு
　　னெனுந்தன் மையர்முன்னே
பொன்றா னென்றா னீங்குவ
　　தன்றோ புகழ்ம்மா. (357)

மானே யன்னா டன்னொடு
　　தம்முன் வரையாரும்
கானே வைகக் கண்டுயில்
　　கொள்ளா தயல்காத்தற்
கானா னென்னே யென்றவர்
　　முன்னே யவரின்றித்
தானே வந்தா னென்றலின்
　　வேறோர் தவறுண்டோ. (358)

என்று யுன்முன் னேவிய
யாவு மிசையின்னல்
பின்று தெய்திப் பேரிசை
யாளாற் கழிவுண்டேல்
பொன்று முன்னம் பொன்றுதி
யென்று ளுரைபொய்யா
நின்று லன்றே நிற்பது
வாய்மை நிலையம்மா. (359)

எற்பெற் றாளும் யானுமெ
னைத்தோர் வகையாலும்
நிற்பெற் றுற்கு நிற்குநி
னைப்புப் பிழையாமல்
நற்பொற் றோளாய் நல்லவர்
பேண நனிநிற்கும்
சொற்பெற் றுன்மற் றுருயிர்
பேணித் துறவேமால். (360)

ஓதுங் காலப் பல்பொருண்
முற்றுற் றுருவாத
வேதஞ் சொல்லுந் தேவரும்
வீயுங் கடைவீயாய்
மாதங் கந்தின் றுய்ந்திவ்
வனத்தின் றலைவாழும்
பூதங் கொல்லப் பொன்றுதி
போலும் பொருளுண்டோ. (361)

கேட்டார் கொள்ளார் கண்டவர்
பேணுர் கிளர்போரில்
தோட்டார் கோதைச் சோர்குழ
றன்னைத் துவளாமல்

மீட்டா னென்னும் பேரிசை
கொள்ளான் செருவெல்ல
மாட்டான் மாண்டா னென்றபின்
மேலும் வசையுண்டோ. (362)

தணிக்குந் தன்மைத் தன்றெனி
னன்றித் தகைவாளால்
கணிக்குந் தன்மைத் தல்ல
விடத்திற் கனல்பூதம்
பிணிக்கும் கையும் பெய்பில
வாயும் பிழையாமல்
துணிக்கும் வண்ணங் காணுதி
துன்பந் துறவென்றான். (363)

இவ்வாறு சொல்லிக் கொண்டே இளையவன் இரகுவீரன் முன்னே நடக்கவும், இரகுவீரன் இளையவனினும் முன்னே நடக்கவும் கண்டு இவர்களைத் தடுப்பார் பிறரின்மையின் தேவர்கள் கண்டு அழுதனர்.

இளைய ராகிய விருவரு
முகத்திரு கண்போல்
களையும் வார்கழல் வீரர்சென்
றணுகலுங் கவந்தன்
வினையி னெய்திய வீரர்நீர்
யாவர்கொ லென்ன
நினையு நெஞ்சின ரிமைத்தில
ருருத்தனர் நின்றார். (364)

அழிந்து ளாரல ரிகழ்ந்தன
ரென்னையென் றழன்றான்
பொழிந்த கோபத்தன் புதுப்பொறி
மயிர்ப்புறம் பொடிப்ப

விழுங்கு வேனென வீங்கலும்
விண்ணுற வீரர்
எழுந்த தோள்களை வாள்களா
லெறிந்தன ரிட்டார். (365)

ஆளு நாயக னங்கையிற்
றீண்டிய வதனால்
மூளுஞ் சாபத்தின் முந்திய
தீவினை முடித்தான்
தோளும் வாங்கிய தோமுடை
யாக்கையைத் துறவா
நீள நீங்கிய பறவையின்
விண்ணுற நிமிர்ந்தான். (366)

விண்ணி னின்றவன் விரிஞ்சனே
முதலினர் யார்க்கும்
கண்ணி நின்றவ னிவனெனக்
கருத்துற வுணர்வான்
எண்ணி லன்னவன் குணங்களை
வாய்திறந் திசைத்தான்
புண்ணி யம்பயக் கின்றழி
யரியதெப் பொருளே. (367)

வேறு

ஈன்றவனே யெப்பொருளு மெல்லைதீர் நல்லறத்தின்
சான்றவனே தேவர் தவத்தின் றனிப்பயனே
மூன்று கவடாய் முளைத்தெழுந்த மூலமோ
தோன்றி யிருவினையேன் சாபத் திடர்துடைத்தாய்.

மூலமே யில்லா முதல்வனே நீமுயனும்
கோலமே யார்க்குந் தெரிவரிய கொள்கைத்தால்
ஆலமோ வாலி னடையோ வடைகிடந்த
பாலனோ வாதிப் பரனோ பகராயே. (369)

காண்பார்க்குங் காணப் படுபொருட்குங் கண்ணாகிப்
பூண்பாய்போ னிற்றியால் யாதொன்றும் பூணாதாய்
மாண்பா னுலகை வயிற்றொளித்து வாங்குதியால்
ஆண்பாலோ பெண்பாலோ வப்பாலோ வெப்பாலோ.

ஆதிப் பிரமனுநீ யாதிப் பரமனுநீ
ஓதி யுறுபொருளுக் கப்பாலுண் டாயினுநீ
சோதிச் சுடர்ப்பிழம்பு நீயென்று சொல்லுகின்ற
வேத முறைசெய்தால் வெள்காரோ வேறுள்ளார். ()

மண்பா லமரர் வரம்பாருங் காணாத
எண்பா லுயர்ந்த வெரியோங்கு நல்வேள்வி
உண்பாய்நீ யூட்டுவாய் நீயிரண்டு மொக்கின்ற
பண்பா றறிவார் பகராய் பரமேட்டி. (372)

நிற்கு நெடுநீத்த நீரின் முளைத்தெழுந்த
மொக்குளே போல முரணிற்ற வண்டங்கள்
ஒக்க வுயர்ந்துனுளே தோன்றி யொளிக்கின்ற
பக்க மறிதற் கெளிதோ பரம்பரனே. (373)

நின்செய்கை கண்டு நினைந்தனவோ நீண்மறைகள்
உன்செய்கை யன்னவைதான் சொன்ன வொழுக்கினவோ
என்செய்தேன் முன்ன மறஞ்செய்கை யெய்தினார்
பின்செல்வ தில்லாப் பெருஞ்செல்வ நீதந்தாய். (374)

மாயப் பிறவி மயனீக்கி மாசிலாக்
காயத்தை நல்கித் துயரின் கரையேற்றிப்
பேயொத்தேன் பேதைப் பிணக்கறுத்த வெம்பெருமான்
நாயொத்தே னென்ன நலனிழைத்தே னென்றான்.

என்றாங் கினிதியம்பி யின்றறியக் கூறுவெனேல்
ஒன்றாது தேவ ருறுதிக் கெனவுன்னாத்
தன்றாயைக் கண்ணுற்ற கன்றனைய தன்மையனாய்
நின்றானைக் கண்டா னெறிநின்றார் நேர்நின்றான். ()

இவ்வாறு தோத்திரஞ் செய்து நிற்கின்றவனைச் சீராமன் பார்த்து, ‘நம்மாற் கொல்லப்பட்ட இவன் வேறொரு பெருமித முடையவனாய்த் தெய்வ உருப்-பெற்று ஆகாயத்தில் நமக்கு நேரில் நிற்கின்றான். இவனை நீ யார் என்று கேள்’ என்று இளையவற்குச் சொல்லினான். இளையவன் கவந்தனை நோக்கி, ‘நீயார்?’ என்றான். கவந்தன், ‘வீரனே, நான் தனுவென்னும் பெயருள்ள கந்தருவன். நான் சாபத்தால் இக் கடையான பிறவி எடுத்தேன். என்மேல் உங்கள் கைப்பரிசம் பட்டமையால் முன்னை வடிவம் பெற்-றேன். என் தந்தைக்கும் தந்தையாயிருக்கும் இறை-வனே, நான் சொல்வதைக் கேளுங்கள். பெருநீரைக் கடப்பதற்குப் புணைவேண்டு மாறுபோல வைதேகி-யாரைத் தேடுதற்கும் தீமை செய்த பகைவரை வெல்-லுதற்கும் துணைவேண்டுவதாகையால், மதங்கனுடைய ஆச்சிரமத்தில் உங்கள் வருகையை எதிர்நோக்கிக்-கொண்டிருக்கும் சவரி காட்டும் வழியே சென்று இரி-சியமுக மலையில் சுக்கிரீவனுடைய நட்பைக் கொண்டு சானகியாரைத் தேடுதல் சிறப்புடைத்து’ என்று சொல்லிப் போயினன்.

ஆனவன் றொழுது வாழ்த்தி
யந்தர மெழுந்து போனான்
மானவக் குமரர் தாமு
மத்திசை வழிக்கொண் டேகிக்

கானமு மலையு நீங்கிக்
கங்குல்வந் திறுக்குங் காலை
யானையி னிரட்டை யென்ன
மதங்கன திருக்கை சேர்ந்தார். (377)

நினைத்தவற்றை நினைத்தபடியே தருகின்ற கற்பக தருக்களும் இருவகை நிதிகளும் போன்று, அறமுடையோர் அனுபவிக்கும்படி தரும் பல செல்வங்கள் மிக்க சோலைகள் சூழப்பட்டு எண்ணிய இன்பமே அன்றி துன்பமிலதாய் புண்ணியம் செய்தவர் வசிக்கும் சுவர்க்கத்தை ஒத்தது மதங்காச்சிரமம்.

அன்னதா மிருக்கை நண்ணி
யாண்டுநின் றளவில் காலம்
தன்னையே நினைந்து நோற்குஞ்
சவரியைத் தலைப்பட் டன்னுட்
கின்னுரை யருளித் தீதின்
றிருந்தனை போலு மென்றான்
முன்னிவற் கிதுவென் றெண்ண
லாவதோர் மூல மில்லான். (378)

அதைக் கேட்ட சவரியும் அன்பாகச் சீராமனை துதித்து வணங்கி ஆனந்தக் கண்ணீர்பொழிந்து, 'என் மாயப்பாசம் மாண்டது. பல காலமும் நான் செய்த பெருந் தவத்தால் என் பிறவி வேரறுத்தேன்' என்று சீராமனுக்கு வேண்டுவனவற்றைக் கொண்டு வந்து கொடுக்க அவனும் அவளுக்கு நல்விருந்தாக அமைந்தான். அந்தச் சமயத்தில் உருத்திரனும் பிரமனும் இந்திரன் முதலிய மற்றைத் தேவரும் சவரியினிடத்திற்கு வந்து அவளைப் பார்த்து, 'உன்னுடைய குற்றமற்ற தவமோ பூரணமாய்விட்டது. சீராமனுக்கான

பூசனையை விரும்பிச்செய்து எம்மிடத்தில் வரவேண்டு-கிறோம்' என்று சொல்லிப் போயினர். சவரி இரகு-வீரனை நோக்கி, 'யானும் உன் வரவினை எதிர்பார்த்-திருந்தேன். என் அப்பனே, நீ இங்கு வருவாய் என்னுந் தன்மை நிறைவேறியதனால் என் புண்ணியம் பலித்தது' என்று சொல்ல, சீராமன் அருந்தவத்திற் சிறந்த சவரியை நோக்கி, 'தாயே, நாங்கள் வருந்தும் துயரத்தை நீக்கினாய், 'நீ வாழ்க' என்று கூறி இளைய பெருமாளோடு அன்று அங்குத் தங்கினன். பின்பு சவரி, சூரியகுமாரனை சுக்கிரீவன் இருக்கின்ற மலைக்-குச் செல்லத்தக்க வழிகளை எல்லாம் சொல்லினள். சவரி சொல்லியவற்றை யெல்லாம் இருவரும் கேட்டுக் கொண்டனர்.

பின்னவ ளூழன்று பெற்ற
யோகத்தின் பெற்றி யாலே
தன்னுட லுறந்து தானத்
தனிமையி னினிது சார்ந்தாள்
அன்னது கண்ட வீர
ரதிசய மளவின் றெய்திப்
பொன்னடிக் கழல்க ளார்ப்பப்
புகன்றமா நெறியிற் போனார். (379)

தண்ணெனுங் கானுங் குன்றுந்
திசைகளுந் தவிரப் போனார்
மண்ணிடை வைக ரேறும்
வரம்பிலா மாக்க ளாடக்
கண்ணிய வினைக ளென்னுங்
கட்டழல் கதுவ லாலே
புண்ணிய முருகிற் றன்ன
பம்பையாம் பொய்கை புக்கார். (380)

குறிப்புக்கள்

கம்பராமாயணம்-கம்பராற் செய்யப்பட்ட ராமாயணம் என மூன்றனுருபும் பொருளும் உடன்தொக்க தொகையாய் பொருள்கொள்ளல் வேண்டும். ராமாயணம் என்பது ராம, அயநம் என்னும் இரண்டு வடசொற்கள்சேர்ந்து தீர்க்கசந்திபெற்ற தொடர் மொழி. ராம என்பதற்குத் தனது நற்குண நற்செய்கைகளினாலும் திருமேனி அழகினாலும் எல்லாரையும் மகிழ்விப்பவன் என்பதாம்; அயநம் என்பதற்கு அடைய அல்லது அறியக் கருவியாயுள்ளது என்பதாம். ஆகவே, ராமனை அடைய அல்லது அறியக் கருவியாயுள்ள நூல் அல்லது ராமனுடைய குணாதிசயங்களைத் தெரிவிக்கும் நூல் என்பது திரண்ட பொருள். இதனை (1) பாலகாண்டம் (2) அயோத்தியா காண்டம் (3) ஆரணிய காண்டம் (4) கிஷ்கிந்தா காண்டம் (5) சுந்தர காண்டம் (6) யுத்தகாண்டம் என்னும் ஆறு காண்டங்களாக மகா கவியாகிய கம்பர் பாடி முடித்தனர். கம்பர் காலத்துப் புலவராகிய ஒட்டக்கூத்தர் என்னும் புலவர் பாடிய உத்தரகாண்டம் இராமாயணத்தின் பிற்பகுதியாம்.

கம்பர் - சோழ நாட்டிலே திருவழுந்தூரில் (a village 2 miles off from Kuttalam Railway Station, Tanjore District) உவச்சர்குலத்திலே ஆதித்தர் என்பவர்க்குப்புதல்வராகப் பிறந்தவர். இவர் செல்வத்திற் சிறந்த சீமானாகிய திருவெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளல் என்பவரால் ஆதரிக்கப் பெற்றவர். கம்பர் இவ்வள்ளலைத் தாம் பாடிய

இராமாயணத்தில் 10 இடங்களில் வியந்து கூறியிருக்கின்றனர். அவர் இராமாயணமேயன்றி (1) திருக்கை வழக்கம் (2) சரஸ்வதி அந்தாதி (3) சடகோப ரந்தாதி (4) ஏரெழுபது முதலிய வேறு நூல்களும் பல தனிப்பாடல்களும்பாடியிருப்பதாகத் தெரிகின்றது. அவர் இராமாயணம் அரங்கேற்றிய காலம் கி. பி. 885 ஆண்டுக்கு முன் என்று கூறுவர்.

ஆரணிய காண்டம் - ஆரணியத்தில் (நிகழ்ந்த செய்தியை யுணர்த்தும்) பாகம் என விரிதலால் உருபும் பயனும் உடன்தொக்க ஏழாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடரில் இருசொல் ஒரு சந்தியாய் நின்றன.

சீராமன் முதலியோர் அத்திரி முனிவர் ஆச்சிரமஞ் சார்தல்.

1\. முத்து இருத்தி - முத்துக்களை ஒழுங்காய்ப் பதித்து வைக்க ; அவ் - அம்முத்துக்கள் ; இருந்தனைய - இருந்தாற் போன்ற ; மொய்ந் நகையொடும் - நெருங்கிய பற்களை யுடைய சீதாபிராட்டியாருடனே ; குமரர் - இராமலக்குமணர் ; அமைதி - இடம் ; பத்திரப் பழுமரப்பொழில் - இலைகளையுடைய பழுத்த மரங்களையுடைய சோலைகள் ; பழுவம் - வனம் ; இருத்தி என்பது இருத்த என்னும் செயவென் எச்சத்தின் விகாரம்; மொய்ந்நகை - வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

இராம லக்குமணர் அத்திரி முனிவரை வணங்குதல்.

2\. செறிபரம் - மிகுந்த பாரம் ; தெரியநின்ற - (இவ்வளவினது என்று) அறியும்படி (அவற்றைத் தாங்கி) நின்ற; திரள் பொற்கை - திரண்ட அழகிய துதிக்கை; முக்குறும்பு - மூன்று குற்றங்கள் (அவை) காமம், வெகுளி, மயக்கம் என்பன ; வினை - தவத்தொழில் ; வால் முனிவன் - பரிசுத்தம் பொருந்திய அத்திரிமுனிவர்;

அத்திரி முனிவர் முகமன் கூறல்.

3. தமரெலாம் வர உகந்தனைய தானமுனிவன், குமரர் நீர் இவண் அடைந்து உதவு கொள்கை எளிதோ, அமரர் யாவரொடும் எவ்வுலகும் வந்த அளவே, எமரில் யார் தவம் முயன்றவர்கள் என்று உருகினன் என இயைக்க. அடைந்து உதவுகொள்கை - வந்து காட்சி கொடுத்த தன்மை; வந்த அளவே - வந்த தன்மையேயாகும்.

அத்திரிமுனிவர் மனைவி சானகிக்கு ஆபரணம் முதலியன அளித்தல்.

4. அவண் - அத்திரிமுனிவர் ஆச்சிரமத்தில்; அவன் அரும்பன்னி - அத்திரிமுனிவர் பத்தினி அநசூயை; சனகன்பொன் - சீதை; அநசூயை - அசூயையில்லாதவள்; அசூயை - அழுக்காறு.

விராதன் வருணனை.

5. பஞ்ச பூதங்களும் ஒரே உருவத்தை எடுத்து இவ்வுருவம் புதுமையது என்று சொல்லுதற்கு பொருந்திய வடிவத்தை யுடையவன், இடியையொத்த குரலினை யுடையவன், பிரமதேவன் (தான்செய்த தவத்திற்கு) மகிழ்ந்து கொடுத்த, கால் என்னுங் கணக்கைக் கடைசியில் வைத்த லக்ஷ மதயானைகள் தம்மிடத்தே கொண்ட வலியையுடையவன் என்பது பொருள்; கடையிட்ட கணிதப் பாதலக்கம் என்பது ஒன்றே-கால் லக்ஷம்.

6. விராதன் எனும் அக்கோர வெங்கண் உரும் ஏறு அன கொடுந் தொழிலினன். மரங்கள் தறையிற் பேர வன்கிரி பிளந்து உக,இகல் பெருவீரவெஞ்சிலையினோர் எதிர்சார வந்து, அயல் விலங்கினன் என இயைக்க.

விராதன் சீதையைப் பற்றிச்சேல்லல்.

7. அல்லிபுல்லு மலர் அன்னம்-அகவிதழ்கள் நெருங்கிய தாமரைமலரில் வீற்றிருக்கின்ற திருமகள் போன்ற சீதை; சொல்லும் எல்லையில்-ஒரு வார்த்தை சொல்லும் பொழுதில் (i.e.) கணப் பொழுதில்; முகந்து - எடுத்துக்கொண்டு.

சீராமன் நாண் ஒலி எழுப்பல்.

8. போர் அறிந்திலன் - (விராதன்) யுத்தத்தின் தன்மையை அறிந்தவனல்லன்; இவன் - விராதன்; பொற்பு - பொலிவு; முரண் - வலிமை; எஞ்சிநீரும்-குறைந்து அழிந்துவிடும்.

விராதன் சீதையை விட்டுவிட்டு சீராமனுடன் போர் செய்தல்.

9. மறுகும் - (அகப்பட்டு) மனம் குழம்புகின்ற; பாவை - சீதை; நெஞ்சு உளுக்கினன் என - மனஞ் சிதைந்தவன்போல; அஞ்சனக் கிரியனன் - மை மலைபோன்ற சீராமன்; அழலா - கோபித்து.

10. ஓர் மராமரம் இறுத்து அதுகொடு, ஒருங்கும் உணர்வோர் உணர்வுறும் நாமர்ஆம் அவரை நல் அறம் நிறுத்த அரா அணை துறந்து தரை நணுகி நின்றவரை ஓம் அராமரை எற்றவரலும் என இயைத்துப் பொருள் கொள்க. ஓம் அராமரை - பிரணவ மந்திரத்தின் பொருளாகிய அந்தச் சீராமரை.

11. ஏறுசேவகன் - சீராமன்; அவன் - அரக்கன்.

12. எய்த்த மெய்ப்பெரிய கேழல் - ஓடி யிளைத்த உடலினையுடைய பெரிய முள்ளம் பன்றி.

13. மறம் ஒடுதல் செயா - கொடுமை நீங்குதல் இல்லாத வேகவலி - உக்கிரமான பலம்.

14. மெய் வரத்தினன் - பொய்த்தல் இல்லாத வரம் பெற்றவன்.

15. சாரிகை திரிந்தனன் - வட்டமாகச் சுழன்றனன்; இந்து - சந்திரன்.

16. சுவணவண்ணன் - பொன்போன்ற நிறத்தையுடைய இலக்குமணன்; இதனை, 'வில்லேந்துமெனிற் செம்பொற், பருவரையும் நெடுவெள்ளிப் பருப்பதமும் போல்வார்கள்', என்னும் பாலகாண்டச் செய்யுளோடு ஒப்பிடுக. கண்ணன் - ஸ்ரீராமன்; அறம் இவணது அன்ன - தருமம் வடிவெடுத்ததனை யொத்த; உவணன் - கருடன்.

17. தன் கணவன் - ஸ்ரீராமன்.

ஸ்ரீராமன் விராதனைக் குழியில் தள்ளல்.

18. மதநல் யானையனையான் - இலக்குமணன்; அதவம் - நெய்த் துடிப்பு; அமலன் - ஸ்ரீராமன்.

விராதன் சபம் நீங்கி விண்ணில் தோன்றல்.

19. பட்டதன்மை - முன்னே நடந்த தன்மை; சாபம் இட - குபேரன் கொடுத்த சாபத்தால்; கடையான உடல் - இழிவான ராக்ஷச சரீரம்; ஓர் முட்டை - ஒப்பற்ற அண்டம்.

விராதன் ஸ்ரீராமனைப் புகழ்தல்.

20. புந்தி உணரான் - புத்தியை உடைத்தாகாதவனாகி; நெறியின் ஒன்றி - நல்வழிப்பட்டு; நம்பன் - ஸ்ரீராமன்.

விராதன் தோத்திரம்.

21. வேதங்கள் அறைகின்ற உன் பாதங்கள் இவை உலகெங்கும் விரிந்தன எனின் படிவங்கள் எப்படியோ என இயைக்க.

22. கடுத்தகராம் - கோபித்த முதலை.

23. புறங்காண - புறமாகிய ஊனக்கண்ணாற் காணவும்; அகங்காண - அகமாகிய ஞானக்கண்ணாற் காணவும்.

24. இறப்பதே பிறப்பதே எனும் விளையாட்டு-இறத்தலும் பிறத்தலும் என்கின்ற திருவிளையாட்டு.

25. பனிநின்ற - அச்சந் தரும்படி நின்ற; நனிநின்ற - (சமயக்கோட்பாட்டில்) மிகுதியாகப் பற்றிநின்ற.

27. ஆயாத சமயம் - ஆய்ந்து அறிதற்கொண்ணாத பற்பல மதங்கள்.

29. நெறிநின்றார் - சாஸ்திரமார்க்கத்தில் நிற்பவர்.

விராதன் தன் உலகத்தை அடைதல்.

35. தெறுத்து - அழித்து; ஆதன் - அறிவிலி.

சீராமன் முதலியோர் சரபங்க முனிவர் ஆச்சிரமம் சேர்தல்.

36. கொம்பு - சீதாபிராட்டி; மரவம் - குங்கும மரம்.

இந்திரன் சரபங்க முனிவர் பக்கல் சார்தல்.

37. செவ்வேலவர்-இராமலக்குமணர்; தவ்வாது-குவியாது.

சரபங்கர் இந்திரனை எதிர்கொள்ளல்.

38. பொன்றாதபொலங் கழலோன் - இந்திரன்.

நான்முகன் கட்டளையை இந்திரன் அறிவித்தல்.

39. எந்தாய் - எம்பெருமானே; எவ்வுயிரும் தந்தான் - எல்லா உயிர்களையும் படைத்த பிரமன்; உறையும் நெறி - தான் வாசஞ்செய்கின்ற பதவி.

சரபங்கர் இந்திரன்மொழியைத் தடுத்துக் கூறல்.

40. அல்லேன் - (அங்குவர) உடன்படேன்; வால் அறி வான் - சரபங்கர்.

41. தொழில்மாய் சிற்பங்கள் - செயலற்ற சித்திரங்கள்; வீவன - அழிபவைகளை.

42. தவம் முற்றும் பகல் - தவம் பூர்ணமாக வேண்டிய காலம்.

43. மறுகா நெறி - அழியாமல் உள்ள பரமபதம்.

ஆச்சிரமத்தை யடைந்த இராமலக்குமணர் அங்கே யாது விசேடமென ஆராய்தல்.

44. சிலைவீரர் - இராமலக்குமணர்கள்; ஓதை - ஆரவாரம்.

ஆச்சிரமத்திற்கு இந்திரன் வந்தமையை யூகித்தல்.

45. கம்பக்கரி - ஐராவதம்; மாதவர்-சரபங்கர்; உம்பர்க்கு அரசு - இந்திரன்.

சீராமன் தனியே சோலையிற் போதல்.

46. மானே யனையாள் - சீதை; மைந்தன்-இலக்குமணன்; ஆன் எறு - ரிஷபம்; தான் - சீராமன்.

தேவேந்திரன் சீராமனைக் காணல்.

47. இமையோர் இறை காசினியின்கண் அருநான் மறையின் கனியை, கருஞாயிறு என கண் அவை ஆயிரமும், கண் தாமரைபோல் கதுவ (மதிப்பினையுடைய தாமரை மலர்கள் போல மலர) கண்டான் என இயைத்துப் பொருள் உரைக்க. தாம், தான் - அசைகள்.

இந்திரன் சீராமனை வணங்குதல்.

48. ஆண்நாதன் - புருடோத்தமன்;

இந்திரன் சீராமனைத் துதித்தல்.

49. சிங்காமை - அழியாமை ;

50. கருணைக் கெல்லா நிலயமே - அருளுக்கெல்லாம் இருப்பிடமானவனே.

தேவேந்திரன் தன் நகரஞ் செல்லுதல்.

53. இடைதுன்னுதல் - இடையில் பொருந்தியிருக்கின்ற விசேடம் ; முனிவன் - சரபங்கர்.

சரபங்கர் சீராமனுக்கு மறுமொழி கூறல்.

54. இறுதிசெய்பகல் - நேற்று மாலைப்பொழுதில் ; சாரலென் - அடைந்தேனில்லை.

சரபங்கர் தம் மனைவியுடன் தீயில்மூழ்கி மோக்ஷம் அடைதல்.

55. இது - பரமபதம் ; கதழ் எரி - கொடிய அக்கினி.

சீராமன் முதலியோர் சரபங்கர் ஆச்சிரமத்தினின்றும் அப்பாற் செல்லல்.

56. அனையவன் - சரபங்கமுனிவர் ; குமரர் - இராமலக்குமணர் ; கொம்பு - சீதை.

தண்டகாரணியத்து முனிவர்கள் சீராமனைச் சந்தித்தல்.

58.**பாலகில்லர் - வாலகில்லியர், பகவானது மயிரினின்றுந் தோன்றியவர்.

தண்டகாரணியத்து முனிவர்கள் மகிழ்ச்சி.

59. கரக்கரும் - மறுத்தற்கரிய.

முனிவர்கள் சீராமனிடத்து அரக்கர்செய்த கொடுமைகளைக் கூறல்.

60. *நெறியலாநெறி - தீயொழுக்கம்.*

61. *வல்லியம் - புலி; வீடுகாண்குமோ - துன்பத்தினின்றும் விடுதலையடைவோமோ?*

62. *முறை - ஒழுக்கம்.*

முனிவரர் சீராமன்பால் அடைக்கலம் புகுதல்.

64. *மன்னவன் புதல்வ - சக்கரவர்த்தித் திருக்குமரனே; அபயம் - அடைக்கலம்.*

சீராமன் முனிவர்க்கு அபயம் அளித்தல்.

65. *பகலவன் குலமைந்தன் - சூரிய குலத்திற்றோன்றிய சீராமன்.*

66. *வேந்தன் - தசரதச் சக்கரவர்த்தி; ஆய் - கைகேயி; எம்பி - பரதன்.*

67. *யாவதோ - வேறு எதுவோ (ஒன்றுமில்லை என்றபடி).*

69. *சூர் அறுத்தவன் - முருகக் கடவுள்; சுடர்நேமி-மகாவிஷ்ணு; ஊர் அறுத்தவன் - திரிபுரம் எரித்த சிவன்.*

சீராமன் கூறியதைக் கேட்ட முனிவர்கள் மகிழ்ச்சி.

70. *ஏகிய இன்னலர் - துன்பம் நீங்கியவர்கள்.*

71. *என்றபோது - எதிர்த்தபோது.*

சீராமன் முனிவர்கள் வேண்ட அங்கே தங்கியிருத்தல்.

72. *ஏயின ஆண்டு - ஏற்படுத்திய வருஷம் (பதினான்கு)*

அகத்திய முனிவர் சீராமனை எதிர்கொள்ளல்.

73. *ஆண்டகையர் - இராமலக்குமணர்; தமிழால் உலகை நேமியின் அளந்தான் - தமிழ் மொழியால் உலகம் முழுவதும் சக்கரபாணியாகிய திருமாலைப் போல் அளந்த அகத்திய முனிவர்.*

74. *அரைத்தும் - ஆராய்ந்தும்; உரைக்க உதவும் - பேசும் படி அருளும்.*

75. *முதல் அறுப்பான் - அடியோடு அறுத்தற்கு.*

77. *காவிரி கொணர்ந்தான் - அகத்தியன்.*

சீராமன் அகத்திய முனிவரை வணங்கல்.

78. *நின்றவன் - அகத்தியன்; நெடியோன் - சீராமன்.*

அகத்தியர் சீராமனை அங்கே இருக்க வேண்டல்.

79. *ஆழியுழவன் புதல்வன் - சக்கரவர்த்தித் திருமகன்.*

அகத்தியர் சீராமனுக்கு வில் முதலியன அளித்தல்.

80. *ஒப்புவரவிற்று என - சமானமாம் என்று; வெப்பு உருவு - அனற்பிழம்பின் உருவம்.*

பஞ்சவடிக்குப் போமாறு சீராமனுக்கு அகத்தியர் விடைகொடுத்தல்.

81. *பஞ்சவடி - ஐந்து ஆல மரங்களின் கூட்டம்; அதனை யுடைய இடத்திற்கு ஆகுபெயர்.* (Modern Nasik).

சீராமன் விடைபெற்றுச் செல்லுதல்.

83. *மேகநிற வண்ணன் - சீராமன்.*

சீராமன் முதலியோர் சடாயுவைக் காண்டல்.

84. *கழுகின் வேந்து - சடாயு.*

சடாயு இராமலக்குமணரைக் கண்டு சந்தேகித்தல்.

85. *அயிர்த்து - ஐயமுற்று ; நோன்பினர் - முனிவர்.*

89. *துணைவன் ஆழியான் - சிநேகிதனாகிய தசரதச் சக்கரவர்த்தி.*

சடாயு இராமலக்குமணரை 'நீவிர் யாவர்' என வினவல்.

90. *வீரர் - இராமலக்குமணர் ; மனப்பட - மனத்தில் படியும்படி.*

இராமலக்குமணர் உத்தரம்.

91. *மலர்த்தாரவர் - மலர் மாலையை யணிந்த இராம லக்குமணர்.*

தசரதன் இறந்ததைக்கேட்ட சடாயு மூர்ச்சித்தல்.

92. *மறக்கவுற்றுறாதன - மறக்கக்கூடாதன.*

இராமலக்குமணரால் தேற்றப்பட்ட சடாயு புலம்பல்.

93. *மன்னன் - சடாயு ; அரற்றினான் - புலம்பினான்.*

94. *பரவுதற்கு அரிய கொடைக்கும், நின்தன்பனிக் குடைக்கும், பொறுமைக்கும் முறையே நெடும் பண்பு தோற்று விண்ணுலகத்திற் சென்று கரந்து அலரும் கற்பக விருக்ஷமும், கரவாக இருளில் தோன்றும் அழகிய சந்திரனும், (மாயிருஞால மாதலின்) கரத்தல் (ஒளித்தல்) அருமையான கடல் சூழ்ந்த நிலமென்றும் முதல் இரண்டு அடிகட்குப் பொருள் கொள்க.*

95. *நேயநெஞ்சு - அன்பினையுடையமனம் ; இன்னும் - உன்மரணத்தைக் கேட்டறிந்த பின்னும்.*

96. *அயிர் - நுண்மணல் ; செயிர் - குற்றம்.*

சடாயுவின் வரலாற்றைக்கேட்ட இராமலக்குமணர் மகிழ்ச்சி.

97. *அவன் - சடாயு ; மேல் உலகம் புக்கதாதை-தசரதன்.*

சடாயு இராமலக்குமணர்களை வனத்திற்கு வந்த காரணம் கேட்டல்.

98. *வேந்தன் - தசரதன் ; காந்துகின்றது - வெதும்புகின்றது.*

இலக்குமணன் விடை பகர்தல்.

99. *தாதை - சடாயு ; சிற்றவை - கைகேயி.*

சடாயு சீராமனைப் புகழ்தல்.

100. *உந்தை - தசரதச் சக்கரவர்த்தி; தம்பி - பரதன்.*

சடாயு 'நீவிர் யான் காக்க இங்கே வைகுமின்' என்றல்.

101. *கேழ் - ஒளி ; நன்னுதல் - சீதை.*

சீராமன் முதலியோர் கோதாவரியைக் காண்டல்.

102. *இச்செய்யுளில் சான்றோர் கவிக்கு கோதாவரியினை உவமையாகக் கூறப்பட்டிருக்கிறது. நதிக்குச் சொல்லும்போது, பூமிக்கு அலங்காரமாய் சிறந்த பொருள்களைக் கொடுத்துப் பக்கத்தே விளைநிலங்களை யுடையதாய் அவிந்த பாவங்களையுடைய நீர்த்துறைகளைக் கொண்டு ஐவகை நிலத்தின் வழியைக் கலந்து செவ்வையாகத் தெளிவடைந்து குளிர்ந்து ஒழுகுதலையும் பொருந்தி அறிஞர்களாற் செய்யப்பட்ட கவிகளைப் போல இருந்த கோதாவரி என்று பொருள்கொள்க. சான்றோர் கவிக்குச் சொல்லும்போது, புவியில் உள்ள*

வர்கட்கு அலங்காரமாகி அமைந்த சதுர்வித புருஷார்த்தங்களை அளித்து அறிவினதாகி, தேவர் உணவினை யொத்த அகப்பொருட் டுறைகளைக் கொண்டு, ஐவகை நிலத்தின் மார்க்கத்தினைக் கலந்து (மனம்) ஒளி பெறத்தெளிந்து தண்ணளிபூண்டு அவ்வருணனிலைகட்கேற்ற ஒழுக்கமுந் தழுவியது சான்றோர்கவி என உரைக்க.

கோதாவரி வருணனை.

103. தாமரையும் (முகம்) குவளையும் (கண்) பொலிந்து விளங்கப்பெற்ற கோதாவரி நதியானது உதிர்ந்து கிடக்கும் மலர்களை அலைகளால் இராமலக்குமணர்களும் சீதையும் நின்ற கரை அருகே ஒதுக்குந் தோற்றம் அந்நதி அவர்களை மலர்கொண்டு அருச்சித்துப் பணிவதுபோன்று இருந்தது என்பது இச்செய்யுளின் கருத்து.

இராமனும் சீதையும் நதிவளம் காண்டல்.

104. ஓதிமம் - அன்னம் ; போதகம் - யானை.

சீராமன் முதலியோர் பஞ்சவடி சேர்தல்.

106. தம்பி - இலக்குமணன்.

சூர்ப்பணகையின் தன்மை.

107. நீலமா மணிநிற நிருதர் வேந்தன் - இராவணன்

சூர்ப்பணகை சீராமனைக் காணல்.

108. விண்டனர் - பகை கொண்டார்கள் ; அண்டசத்து அருந்துயில் துறந்த ஐயன் - ஆதிசேடனாகிய சயனத்தினின்று அரிய நித்திரை ஒழிந்து சீராமபிரானாக அவதரித்த ஐயன்.

சூர்ப்பணகை சீராமன் திருமேனியின் அழகை வியத்தல்.

109. சிந்தையின் உறைபவன் - மன்மதன்.

110. பெயர்த்தும் - மீட்டும்.

111. மறு - களங்கம்.

112. எவன்செய - யாது செய்யக் கருதி; அவம் செய - வீண் செய்ய; அலச - வருந்த; நவம்செயத் தகைய - எவரையும் உறவாக்கத்தக்க; அவன், நவன், தவன் என்பன போலிகள்.

சூர்ப்பணகை சீராமன் எதிர் வருதல்.

113. பல்லவம் - தளிர்; அனுங்க - வருந்த; வஞ்சமகள் - சூர்ப்பணகை.

சீராமன் சூர்ப்பணகையை வினவுதல்.

114. சேயோய் - தூரத்தில் உள்ளவளே அல்லது செந்நிறமுடையவளே; வேதமுதல் - சீராமன்; பேதை - சூர்ப்பணகை.

சூர்ப்பணகை உத்தரம்.

115. பூவிலோன் புதல்வன் மைந்தன் - பிரமனது புதல்வனை புலஸ்தியப் பிரஜாபதியின் குமாரனை விச்சிரவசு; சேவலோன் துணைவன் - குபேரன்; பின்னை - தங்கை.

சூர்ப்பணகை தன்னைமணக்க மறுத்த சீராமனுக்குச் சமாதானங் கூறல்.

116. காந்தர்ப்பம் - எட்டுவகை மணத்துள் ஒன்று. மறைகளை வகுத்த - வேதங்களில் விதிக்கப்பட்ட.

சீராமன் சூர்ப்பணகையை 'அப்பாற் போ' என்றல்.

117. வளையெயிற்றவர்கள் - வளைந்த பல்லையுடைய அரக்கர்; வீரன் - சீராமன்.

சூர்ப்பணகை சீதையை எடுத்துச்செல்லத் தொடங்கல்.

118. வெய்யாள் - சூர்ப்பணகை; படியிலாள் - சீதை; அவன் - சீராமன்.

119. என்சிந்தனை சமைந்தது - என் எண்ணம் பலித்தது; துணியிருந்த வல் மனத்தினள் - சூர்ப்பணகை; தோகை - சீதை; அயலிருந்தவன் - இலக்குமணன்.

இலக்குமணன் சூர்ப்பணகையைத் தடிதல்.

120. கடுகினன் - விரைந்து சென்றனன்.

121. ஊக்கி - வலிமைகொண்டு; நூக்கி - தள்ளி.

சூர்ப்பணகை புலம்பல்.

122. கூற்றும் உட்கும் - யமனும் அஞ்சும்.

123. தாபதர் - முனிவேடங் கொண்டவர்; தழலெடுத்தான் - சிவபெருமான்; தனிமலை - இராவணன்.

124. உன் செருப்படியிற் பொடியொவ்வா மானிடர் - உன் யுத்தகளத்தில் தூசுக்கும் இணையாகாத மானிடர்; இனி உனது செருப்பினது (பாதரக்ஷை) அடியில் உள்ளதுகளுக்கும் ஒப்பாகமாட்டாத மனிதர் என உரைத்தலும் ஒன்று.

சூர்ப்பணகை புலம்பும்போது சீராமன் வருதல்.

126. பொன்றுன்னும்படி அகத்து - அழகு பொருந்திய ஆச்சிரமத்தினிடத்து மரகதத்தின் மலை - சீராமன்.

சூர்ப்பணகை தான் பட்ட பாட்டைச் சீராமற்கு உணர்த்தல்.

127. *வன்பிழை - கொடிய குற்றம்.*

சீராமன் சூர்ப்பணகையை, 'ஓடிப்போ' எனல்.

128. *வீடிப்போகாதே - அழிந்துபோகாமல் ; அவள்-சூர்ப்பணகை.*

சூர்ப்பணகை சென்று கரன் காலில் விழுதல்.

129. *அம்பென - ஜலதாரை போல.*

சூர்ப்பணகை கரனிடத்தில் தனக்கு நிகழ்ந்தவை கூறல்.

130. *நிருதர் - அரக்கர்.*

133. *விண்டு - மனம் வேறுபட்டு.*

சூர்ப்பணகை அரக்கர் இறந்தமையைக் கரனிடம் சொல்ல அவன் கோபித்தல்.

134. *அவிந்து அழிந்தார் - இறந்து ஒழிந்தனர்.*

அரக்கர்சேனை சீராமன் இருக்கும் இடம் சேர்தல்.

135. *வள்ளியோன் - சீராமன் ; மாய பந்தமாவினை-மாயம் பொருந்திய கட்டாகிய பெரியவினை ; உந்தஅரு-நீக்குதற்கு அரிய ; அரக்கி - சூர்ப்பணகை.*

இலக்குமணன் போர்க்குச் சித்தனாய் எழுதல்.

136. *விசித்த - கட்டிய ; பின்வந்தோன் - இலக்குமணன் ; மொழியலுற்றான்-சீராமன் சொல்லத் தொடங்கினான்.*

இலக்குமணன் தன்னைப் போர்க்கு அனுப்புமாறு வேண்டல்.

137. *நாள் உலந்து அழியும் - ஆயுள் ஒழியப் பெற்று அழிவார்கள் ; ஆளி - சிங்கம் ; சோம்பு - சோம்பல்.*

இராமன் மறுக்க இலக்குவன் சீதையைக் காத்து நிற்றல்.

138. *அண்ணல் - சீராமன் ; புலர்கின்றாள் - வருந்துகின்ற சீதை.*

சீராமன் பர்ணசாலையினின்று போர்க்குப் புறப்படல்.

139. *குழை - காதணி ; நழையுறுசாலை - பர்ணசாலை ; முழை - குகை ; மடங்கல் - சிங்கம்.*

சீராமனை அலட்சியம் செய்தலாகாது என்று அகம்பன் கரனுக்குக் கூறல்.

140. *இனையவாகலின் - தீய நிமித்தங்கள் இத் தன்மையவாக இருத்தலால் ; வாகையாய் - வெற்றிமாலையுடையவனே (கரன்).*

கரன் விடைபகர்தல்.

141. *உரைத்த வாசகம்-அகம்பன் சொன்ன வார்த்தைகள்.*

சீராமன் அரக்கர் சேனையை அழித்தல்.

142. *மருள் - மயக்கம் ; இழுதையர் - அறிவீனர்.*

143. *கைக்கரியன்னவன் - யானையை ஒத்த சீராமன் ; பொய்ச்சாட்சி மொழிகள், சொன்னவர்கள் குலத்தை வேர் அறுத்தல்போல இராமபாணங்கள் அரக்கர் குலத்தை வேரோடு அறுத்தன என்பது இச் செய்யுட் கருத்து.*

144. *பரிதிவாளினர் - சூரியன் போல் விளங்குகின்ற வாட்படையையுடையவர்.*

145. அன்னதினையும் - அத்தன்மையாக (மனிதரைக் கண்டு அஞ்சத்தகாதென) நினைக்கின்ற; துனையும்-விரைந்து செல்லும்.

146. வச்சை - பழிப்பு; வசை என்பது வச்சை என விரித்தல் விகாரம் பெற்றது. கொச்சை - இழிவு; கூசார் - அஞ்சமாட்டார்.

147. செம்பு காட்டிய கண் - (கோபத்தாற் சிவந்து) செம்பின் நிறத்தைக் காட்டிய கண்.

148. தான் - தூஷணன்; இறை - சிறுபொழுது.

149. நிமலன் - ஸ்ரீராமன்; இறை நயந்தான் - சிறிது மதித்தான்.

150. அவன் - தூஷணன்.

151. தம்பி - தூஷணன்; குலக்கரிகடுப்பான்-திசை யானைகளை ஒப்பவனாகிய கரன்.

152. அந்தகன் - யமன்; சிந்துரம் - யானை; இந்து - சந்திரன்.

153. அன்றிடை - அப்பொழுதில்; மன்று இடை - நியாய சபையில்; எளியோரைக் கொன்றனர்- எளியோரைக் கெடுத்து கொன்றனர்; முற்றெச்சம்.

154. பரமுருக்கிய-மிகுதியாக அழித்ததனாலான; கண்டம் உற்றான் - கழுத்தறுபட்டனன்.

155. அண்ணல் வீரன் - ஸ்ரீராமன், தம்பி - இலக்குமணன், அன்னம் - ஸீதை.

சூர்ப்பணகை இலங்கைக்குச் செல்லல்.

156. அலங்கல் - வெற்றி மாலை; குறித்தாள் - எண்ணினவளாகிய சூர்பணகை.

இலங்கையில் இராவணன் அரசு வீற்றிருத்தல்.

157. பண்டு - இராவணன் திக்குவிசயஞ் செய்த காலத்தில், பணைமருப்பின் இணை - பருத்த இரண்டு தந்தங்கள்.

158. படிசுமந்த விட அரவு - ஆதிசேடன்.

159. ராவணன் - வடசொல் கூவினவன் என்பது பொருள்; கைலாச கிரியின்கீழ் கையகப்பட்டுக் கொண்டபொழுது பேரிரைச்ச லிட்டமைபற்றி இவனுக்கு இப் பெயர் வந்தது.

சூர்ப்பணகை இராவணன் அரண்மனையின் வடக்குக் கோபுரவாயிலில் தோன்றுதல்.

160. காந்துவாள் - கோபிப்பவள்; குட திசை - மேற்குத் திசை.

இராவணன் சூர்ப்பணகையை, 'உன்னைத் தண்டித்தவர் யாவர்? என்று வினுதல்.

161. உரறி - பேர் ஒலிசெய்து.

சூர்ப்பணகை விடை பகர்தல்.

162. மீனுடை நெடுங்கொடியினேன் - மன்மதன்.

இராவணன் சூர்ப்பணகையைப் பார்த்து நடந்ததை விவரமாகக் கூறும்படி கேட்டல்.

163. நொய்தவர் - அற்பவலியை யுடையவர்; பொய்தவிர்-பொய் சொல்லாதே.

சூர்ப்பணகை விடை பகர்தல்.

164. உலகு ஏழின் நன்மதன் அழிப்பர் - ஏழு உலகங்களில் உள்ள அனைவருடைய வல்லமையையும் அழிக்க வல்லவர்.

165. இந்து - சந்திரன்; நாளம் - தண்டு; கந்தமலர்-வாசனையையுடைய தாமரை மலர்.

166. வற்கலை - மரவுரி; விற்கலையா-தனுர் வேதம் உணர்ந்தவர்; உற்கு அலையர் - உன்னால் (இராவணனால்) துன்ப மடையமாட்டார்; சொற்கலை என - சொற்களாலாகும் சாஸ்திரங்கள் போல.

167. ஏறுநெறி அந்தணர் - உயர்ந்த ஒழுக்கங்களை யுடைய வேதியர்; வேறும் - வெல்லுவோம்; கோறும் - கொல்லுவோம்; சூள் - சபதம்.

168. இறைவர் மூவர் - திரிமூர்த்திகள் (பிரமன், விஷ்ணு, சிவன்)

169. தராவலயம் - பூமண்டலம்; பராவரு-புகழ்தற்கரிய, விராவரு - கலத்தற் கருமையான.

இராவணன் தன்னை வெறுத்துக்கொள்ளல்.

170. மருந்து - தேவாமிர்தம்; இறை - சிறிதும்.

171. மூளும் உளதாயபழி - என்றும் இருப்பதாய வளர்கின்ற இகழ்ச்சிச் சொல்; விடமுண்டவன்; சிவன் - நாள் - ஆயுள்.

இராவணன் தன்மனத்தை முன்னிலையாக்கிக் கூறல்.

172. புத்துறவு உற - புதியசம்பந்தமாகப் பொருந்த; தத்துறுவது - தடுமாறுவது.

இராவணன் கரன் முதலியோர், 'அவர்களைக் கொல்லவில்லையோ ?' என்று கேட்டல்.

173. உரைசெயா - கூறி; எரிவிழிப்பான் - நெருப்பைப் போல் பார்ப்பவனாகிய இராவணன்.

சூர்ப்பணகை விடை.

174. எல்லொன்று கமலம் - ஒளிபொருந்திய தாமரை.

இராவணன் சூர்ப்பணகையை, 'நீ அவர்கட்குச் செய்த தீங்கு யாது?' என்று வினவல்.

175. ஆயிடை - அவ்விடம்; ஆழித்தீ - கடலிற்றோன்றும் வடவாமுக அக்கினி; சீற்றத்திற்கு ஊற்றம்-கோபத்துக்கு வலிமை.

சூர்ப்பணகை விடை பகர்தல்.

176. யாவர்க்கும் - யாவராலும், உருபுமயக்கம்.

சூர்ப்பணகை சீதாபிராட்டியாரை வருணித்தல்.

177. காமரம் - ஓர்வகைப் பண்; அணங்கு - தெய்வம்.

178. அளகஓதி - சுருட்டிமுடித்த கூந்தல். மஞ்சு - கரிய மேகம்; வடித்த கூந்தல் - வாரிவிடப்பட்ட கூந்தல்; மழை - மழைத் தாரைகள்; மைதீர் - குற்றமற்ற.

179. இழுதைச் சொல் - பொய் வார்த்தை.

180. தெவ்வுலகு - பகைவர் உலகமாகிய தேவலோகம்; பணத்தினோர்கள் அவ்வுலகம் - நாகலோகம்; உலை - உலைக்களம்.

182. நெல்லுக்குப் புல் சமமாகாது, அது ஓர்கால் சமமாகும் என்று ஒப்புக்கொளினும் நுதலுக்கு வில் ஒவ்வாது என்பது நான்காம் அடியின் பொருள். நெல்லுக்குப் புல் சமமாகும் என்பதை அங்கீகரிக்கும் மந்தமதியுடைய எனக்கும் வில்லுக்கு நுதல் ஒவ்வாது என்று புலனாகின்றது என்பது மற்றோருரை.

183. இருமூன்று வதனத்தோன் - அறுமுகக் கடவுளாகிய முருகன்; அந்தரம் - பேதம்.

184. பாகத்தில் ஒருவன் வைத்தான் - சிவபெருமான் உமாதேவியை இடப் பாகத்தில் வைத்தனன்; பங்கயத்து இருந்த பொன் - இலக்குமி; ஆகம் - மார்பு; அந்தணன் - பிரமன்.

185. பிள்ளை - குழந்தை; பிழைக்கலாற்றாய்-அவளை நீக்கச் சகிக்கமாட்டாய்.

சூர்ப்பணகை 'சீதையை எடுக்கையில் யான் தடியப் பட்டேன்' என்றல்.

186. இன்னவள்-இத்தன்மையளான சீதை; இடைபுகுந்து-நடுவிலேவந்து.

இராவணனது கலக்கம்.

187. கேட்டயங்கை - சீதை.

188. கல்விநோக்கா மதியிலி - வித்தையை உணராத அறிவில்லாதவன்.

189. மாதிரம் - திக்கு; பாழி - வலிமை.

தென்றற் காற்று வீசுதல்.

191. நறை - தேன்; வெரி - வாசனை.

192. காற்றினோன்-வாயுதேவன்; அமைச்சர் - மந்திரிகள்.

இராவணன் மாரீசனிடம் செல்லல்.

193. இந்தியம் - பஞ்சேந்திரியம்.

மாரீசன் இராவணனை வந்த காரணம் வினவல்.

194. கற்பகநீழற்றலைவன் - இந்திரன்; இன்னல்-துன்பம்.

இராவணன் விடை பகர்தல்.

195. வன்மை - வலிமை; புன்மை - இழிபு.

196. ஒப்பு அழிவு என்று - (அம் மனிதர்கள் எனக்கு) ஈடு இல்லை என்று எண்ணி; ஒல்லேன் - சம்மதிக்க மாட்டேன்; துப்பு - பவளம்.

மாரீசன் மறுத்துக் கூறுதல்.

197. எரிகின்றகிச்சின் - எரிகின்ற நெருப்பில்; உருக்கிட்டு- இரும்பைப் போட்டுக் காய்ச்சி; சிச்சி - இகழ்ச்சிக் குறிப்பு.

198. இன்னுநெஞ்சன் - கெட்ட மனத்தையுடையவன்; துணிவு - நல்ல விஷயங்கள்.

199. நாரங் கொண்டார் - அன்பு கொண்ட நண்பர்கள்; நடையல்லா வாரம் - நீதிநெறிக்கு ஒத்தல் இல்லாத குடியிறைப் பொருள்; தாரம் - மனைவி; ஈரும் - கொன்று விடும்; கண்டகர் - துஷ்டர்கள்.

200. மந்திரமற்றார் உற்றது - ஆலோசனை யற்றவர்கட்குத் தோன்றுவ தாகிய.

201. எய்தாது - (நன்மை யாதும்) சேரவே சேராது; வைதாலன்னவாளிகள் கொண்டு - (முனிவர்கள்) சபித்தாற் போன்ற கொடிய அம்புகளைக் கொண்டு; இவ்வடியை 'வைத வைவின்மராமரம் ஏழ்தொளை எய்த எய்தவற்கு எய்திய மாக்கதை' என்னும் சிறப்புப் பாயிரச் செய்யுளோடும் 'சொல்லொக்குங் கடிய வேகச் சுடுசரம்' என்னும் தாடகை வதைப்படலச் செய்யுளோடும் ஒப்பிடுக.

202. நம்மில் உய்வார் யாரே எனக்கொண்டு என்று இயைத்துப் பொருள்கொள்க; நலிவாயோ - கெடுவாயோ.

203. சயநிற்கும் - (அவர்கள்பால்) வெற்றி நிற்கும்; கம்பிக்கும் - நடுங்கும்.

இராவணன் மாரீசன்மேற் கோபித்தல்.

204. புலையாடற்கு - பொல்லாங்கு செய்தற்கு; என் உரை கொள்ளாய் - எனது வார்த்தையை ஏற்றுக்கொள்; உயர் செல்வத்து என்றும் வைகுதி - உயர்ந்த செல்வத்தில் இருந்து என்ஞான்றும் வாழ்வாயாக.

205. ஆடு எழில் மணித்தோள் - வெற்றி பொருந்திய அழகிய உறுதியுள்ள தோள்கள்; விடைத்தான் - கோபித்தான்.

மாரீசன் இராவணன் வேண்டுகோட்கு இணங்கிக் கூறுதல்.

206. *புன்மையின் உற்ற நீராய் - அற்ப விஷயத்தில் பொருந்திய குணமுடையவனே.*

மாரீசன் மாயமானாய்ப் போதற்கு ஒருப்படல்.

207. *பொன்னை - சீதைக்கு; மால் புணர்த்துக - ஆசையை மூட்டுவாயாக.*

பொன்மானை மான்கள் பலவுந் தொடர்தல்.

208. *அலைமானுறும் ஆசையின் - கடலையொத்த (மிக அதிகமான) ஆசையுடனே; நிலையாமனம் - பற்றுதல் இல்லாத மனம்; நேயம் - உள்ளன்பு*

பொன்மானைக் குறித்து சீதை, சீராமனிடம் சொல்லல்.

209. *ஆய்கதிரால் - சிறந்த ஒளியினால்; காணத்தகும் - பார்க்கத் தக்கது.*

சீராமன் பொன்மானைப் பிடிக்க உடன்படுதலை இலக்குவன் தடுத்தல்.

210. *ஐயன் - சீராமன்; தெளிவுடைச் செம்மல் - இலக்குமணன்.*

சீராமன் உத்தரம்.

211. *மடிவாம் - இறந்துபடும்; தேவரை யிடுக்கண் தீர்ப்பான் - சீராமன்.*

இலக்குவன் சீதையைக் காத்துநிற்றல்.

212. *அயிர்த்தெனன் - சந்தேகித்தேன்; பொன் அனாள் - திருமகள் போன்ற சீதை; மூவர் - தாடகை, சுபாகு, மாரீசன்; ஒருவன் - மாரீசன்.*

பொன்மான் விரைவாய் ஓடுதல்.

213. *வெறித்தது - ஆவேசமுற்றது; குரபதம் - குளப்பு அடிகள்; உரத்தைதக்கூட்டி - மார்பிற் சேர்த்துக் கொண்டு; ஊதை - காற்று; உள்ளம் - மனம்; வாயு*

வேகமும் மனோவேகங்களைக் காட்டிலும் வேகமாய் ஓடிற்று அந்த மான் என்பது பின் இரண்டு அடியின் கருத்து; உருவச் செல்லும் கதிர்க்கு ஒரு கல்வி வேறே காட்டியது ஒத்தது - விரைந்து செல்லும் நடைக்குப் புதிய ஒருவகையைத் தான் காட்டிக் கற்பித்துக் கொடுத்தாற் போன்றது.

பொன்மான் ஓடும் வகை.

214. தாழின் - தாமதித்தால்; நிதிவழி நேயம் நீட்டும் - பொருளிடத்து ஆசை மிகுதியாக வைத்த.

இராமன் அம்பு தொடுத்தல்.

215. சக்கரத்தில் தகைவரிதாயது - சக்கராயுதம்போலத் தடுக்க முடியாததான.

மாரீசன் கதறிக்கொண்டு வீழ்ந்து இறத்தல்.

216. நெட்டிலைச்சரம் - நீண்ட கூரிய இலை வடிவான பாணம்; வஞ்சன் - மாரீசன்.

சீராமன் இலக்குவனை வியத்தல்.

217. வெய்யவன் - மாரீசன்; தன் உருவொடு - தன் நிச ரூபத்துடனே.

சீராமன் மாயமான் மாரீசன் என்று அறிதல்.

218. ஆசை நீளத்து-திக்கினது நீளம்வரையில்; மாதவன்- விசுவாமித்திர முனிவன்.

219. உழைத்தவாளி - வருத்தும் தன்மையான அம்பு; புல்லியோன் - அற்பகுணமுடைய அரக்கன்.

மாரீசன் குரலால் சீதை வருந்துவளோ என்று சிந்தித்தல்.

220. மாற்றம் இன்னதுமாயம்-இத்தன்மையான வார்த்தை வஞ்சனை; ஏற்றமுன் - (மான்) எதிர்வந்த உடனே; என்னுடைய ஆற்றல் - என்னுடைய வல்லமை.

சீதை இலக்குவனை வெறுத்தல்.

221. குற்றம் வீந்தகுணம்-குற்றமில்லாத கல்யாண குணங்கள்; இற்று வீந்தனன் - அறுபட்டு இறந்தான்.

இலக்குவன் சீதைக்குத் தேறுதல் கூறல்.

222. பரக்க - விரிவாக; அரக்கன் - மாரீசன்.

சீதை இலக்குவனைப் பழித்தல்.

223. எடுத்த சீற்றத்தள் - அதிகப்பட்ட கோபத்தை உடையவள்; வயிர்த்து - பகைமை பாராட்டி.

சீதை நெருப்பில் வீழ்ந்து இறப்பேன் என்றல்.

224. பெருமகன்-மூத்தவனாகிய இராமன்; உலைவு-அழிவு.

இலக்குவன் சீதையை வணங்கி விலகுதல்.

225. தூமம் - புகை; சேமவிற்குமரன் - இலக்குவன்.

இலக்குவன் செல்ல உடன்பட்டுக் கூறல்.

226. துஞ்சுவது - இறக்கவேண்டியது; அவலம்-துன்பம்; இஞ்சிரும்-இவ்விடத்திலிரும்; இங்கு என்பது இஞ்சு எனத் திரிந்து நின்றது; கடைசியடியை 'ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று, சூழினுந் தான் முந்துறும்' என்னும் குறட்பாவோடு ஒப்பிடுக.

இலக்குவன் விடை பெறுதல்.

227. அரசன் - இராமன்; ஏகின்றிர் - போவென்று சொல்லுகிறீர்; வேகின்ற - வருந்துகின்ற.

இலக்குவன் போகச் சிந்தித்தல்.

228. பொருப்பனையான் - ஸ்ரீராமன்; அருப்பம் - காவல் or அரண்.

இலக்குவன் துணிதல்.

229. தருமத்தினால் இயலுமானால் நீங்குநேராதபடி செய்யலாம் என்பது முதலடியின் பொருள்.

இலக்குவன் செல்லல்.

230. யான் போவது புரிவல் - நான் செல்லுவேன் ; புகுந்தது - (ஏதேனும் கெடுதி) நேர்ந்தது ; எருவையின் தலைவன் - சடாயு

இராவணன் சந்நியாசி வேடம்பூண்டு சீதையிடம் வருதல்.

231. இளையவன் - இலக்குவன் ; இறவு - சமயம் ; தண்டு ஒரு மூன்று - திரிதண்டம் ; தளை - பந்தம்.

232. சேண்நெறி-நெடுந்தூரம் ; பாணியின் - தாளத்தோடு.

233. பூப்பொதி அவிழ்ந்தன நடையன் - மலரின் இதழ் (மெல்ல மெல்ல) விரிந்தாற்போன்ற மெத்தென்ற நடையை யுடையவன் ; பூமியில் நெருப்புச் சிதறி யிருப்பின் அவ்விடத்துச் செல்லுதல்போல நன்கு பதியாதபடி கால்வைக்குஞ் செய்கையை யுடையவன் என்பது இரண்டாமடியின் பொருள். மூப்பெனும் பருவந்தானும் வெறுக்கும்படி மிக முதிர்ந்தவன் என்பது நான்காம் அடியின் பொருள்.

234. தாமரை மணிகளால் (ஆகிய) அழகிய தவத்துக்கு உரிய மாலையைத் தரித்தவன் என்பது முதலடியின் பொருள் ; ஆமையின் இருக்கையன்-ஆமையின் (வடிவாகச் செய்யப்பட்ட) மணையை உடன்கொண்டு செல்பவன் ; அருந்ததி - சீதை ; சூழல் - பர்ணசாலை.

இராவணன் பர்ணசாலையை அணுகி 'இதில் உள்ளவர் யார் ?' என்று வினவல்.

235. தெரிந்த மேனியான் யாவர் இவ்விருக்கையுள் இருந்துளீர் என்றான் என்று இயைக்க.

சீதை இராவண முனியை எதிரேற்றல்.

236. தோகை - மயில்போன்ற சீதை ; சேகுஅறு - குற்றமற்ற ; பாகு இயல்கிளவி - கருப்பஞ்சாற்றுப் பாகு போன்ற சொற்கள்.

இராவணன் சீதையைப் பார்த்தல்.

237. வெற்பிடை மதம் - யானையினிடத்து மதசலம்; புகழின் சேக்கை - கீர்த்திக்குத் தங்கும் இடம்.

238. அங்கலின் - வாடுதலையுடை.

சீதை கொடுத்த ஆதனத்தில் இராவணமுனி அமர்தல்.

239 வேத்திரத்து ஆசனம் - பிரம்பினாற் செய்யப்பட்ட ஆதனம்.

சீதை விடை பகர்தல்.

240 அயர்விலது - வருத்தமில்லாமல்.

இராவணமுனி சீதையை 'நீர் யார் மகள்?' என்றல்.

241. ஒரு முறை நண்ணினேன் - ஒரு முறை சென்றுள்ளேன்.

சீதை விடை பகர்தல்.

242. அரகம் - தோஷம் இல்லாத.

சீதை முனிவரனை 'நீர் எங்குநின்று வருகின்றீர்?' என்றல்.

243. அவ்வழி - அவ்விடத்தில் or அப்போது; ஆயிழை - சீதை.

இராவண முனிவன் விடை பகர்தல்.

244. இந்திரற்கு இந்திரன் - இந்திரனுக்கு மேம்பட்ட தலைவன்; மந்திரத் தருமறை-மந்திரங்களோடு கூடிய வேதம்.

245. மால்வரை - பெரிய கைலாசகிரி; ஊசி வேர்-முக்கியமான வேர்; ஆசை - திக்கு.

246. வெம்மை தீர் ஒழுக்கம் - நல்லொழுக்கம்.

247. ஆண்டையான்-எசமானனாகிய அவன்; நீண்டனென் இருந்து - நெடுங்காலம் கழிந்தேனாயிருந்து.

இராவணன் சமாதானம் கூறல்.

248. அயிர்த்தனள் - சந்தேகங்கொண்டாள்; பிரிதர - வேறு வகையாக; வல்லோர் - அரக்கர்.

சீதை இராமனால் அரக்கர் அழிய உலகு இன்புறும் என்றல்.

249. வஞ்சன் - இராவணன்; செப்பமிக்காள் - நற்குணம் மிக்க சீதை.

250. வாளரி வள்ளல் - ஒளியையுடைய சிங்கம் போன்ற சீராமன்.

சீதை கூறியதைக் கேட்டு இராவணன் சினங்கொள்ளல்.

251. சொன்மாலை - சொல் வரிசை; மானம் ஊன்ற - அபி மானம் மேலிட.

சீதையின் உத்தரம்.

252. கரண்டம்-நீர்க் காக்கை; வீரன் - கார்த்தவீரியார்ச்சுனன்; இரண்டு தோள் ஒருவன் - பரசுராமன்.

இராவணன் துறவி வேடத்தை விடுத்தல்.

253. எயிற்றின் ஒளி - பல்வரிசை.

இராவணன் சீதையைச் சமாதானப்படுத்தல்.

255. குலைவுறல் - நடுக்கம் அடையாதே.

சீதை இராவணனை நிந்தித்தல்.

256. புனிதர் - முனிவர்கள்; அவி - தேவர் உணவு.

257. நொய்தா-எளிதாக; இற்பிறப்பு - உயர்குடிப்பிறப்பு.

சீதாபிராட்டி கதறல்.

258. அவன் - இராவணன்; பொறை - உடல்.

இராவணன் சீதையைத் தரையுடன் பெயர்த்து எடுத்தல்.

259. தீயவன் - இராவணன் ; ஆயிழை - சீதை ; மேல்உரை - முன் நிகழ்ந்த சாபம் (நளகூபரன் இட்ட சாபம்.)

இராவணன் சீதையை எடுத்துக்கொண்டு ஆகாய மார்க்கமாய்ச் செல்லல்.

260. சொல்வளை - சீதை; விண்தான்வழி - ஆகாயமே மார்க்கமாக

சீதை பல பொருள்களையும் நோக்கிக் கூறுதல்.

261. செஞ்சேவகனார் - ஸ்ரீராமன் ; மஞ்சு - மேகம் ; பொழில் - சோலை.

262. நிருதாதியர் - அரக்கர் முதலிய கொடியோர்கள்.

263. ஓதாது உணர்வார் - வரம்பிலறிவுடையவர்.

சடாயு இராவணனை எதிர்த்தல்.

264. இடித்த சொல்லன் - இடிபோல் முழக்கிய சொற்களையுடையன் ; வீரத்துண்டத்தன் - வலிமைபொருந்திய மூக்கினையுடையவன்.

265. பாழிவன்கிரிகள் - பெரிய வலிய மலைகள் ; பூழி - புழுதி ; ஊதை - காற்று.

266. எருவையின் மன்னன் - கழுகுகட்கு அரசனாகிய சடாயு.

சடாயு இராவணனை நோக்கிக் கூறல்.

267. சுட்டாய் - எரித்து ஒழித்தாய் ; விளிகின்றிலை - இறக்க மாட்டாய்.

268. பிழை - தவறு ; யாது ஆக - என்னவென்று.

269. மூவரும் - திரிமூர்த்திகளும் ; புல்வாய் - மான் ; மிடுக்கு - வல்லமை.

270. இம்மை - இப்பிறப்பு ; அம்மை - மறுபிறப்பு; எம்மை- எப்பிறப்பு.

271. பித்தேறினையாதல் - பைத்தியம் மிக்காய் ஆதலால்; பிழைத்தனை - குற்றஞ் செய்தாய்.

சடாயுவுக்கும் இராவணனுக்கும் போர்.

272. முடிப்பத்தி - தலையின் வரிசைகள்; கடிதுற்றவன் - விரைவாக வந்தவன்; துண்டம் - மூக்கு.

273. மாச்சி - வருத்தி, மாய்த்து என்பதன் மரூஉ; போச்சி- போயிற்று, போயிற்று என்பதன் மரூஉ.

274. பிழையா - தப்பிப் போகாத.

275. வலியின் தலை-வலிமையினால்; விண்ணின் வேந்தன்- இந்திரன்; குலியம் - வச்சிராயுதம்.

சடாயு வீழ்ந்ததைக்கண்ட சீதையின் செய்கை.

276. நல்லவன் - சடாயு; நரகன் - இராவணன்.

277. காணிய - காண்பதற்கு.

278. பொற்பு அழியா - அழகு கெடாத; வலம்-வல்லமை. போர்வலான் - சிராமன்; வினையினேன் வந்த இல்- பாவியாகிய நான் புகுந்த வீட்டார்.

279. எல் இயல் விசும்பிடை-ஒளிபொருந்திய ஆகாயத்தின் கண்; நேமியாய் - தசரதச் சக்கரவர்த்தியே.

இராவணன் செல்லுதலைக்கண்ட சடாயு இரங்கல்.

280. மோகவெந்துயர்-மயக்கமான கொடியதுன்பம்; வஞ்சன் - இராவணன்; புலர்ந்து - வாடி.

281. மைந்தர் - இராம லக்குமணர்; மருகி - சீதை.

282. வெற்றியர்-இராம லக்குமணர்; சிற்றவை-கைகேயி.

285. பருஞ்சிறை-பெரிய சிறகுகளையுடைய சடாயு.

சடாயு சோர்ந்து துயில்கொள்ளல்.

286. உணர்வு நீங்கலான் - அறிவு நீங்காதவனான சடாயு.

இராவணன் சீதையை அசோகவனத்தில் சிறை வைத்தல்.

287. சிஞ்சுபவனம் - அசோகவனம்.

கவிக்கூற்று.

288. இளையவன் - இராவணன் ; மன் - சீராமன் ; இளைய வன் - இலக்குவன்.

இலக்குவன் சீராமனைக் காணல்.

289. கோலத்தான் - அழகினையுடைய சீராமன்.

இலக்குவன் தான் வந்தகாரணம் இயம்பல்.

290. மூடுகா - விரைந்து ; இறவா திருக்கை புணரான் - இறவாமலிருத்தலை யுடையமாட்டாள், (இறந்து படு வாள் என்பது பொருள்).

சீராமன் இலக்குவனை நோக்கிக் கூறல்.

291. சிந்தாகுலம் - மனக்கலக்கம்.

சீதையைக் காணுமல் சீராமன் வருந்தல்

292. சாலை - பர்ணசாலை ; சுரிகுழலாள் - சீதை.

293. கைத்த - வெறுப்படைந்த ; உய்த்துவாழ்தர - வைத் துக்கொண்டு வாழ்தற்கு.

தரையில் தேர்ச்சுவடு மறைந்தமைகண்டு சீராமன் திகைத்தல்.

294. ஒருநிலை விண்ணின் ஓங்கியது - ஓரிடத்தில் வானத் தில் எழுந்ததாகத் தெரிந்தது; இளவல்-இலக்குவன்.

இலக்குவன் 'போருதவன் இராவணன்' என்றல்.

295. திருவினாயகன் - சீராமன்; சுமித்திரைசிங்கம்- இலக் குவன் ; தருவினீளிய - மரங்கள்போல் நீண்டுள்ள ; தாதை - சடாயு.

சீராமன் சடாயு வீழ்ந்துகிடந்ததைக் காண்டல்.

296. *மடல் - பூவிதழ்; மிடல்உள் - வலியமனம்.*

சடாயுவைக்குறித்து சீராமன் புலம்பல்.

297. *ஒருவன் - தசரதன்; முடிந்தான் - இறந்துபோனான்.*

298. *பின்னுறுவது - பின்வரும்பயன்; பேதுறுவேன் - மயங்குவேன்; உறுவல் - துன்பம்; உன்உறவு - உன் சினேக பந்தக்கடமை; என்உறுவான் - யாதுபயனை அடைய.*

300. *தாரம்-மனைவி; என்றனை - எதிர்த்தவனாய் உன்னை.*

301. *சொல்லுடையார் - புகழ் உடையவர்; இல்லுடையாள் - மனைவி; படையுடையான் - இராவணன்.*

சடாயு இராம லக்குமணரைக் கண்டதனால் மகிழ்வெய்தல்.

302. *உற்றது உணராது - சீதைக்கு நேர்ந்த நிலைமையை அறியாமல்; வெயதுயிர்ப்பான்-பெருமூச் செறிபவன்; சொற்றவர் - இராம லக்குமணர்; பெயர்த்தேன் - நீக்கிவிட்டேன்.*

சடாயு இராம லக்குமணரை உச்சி மோத்தல்.

303. *புண்ணியர் - இராம லக்குமணர்; அரக்கன் - இராவணன்.*

சடாயு தேறுதல் மொழிகள் கூறுதல்.

304. *புத்தியினது வல்லமையால் ஊழைவெல்ல வல்லமையுடையோமோ? (இல்லை என்றபடி) என்பது நான்காம் அடியின் பொருள்.*

305. *இழுதைநீரது - பேதைமைக் குணமுடையது; உலகெலாம் பெறுவிப்பான் - பிரமன்.*

306. *அலக்கண் - துன்பம்; தலைக்கலம் - மண்டையோடு*

307. கோளரா - இராகுவென்னும் பாம்பு.

308. அந்தரம் - தீங்கு ; இமையவர்குரு - வியாழபகவான்.

309. குலிசக்கையினன் - தேவேந்திரன்.

310. பிள்ளைச்சொல் - மழலைச்சொல்.

311. வடுக்கண் - மாவடுவின் உட்பிளவுபோன்ற கண் ; ஆவதெல்லாம் - என்னால் இயன்றவரையில்.

சடாயு சீராமனுக்குக் கூறுந் தணிவுரை.

312. எருவை சுட்கிறைவன் - சடாயு ; நின்னால் வெல்லும்- உன்னால் (பகைவர்களை) வெல்வோம் ; ஏமுற்று - மகிழ்வுற்று.

313. கமலத்தண்ணல், தாட்செய்ய கமலத்தான் - பிரமன்.

314. செறுநர் - பகைவர்.

315. குலப்பழி - குலத்துக்குப்பழி.

316. காதலாள்-சீதை ; சேவடிக்கமலஞ் சேர்வான்-சடாயு

சீராமன் கோபந்தணிதல்

317. புயல்நிற வண்ணன் - சீராமன் ; புண்ணியன்-சடாயு ; கண்ணிய - மனத்திற் கருதிய.

சடாயு உயிர் நீத்தல்:

318. நீ அமைதி - நீ கோபந்தணித்திரு ; அரக்கன் - இராவணன் ; ஓய்வினன் - தளர்வினை யுடையானாகி.

சடாயு பரமபதம் அடைதல்.

319. போக்கிலா உலகம் - பரமபதம்.

எல்லோரும் சடாயு இறந்தமைக்கு இரங்கல்.

320. அவன் - சடாயு ; ஆடவர்க்கரசன்-புருடோத்தமனான சீராமன் ; தம்பி - இலக்குவன் ; சேடர்-நாகலோகத்தார்.

சீராமன் தம்பியை நோக்கிக் கூறல்.

321. அரக்கனின் ஆண்மைதீர்ந்தேன்-இராவணனால் ஆண்மையை இழந்தேன்.

சீராமன் சடாயுவுக்கு சமரகிரியை செய்தல்.

322. இந்தனம் - விறகு; மணலின்வேதி - மண்மேடை; தாதை - சடாயு.

323. ஈமம்-விறகு அடுக்கிய இடம்; தலையின் சாரல் - தலைமாடு; கருல - மிகுதியாக.

324. கிளித்தன - கிளிச்சிறைப் பொன்னை ஒத்த; கனித்த-செழிப்புற்ற, அவலம் - துன்பம்.

325. விரிஞ்சன் - பிரமன்; பூட்டிய கைகள்-சேரப்பிடித்த கைகள்.

சூரியாஸ்தமனம்.

326. பல்வகைத்துறை - பலவகைச் சடங்குகள்; வெல்வகைக்குமரன் - சீராமன்; வெய்யோன் - சூரியன்.

சீராமன் வருந்துதல்.

327. வருவதிரிவ - சேர்ந்து வருகின்றனவாகித் திரிகின்றவைகளை; அயிலும் அமுதும் - உண்ணும் தேவாமிர்தமும்; மொழியை-மொழிகளையுடைய சீதாபிராட்டி.

சூரியோதயம்.

328. செந்தாமரை மலர்கள் விரியும்படி உதயகிரியின் உச்சியில் சூரியன் உதயஞ்செய்தான் என்பது இச்செய்யுட் கருத்து.

சீராமன் கட்டளைப்படி இலக்குவன் நீர் கொணரச் செல்லல்.

329. இளவீரன் - இலக்குவன்; தெவ்விடை-பகைவர்கள் பின்னிடைகின்ற.

அயோமுகி இலக்குவனைக் காண்டல்.

330. நாடினன் - தேடினான்; விரும்பினள் கண்டாள்-பார்த்து ஆசைகொண்டாள்.

அயோமுகி இலக்குவனை எடுத்துச் செல்லல்.

331. மோகனை - மயக்கத்தைச் செய்யும் மந்திரம்; மாக நெடுங்கிரிபோலியை-உயர்வான பெரிய மலைபோன்ற இளையபெருமானை; வவ்வா - வாரியெடுத்து.

இலக்குவன் வாராமையைக்கண்டு சீராமன் அவனைத் தேடத் தொடங்கல்.

332. அட்பிடை தேடி - நீருள்ள இடத்தைத் தேடி; துப்பு உடை - செந்நிறத்தையுடைய; மால்வரை தோன்றல் - மலையையொத்த இலக்குவன் வரவில்லை; வெப்பு - தாகதாபம்.

சீராமன் இலக்குவனைப்பற்றிப் பலவாறு சிந்தித்தல்.

333. என்னுருயிர் - எனது அரிய உயிர்போன்ற தம்பி; தையல் - சீதை; பிழை - துன்பம்; எரிவுற்றிட - அழற்சி எய்த.

334. எந்தை - தந்தை; பொலன் குழையாள் - சீதை; உன்னை - இலக்குவனை.

335. நீர்தேடி வருந்த நிரப்பினையோ - உன்னையுந் தேடித் துன்புறும்படி (துன்பத்தை) நிறையச் செய்தாயோ.

337. மாந்தா - மாந்தா என்னும் அரசன்.

338. இருள்வாய் விளைவு - இருளில்வாய்ந்த சம்பவம்.

339. பல சூழல்கள் - பல இடங்கள்; உளைந்து - வருந்தி.

340. சமையாள் - பொறுமையுள்ள சீதை.

சீராமன் தற்கொலை செய்யத் துணிதல்.

341. அறப்பால் - நல்வினைப் பகுதி; மறப்பால் - கொடுந் தன்மை; தொடர்ச்சி - சமயம்.

இலக்குவன் அயோமுகியைத் தண்டித்தல்.

342. அவள் - அயோமுகி ; இளையோன் - இலக்குவன் ; பூசல் - பேரொலி.

இலக்குவன்வர இராமன் மகிழ்தல்

343. ஏற்றிளங்கன்று - ஆண்மையும் இளமையும் பொருந்திய கன்று ; பாற்று - குணமுள்ளதாகிய

சீராமன் இலக்குவனைப் புகழ்தல்.

344. மூவகை யமரர் - திரிமூர்த்திகள்.

345. செருவலி வீர - இலக்குவனே ; பருவரல் - துன்பம்.

சீராமன் இலக்குவனை வினுதல்.

346. அரக்கி - அயோமுகி.

இலக்குவன் மறுமொழி.

347. தொளைபடு மூக்கு - தொளை யடைந்த மூக்கு ; தளை-கட்டு ; பூசலிட்டு - கூக்குரலிட்டு.

சீராமன் இலக்குவனைத் தழுவுதல்.

348. தொல் இருள் - மிக்க இருட்டில் ; வல்லை நீ - மநு முதலிய தரும சாஸ்திரங்களில் வல்லவனுன நீ (இலக்-குவன்.)

சீராமன் பள்ளிகோள்ளல்

349. கல்லகல் - கற்கள் பரந்த ; பல்லவம் - தளிர் ; இளைய வன் - இலக்குவன்.

இராம லக்குமணர் கவந்த வனமடைதல்.

350. ஐயைந்தடுத்த யோசனையின் இரட்டி - ஐம்பது யோசனை ; வானின் காப்பண் - ஆகாய மத்தியில் ; கவந் தன் - வயிற்றுக்குள் தலை அடங்கியமைபற்றிக் கவந் தம்போலத் தோற்றமுடைமையின் இவனுக்கு கவந்தன்

என்று பெயர். கவந்தம் - தலையற்றதும் தொழிலுடன் கூடியதுமான உடல் என்பது பொருள்; இருவர் - இராம லக்குமணர்.

சீராமன் இலக்குவனை நோக்கிக் கூறல்.

351. பார் இடந்து எடுத்த மாஅனைய பாழியாய் (4) - பூமியைத் தோண்டி எடுத்த வராக மூர்த்தியை ஒத்த பெருமையுடைய இலக்குவனே! பாரிடமே இது - இது பூதந்தான் (1) - பரவை சுற்றுறும் பாரி இடம் அரிதெனை (2) - கடல் சூழ்ந்த புவியில் இடம் இல்லை என்று சொல்லும்படி; பார், இடம் வலம்வரப் பாந்த கையது (3) - உலகத்தை வலம் வரும்படியாக நீண்ட கைகளை யுடையது, நீ பார்.

352. தோகை - சீதை; எந்தை - சடாயு; வேகவெம்பழி - கொடும்பழி; இனி யான் இதனுக்கு ஆமிடம் - இப்பொழுது நான் இப்பூதத்திற்கு நுகரப்படும் பொருளாவேன்.

353. ஊன்றிய பெரும்பழி - நிலைபெற்ற பெரும்பழி.

354. இன்சொலாள்வல்லி - சீதை.

355. தனையவிழ் கோதை - சீதை; இளை - இளையவன் (தம்பி); அளித்தல் மேல் - காப்பாற்றிய பின்பு.

இலக்குவன் மறுமொழி.

356. ஆண்டான் - இராமன்; வினை - கருமம்.

357. விரவார் - பகைவர்.

358. மானே யன்னாள் - சீதை; தம்முன் - தனது தமையன்.

359. ஏவிய யாவும் இசை - கட்டளையிட்ட யாவும் செய்; இன்னல் பின்ருது எய்தி - துன்பத்துக்குப் பின் வாங்காமல் உடன் இருந்து அநுபவி; பேர் இசையாளன் - சீராமன்.

361. தேவரும் வீயும் கடை - தேவர்களும் மடிகின்ற முடிவு காலத்திலும்; மாதங்கம் - யானை.

362. சோர் குழல் - சீதை.

363. தணிக்குந் தன்மை - வெட்டுந் தன்மை; துன்பம் துற - துன்பத்தை நீக்கிவிடு.

கவந்தன் இவர்களை யாரென்று கேட்க இருவரும் கோபித்தல்.

364. இருவர் - இராம லக்குமணர்; வினையின் எய்திய-தீவினையால் என் கையில் அகப்பட்ட.

இராமலக்குமணர் கவந்தன் தோள்களை வெட்டல்.

365. அழிந்துளாரலர் - மனங் கலங்காதவர்களாய்; வீங்கலும் - உடல் பூரித்தலும்; வீரர் - இராம லக்குமணர்.

கவந்தன் நல்லுருப்பெற்று ஆகாயத்தில் தோன்றல்.

366. ஆளுநாயகன் - சீராமன்; தோம் - குற்றம்.

கவந்தன் சீராமனைத் துதித்தல்

367. விண்ணில் நின்றவன் - ஆகாயத்தில் நின்ற கவந்தன்; ஒருவனுக்கு நல்வினைப்பயன் வந்து உதவியபோது எந்தப் பொருள்தான் பெறமுடியாது என்பது நான்காம் அடியின் பொருள். இவ்வடியின் கருத்தை 'சிறப்பீனும் செல்வமுமீனு மறத்தினூங், காக்க மெவனோ வுயிர்க்கு' என்னுங் குறட்பாவோடு ஒப்பிடுக.

368. மூன்று கவடாய் - (மும்மூர்த்திகள் என்னும்) மூன்று கிளையாகி; இருவினையேன் - மிகுந்த பாவமுடைய எனது.

369. மூலமேயில்லாத - தனக்குக் காரணப்பொருள் இல்லாத; கோலம் - வடிவம்; ஆலினடை - ஆலமரத்தின் இலை.

373. மொக்குள் - நீர்க்குமிழி.

375. பிணக்கு - அறிவின்மை.

தன் பழைய தோற்றத்துடன் நின்ற கவந்தனைச் சீராமன் காணல்.

376. நெறி நின்றார் நேர் நின்றான் - நல்லொழுக்க நெறியில் நடப்பவர்க்கு முன்னின்ற சீராமன்.

இராம லக்குமணர் மதங்காச்சிரமம் அடைதல்.

377. ஆனவன் - அவ்வாறான கவந்தன்; மானவக்குமரர் மநுவம்சத்திற் பிறந்த இராலக்குமணர்.

சீராமன் சவரியைக் காண்டல்.

378. அன்னதாமிருக்கை - மதங்காச்சிரமம்.

சவரி முத்தியடைய இராம லக்குமணர் அப்பாற் சேறல்.

379. அவள் - சவரி; சவரி - சபரி என்னும் வடசொற்றிரிபு; இவள் மதங்காது சிஷ்யர்களுக்கு உபசாரஞ் செய்து கொண்டு அவ்வாச்சிரமத்திலேயே வசித்து வந்த தவப் பெண்.

இராம லக்குமணர் பம்பைப் பொய்கையை அடைதல்.

380. தன்னிடத்தில் (பம்பைப் பொய்கையில்) மூழ்கினோர் பாவத்தை அது தவறாது ஒழிக்கும் என்பது பின் மூன்று அடிகளின் கருத்து.

முதனினைப்பகராதி

செய்யுள் அ - (32)	பக்கம்
அக்க	97
அங்கரக்க	56
அதிகனின்	37
அதிசய	131
அநகமா	104
அந்தகனு	69
அந்தர	86
அந்தரம்	131
அயிர்த்தன	106
அரண்டரு-	108
அரவாகி	13
அஞ்சிறை	122
அலக்கணு	131
அலங்கல்	72
அலங்கார	30
அல்லலுற்	120
அவ்வழி	104
அவ்விடை	140
அவ்வேலை	119
அழிந்து	151
அறந்த	23
அறந்தலை	136
அறந்தனு	101
அறப்பா	144
அனையதோர்	36

செய்யுள்	பக்கம்
அனையராகி	65
அனையவ	20
அன்றிடை	69
அன்னதா	155
அன்னதாக	23
அன்னமா	14
அன்னமாமுனி	6
ஆ - (16)	
ஆசை	98
ஆணிப்	93
ஆண்டகைய	25
ஆண்டவனீ	32
ஆண்டா	149
ஆண்டாயி	111
ஆண்டையா	105
ஆதலான்	134
ஆதலினிது	20
ஆதிப்பிர	153
ஆயபின்	135
ஆயிடை	78
ஆவுக்	23
ஆளுநாயக-	152
ஆறுபுல	77
ஆனவன்	154

செய்யுள்		பக்கம்
	இ - (25)	
இச்சொல		86
இடிப்பொக்		116
இந்தன		137
இந்திர		20
இந்திரனெனி		22
இந்திரற்கி		105
இந்திரன்		81
இந்நிலை		122
இப்படியே		142
இப்புவன		27
இம்மைக்		115
இரக்கமென்		21
இருந்தமாக்		54
இருந்தன		74
இருப்பனே		101
• இருவர்மாணு		54
இரைத்தமறை		25
இவ்வியல்		148
இவ்வழி		133
இளையவ		101
இனையவாக		60
இனையராகிய		151
இன்றேயிற		143
இன்னவ		82
இன்னன		19
	ஈ - (4)	
ஈசனாண்		105
ஈசனார்		80
ஈன்றவ		148
ஈன்றவனோ		152
	உ - (10)	
உந்தை		34
உய்ந்தன		25
உருப்படிவ		48
உருளுடை		22
உரைத்த		23
உரைத்த		60
உலகொரு		29
உழைத்த		98
உற்றது		130
உன்வயி		90
	ஊ - (4)	
ஊக்கி		46
ஊணில		102
ஊற்றுமி		47
ஊற்றுறு		144
	எ - (27)	
எங்கணு		140
எண்டகு		37
எந்தா		16
எம்பிக்		87
எரியின்		9
எல்லா		16
எல்லாவுல		115
எல்லையில்		120
எவன்செய		37
எற்பெற்		150
எனப்பல		29
என்வயி		79
என்றன		59
என்றவனி		100
என்றா		149
என்றாங்		154
என்றாயுன்		150
என்றாரம்		129
என்றுவுரை		143
என்றிவ		108
என்றின்		16

செய்யுள்	பக்கம்
என்றின்ன	49
என்றுதா	66
என்றுரை	78
என்னமா	92
என்னுமவ்	113
என்னைத்தரு	143

ஏ - (7)

செய்யுள்	பக்கம்
ஏகாது	124
ஏகியினி	28
ஏகின	121
ஏத்தின	104
ஏந்தின	137
ஏறுசேவக	8
ஏனையுயி	25

ஐ - (2)

செய்யுள்	பக்கம்
ஐயநுண்	94
ஐயைந்	146

ஒ - (3)

செய்யுள்	பக்கம்
ஒப்பிறையும்	14
ஒருபகல்	100
ஒன்று	54

ஓ - (6)

செய்யுள்	பக்கம்
ஓங்குமா	27
ஓடிவந்த	125
ஓதிம	35
ஓதுங்	150
ஓமராம	8
ஓயாத	12

க - (15)

செய்யுள்	பக்கம்
கங்கை	88
கடுத்த	11
கண்டன	26
கண்டா	17
கண்டுநோக்	54
கமையா	144
கரக்கருங்	21
கரனையு	82
கருமலை	29
கலைமான்	92
கல்லகல்	146
கல்லீரும்	49
கற்பழி	120
கற்றையஞ்	37
கன்னியிள	28

கா - (7)

செய்யுள்	பக்கம்
காணுமன	17
காண்பார்க்கு	153
காந்தர்ப்ப	41
காமனென்	29
காமர	79
காற்றினேன்	84
கானிடைய	76

கி - (1)

செய்யுள்	பக்கம்
கிளித்தன	137

கு - (6)

செய்யுள்	பக்கம்
குமரர்	6
குரவங்	15
குலைவுற	109
குழையுறு	59
குற்றம்	99
குன்றிடை	96

கூ - (1)

செய்யுள்	பக்கம்
கூலத்தா	83

கெ - (1)

செய்யுள்	பக்கம்
கெட்டாய்	114

செய்யுள்	பக்கம்
கே - (3)	
கேட்டனெ	104
கேட்டார்	150
கேட்டு	34
கை - (2)	
கைக்கரி	63
கைத்த	125
கொ - (2)	
கொண்டா	111
கொம்பொத்	17
கோ - (1)	
கோதா	112
ச - (1)	
சந்தமலர்	85
சா - (1)	
சாரவந்த	7
சி - (2)	
சிந்தையி	37
சிறுகாலே	16
சீ - (1)	
சீதங்	135
சு - (1)	
சுவண	9
சூ - (1)	
சூரறுத்தவ	23
செ - (7)	
செஞ்சே	112
செம்பு	66
செய்தனர்	76
செய்தா	87
செவிகளை	110
செவ்வே	15
சென்ற	68
சொ - (4)	
சொல்லுடையா	130
சொல்லெலன்	78
சொற்பொங்	16
சொற்றுங்	16
த - (12)	
தடைக்கரும்	131
தண்ணெனுங்	156
தணிக்குந்	151
தந்தா	129
தம்பிதலை	68
தயரதன்	104
தயிருடை	31
தராவலய	77
தழுவினை	30
தலையவிழ்	148
தறைவா	111
தனியிருந்	45
தா - (4)	
தாதைகூற	33
தாமரை	100
தாமரைக்கண்	102
தாய்தன்னை	12
தி - (4)	
திக்கு	6
திரிசிரா	64
திருவி	128
திறந்தெரி	106

செய்யுள்	பக்கம்
தீ - (1)	
தீதில்வா	39
து - (3)	
துஞ்சுவ	101
துவசமார்	17
துறப்பதே	12
தூ - (1)	
தூங்கலி	103
தெ - (5)	
தெண்டிரை	123
தெண்டிரையுல	134
தெரிவுறு	131
தெவ்வுல	80
தெறுத்து	15
தே - (2)	
தேவரார்த்	68
தேனிடை	107
தொ - (2)	
தொல்லிரு	145
தொளைபடு	145
தோ - (6)	
தோகையு	102
தோகையும்	148
தோமறு	102
தோய்ந்தும்	18
தோளையே	80
தோன்ற	23
ந - (1)	
நடந்தனர்	28
நா - (5)	
நாவிம்பல	143
நாட்செய்த	134
நாணிலெ	120
நாரங்	88
நாழி	18
நி - (9)	
நிருதா	112
நிலையெடுத்து	47
நில்லடை	45
நில்லு	7
நிற்குநெடு	153
நின்செய்கை	153
நின்றவளை	26
நின்று	15
நின்றும்	88
நீ - (2)	
நீயாதிபரம்	12
நீலமா	36
நெ - (1)	
நெட்டி	97
நே - (1)	
நேரிழை	84
ப - (12)	
பஞ்சணை	121
பஞ்சியொளிர்	38
பட்டதன்மை	10
பண்டலங்கு	72
பண்டைய	20
பாக்கவென்	100
பாங்கி	83
பரவலரும்	30
பருஞ்சிறை	122
பல்வகை	138
பனிமின்ற	12
பன்னலா	13

செய்யுள் பா - (4)	பக்கம்
பாகத்தி	81
பாக்கியத்தா	130
பாரிடமே	148
பாழிவன்	113
பி - (5)	
பிரிபவர்	145
பிள்ளைச்சொற்	132
பிள்ளைபோல்	81
பின்னவ	156
பின்னுறவ	129
பு - (7)	
புகல்பு	22
புத்துறவு	78
புயனிற	135
புரந்தரன்	29
புவியினுக்	35
புறங்காண	11
புன்னுனை	110
பூ - (3)	
பூதமத்த	6
பூப்பொதி	102
பூவிலோன்	39
பே - (2)	
பேடிப்போர்	50
பேதாய்	115
பொ - (4)	
பொங்குவெங்	131
பொருவரிய	13
பொறியி	11
பொற்றேர்	143
போ - (3)	
போகின்றே	101
போந்தா	144
போவது	101

செய்யுள் ம - (14)	பக்கம்
மஞ்சொக்கு	79
மடனு	129
மடித்தபில	76
மண்ணணி	54
மண்ணணின்	126
மண்பால்	153
மதகல்	10
மயிலும்	139
மருடருங்	61
மருந்தனை	77
மலைகளு	20
மறக்க	30
மன்மதனை	76
மன்னு	86
மா - (11)	
மாச்சி	118
மாண்டே	129
மாதயா	9
மாதவத்	22
மாந்தா	143
மாயப்பிற	153
மாயமேன்	95
மாரருள	77
மாற்ற	98
மானே	149
மானேயனை	17
மி - (2)	
மிதித்த	96
மின்னி	58
மீ - (2)	
மீட்டினி	138
மீளருஞ்	58
மு - (6)	
முடிநாட்	139
முடிமிடை	74

54486

செய்யுள்	பக்கம்
முத்திருத்தி	5
முத்தே	115
முந்துவான்	9
முன்னமு	96

மூ - (3)

செய்யுள்	பக்கம்
மூலமே	153
மூவகை	145
மூளு	77

மெ - (2)

செய்யுள்	பக்கம்
மெய்யை	13
மெய்வர	9

மொ - (1)

செய்யுள்	பக்கம்
மொய்த்த	8

மோ - (1)

செய்யுள்	பக்கம்
மோகனை	141

வ - (23)

செய்யுள்	பக்கம்
வஞ்சகக்	7
வஞ்சியை	122
வச்சையா	65
வடுக்கண்	132
வண்டுறை	35
வந்துசேனை	57
வந்தமந்	84
வந்தனனெ	114
வந்தனைமு	76
வந்தாய்	124
வந்தானை	49
வந்திலர்	121
வம்பிழை	134
வரம	71
வரிவிற்	142
வலியின்	119
வல்லியம்	22
வல்லைவரம்	18
வளையெயிற்	43
வற்கலையர்	77
வனைகழல்	28
வன்மைத	85
வன்றொழில்	145

வா - (3)

செய்யுள்	பக்கம்
வாழுமறை	27
வாளரி	107
வாளுலா	72

வி - (8)

செய்யுள்	பக்கம்
விடியல்	145
விண்ணவ	109
விண்ணி	71
விண்ணினி	152
விதியது	83
வில்லிய	36
வில்லொக்கு	81
வினவிய	29

வீ - (2)

செய்யுள்	பக்கம்
வீடவ	136
வீரனு	7

வெ - (6)

செய்யுள்	பக்கம்
வெப்பழி	85
வெம்மை	105
வெய்ய	98
வெய்யோர்	87
வெற்பிடை	102
வெற்றி	121

வே - (4)

செய்யுள்	பக்கம்
வேதங்க	11
வேந்தன்	22
வேந்தன்விண்	33
வோற	122

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
28	5	ளென்றான்	னென்றான்
71	4	படைத்திலின்	படைத்தலின்
79	14	காமர்	காமா
161	16	சபம்	சாபம்

SELECT OPINIONS

The Hindu dated 25-4-25 :— Kambaramayanam Abridged (Aranyakandam) published by Messrs. C. Coomarasawmy Naidu & Sons, Price 12 as. This book gives a connected account of the story of Sri Ramachandra relating to his wanderings in the forest of Dandaka in prose, with copious quotations from Kamban's original work. The book is intended to serve the purpose of extra study to students of the secondary forms and college classes **and is written in easy and narrative style.** An annotation of the stanzas quoted in the book is added at the end of the book so that the students may clearly understand the meaning of the stanzas **without any extraneous help.**

M.R.Ry. T. C. Srinivasa Ayyangar, B. A., B. L., Secretary, Tamil Sangam, Madura, writes on 26-1-25— I thank you for kindly sending me a set of your abridged edition of Kambaramayanam (1) Balakandam, (2) Ayodyakandam, (3) Aranyakandam. I read many portions with considerable interest. Kamban's masterpiece should be read and enjoyed by every Tamilian. But its vastness and the absence of a really suggestive and brief standard commentary have stood in the way of students and the average educated men studying the work.

Your abridged edition contains select stanzas, easily understood and noted for their beauty and ideas. The prose narration link the selected stanzas to give continuity to the story. I am sure this work **will supply the real want, and will so stimulate interest** as to lead the readers to go in for a study of Kamban's full work itself.

Your work deserves the *attention and patronage* of the Tamil public, *It should be widely introduced in High Schools and Colleges.*

எம். மாணிக்கவாசகம் பிள்ளை
எழுதிய

இராமாயணம் — தமிழ் வசனம்
சித்திரப் படங்கள் உள்ளது.

1. பால காண்டம்	0	8	0
2. அயோத்தியா காண்டம்	0	10	0
3. ஆரணிய காண்டம்	0	10	0
4. கிஷ்கிந்தா காண்டம்	(அச்சில்)		
5. சுந்தர காண்டம்	0	12	0
6. யுத்த காண்டம்	1	8	0

செய்யூர் - முத்தைய முதலியார், பி. எ., M.L.C.
எழுதிய

இராமாயண சாரம் (முதல் பாகம்) ...	0	12	0
இராமாயண சாரம் (இரண்டாம் பாகம்) ...	0	12	0

கம்பராமாயணம்

பால காண்டம் (சுருக்கம்)... ...	0	10	0
அயோத்தியா காண்டம் ,, ...	0	14	0
ஆரணிய காண்டம் ,, ...	0	12	0

பெரிய புராணம்

சுருக்கம் (முதற் புத்தகம்)	0	14	0

ஸ்ரீமத் பாரத ஸாரம்	1	2	0
ஸ்ரீமத் பாகவத ஸாரம்	1	0	0
ஸ்ரீபால ராமாயணம்	0	8	0
நால்வர் சரித்திரம்	0	10	0
ஷண்முக விஜயம்	0	12	0